www.tamilarangam.net


சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


**வாழ்நிலமும் பாழ்நிலமும்**


ஈழமண்ணில் எம்மினிய முஸ்லிம் இனத்தவர்கள்
வாழுதற்கு வழியில்லை என்றானால்– ஈழமண்ணோர்
வாழ்நிலமாய் விளைந்திடுமோ? வாயோரச் சொல்லுகிறேன்
பாழ்நிலமாய் போயழிந்து போம்!


—ஈழமோகம்

இதழ்–81 செப்.21–ஒக்.04,1995 விலை–7.00









# அரசின் 'சமாதானமும்'
# புலிகளின் 'விடுதலையும்'!

இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப் படையினர் நடாத்திய முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையின் போது, நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலய அருகில் வீசப்பட்ட குண்டுகள் அங்கிருந்த நூற்றுக்கணக்கான மக்களைப் பலிகொண்ட செய்தியை நாடறியும். இத்தாக்குதலின் போது கொல்லப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களுக்காக ஓர் அனுதாபச் செய்தியையேனும் தெரிவிக்கத் தயாரற்ற அரசாங்கம் வீசப்பட்ட குண்டுகள் தேவாலயக் கட்டிடத்தை தகர்க்கவில்லையென நிரூபிப்பதற்கு அரும்பாடுபட்டது. தேவாலயத்தின் முன்புறத்தோற்றத்தைக் காட்டும் படங்களை அவசர அவசரமாக எடுத்து வந்து தனது கட்டுப்பாட்டிலுள்ள ஏரிக்கரைப் பத்திரிகைகளில் பிரசுரித்தது.

ஆனால் தேவாலய வளவிலும் சுற்றியிருந்த வளவுகளிலும் குழுமியிருந்த தமிழ் அகதிகள், கொல்லப்பட்டதையோ அங்கிருந்த பல வீடுகள, தகர்ந்து போனதையோ பற்றி எதுவித அக்கறையும் காட்டவில்லை. அருகிலுள்ள படங்கள் அங்கு நடந்த அனர்த்தங்களைக் காட்டுகின்றன.


யாழ்குடாநாட்டிலிருந்து 1990 இல், அங்கு காலங்காலமாக வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்களை இரவோடிரவாக விரட்டியது விடுதலைப் புலிகள் இயக்கம். எந்தவிதமான நியாயமான காரணங்களுமற்று, ஓர் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையாக நடாத்தப்பட்ட இந்த விரட்டலினால் பாதிக்கப்பட்டு இன்று வரை அகதிகளாக கொழும்பிலும் பிற இடங்களிலும் திக்கற்ற வாழ்க்கையை நடாத்திக்கொண்டிருக்கிறார்கள் யாழ் முஸ்லிமகள். இந்தத் தவறுக்காக முழுத் தமிழ் சமூகமும் தலை குனிந்திருக்கும் வேளையில் மீண்டுமொருமுறை அதேபோன்றதொரு இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையை திருமலையில் செய்துள்ளனர் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர். அன்று தாம் செய்ததற்காக மனம் வருந்துவதாக அறிக்கை விட்ட புலிகளின் தலைமைப்பீடம் இன்று நடைபெற்றிருக்கும் இவ் அடாவடித்தனத்தையிட்டு என்ன சொல்லப் போகின்றது?

இலங்கை அரசாங்கம் போலச் சப்பைக் கட்டு கட்டப்போகிறதா? அல்லது தவறுக்கு மன்னிப்பு கோரி அவர்களைத் தமது பழைய இடத்துக்குச் செல்ல அனுமதிக்கப்போகிறதா?

இலங்கை அரசாங்கத்தின் சமாதானமும் புலிகளின் விடுதலையும் ஒன்றுதான் என்ற சமன்பாட்டை ஏற்றுக்கொள்ள புலிகள் தயாரா?

சரிநிகர் சொல்ல விரும்புவதெல்லாம் இதுதான், சமாதானமும் விடுதலையும் அரசியல் நேர்மையாலும் ஜனநாயக மரபாலும் கட்டியெழுப்பப்படவேண்டியவை என்பதை இருதரப்பாரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அவ்வளவுதான்!.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருமலை: மீன் எழுச்சியின் வீழ்ச்சி!

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் மீன் எழுச்சிக் கிராமமாகப் புனரமைக்கப்பட்ட கப்பற்துறைக் கிராமம் இன்று வரட்சிக் கிராமமாக மாறியுள்ளது. 210 தமிழ்க் குடும்பங்களையும் 39 முஸ்லீம் குடும்பங்களையும் கொண்ட இக்கிராமத்தில் வருமானமின்மை, தொழில் வாய்ப்பின்மை என்பன தலைதூக்கிக் கிராமவாசிகளை வாட்டிக் கொண்டிருக்கின்றன.

1970களின் ஆரம்பத்தில், திருகோணமலை நகரிலிருந்து கொழும்பு செல்லும் பாதையில் 7வது மைல் கல்லில் அமைந்துள்ள இந்தப் பகுதியில் மக்கள் குடியேற ஆரம்பித்தார்கள். 77ம் ஆண்டு தொடக்கம் வருடா வருடம் திருவிழாக்கள் போல் இடம் பெற்ற இனக்கலவரங்களையும் கடந்து 83 இனப்படுகொலையில் நாடு சிக்கித் தவித்த போது இக் கிராமத்திலிருந்து 130 தமிழ்க் குடும்பங்களும் 28 சிங்களக் குடும்பங்களும் 13 முஸ்லீம் குடும்பங்களும் உடைமைகளை இழந்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வெளியேறின.

எனினும் அரச பாதுகாப்பு படைகளின் ஆசீர்வாதத்தோடு வெளியேறிய சிங்களக் குடும்பங்களுடன் மேலும் பல குடும்பங்களுக்கு அறிவித்து சர்தாபுர என்ற சிங்களக் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது. இராணுவம் முகாமை அண்டி, மிகப் பழமை வாய்ந்த வைர ஊற்றுப் பிள்ளையார் ஆலயத்தைச் சுற்றி இக்குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறு சுமார் 40 குடும்பங்கள் பாதுகாப்புடன் அமர்த்தப்பட்டன.

இந்துக்களுக்கு வைர ஊற்றுப் பிள்ளையார் கோவில் சிறப்பு வாய்ந்த தளங்களில் ஒன்றாகும். வட பகுதியில் புகழ்பெற்ற வற்றாப்பழை அம்மன் பொங்கல் அன்று, திருகோணமலை பாலம்மோட்டாறு பத்தினி அம்மன் பொங்கலும் இடம்பெறுகின்றது. திருகோணமலை மாவட்ட மக்கள் எல்லோரும் வந்து குழுமிக் கொண்டாடி மகிழும் சிறப்பு வாய்ந்தது இப்பொங்கல். நகரிலிருந்து 10 மைல் தொலைவிலுள்ள இத்தளத்திற்கு கரகம் ஆடி கும்பம் சகிதம் நகரெங்கும் வெயிலையும் பொருட்படுத்தாது நடந்து கூடிய பக்தர்கள், சிறுவர்கள் ஆகியோர் தங்கி, இளைப்பாறி, பூசை செய்து பயணத்தை தொடரும் இடமாக இந்த வைர ஊற்று அமைந்துள்ளது. இன்று அந்த திருத்தலம் சிங்கள குடியேற்ற வாசிகளால் சூழப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல பாலம்கோட்டாறு பத்தினியம்மன் ஆலயத்திலும் ஒரு சிங்களப் பிள்ளையார் தோன்றியுள்ளார்.

87இல் இந்திய இராணுவ விலகலைத் தொடர்ந்து கப்பற் துறை கிராமம் புதுப் பொலிவு பெற்றது. 327 தமிழ் குடும்பங்களும் 35 முஸ்லீம் குடும்பங்களும் குடியேறின. முஸ்லீம் குடும்பங்களில் பெரும்பாலானோர் மீன்பிடித் தொழிலையும், தமிழ் குடும்பங்கள் விறகு வெட்டுதல், செங்கல் உற்பத்தி மழையை நம்பிய பயிர்ச்செய்கை போன்ற தொழில்களையும் சார்ந்திருந்தன. எனினும் 90இல் இரண்டாவது ஈழப்போரின் போது இக்கிராமம் சிதைவுற்று மக்கள் அகதிகளாக வெறியேறினர்.

தற்போது இன்றைய அரசால் இப்பகுதி மீனெழுச்சிக் கிராமமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதிலும் மக்களில் வாழ்க்கைத் தரம் மோசமாகவே உள்ளது. தொழில் வாய்ப்புக்காக எவ்வித வசதிகளுமற்ற நிலையில் நடத்தப்பட்ட குடியேற்றம் இருப்பிடத் தேவையை மட்டும் தான் நிறைவு செய்வதாக உள்ளது.

தற்போது இக்கிராமத்தில் 210 தமிழ் குடும்பங்களும் 39 முஸ்லீம் குடும்பங்களும் இருக்கின்றன. இவர்களுக்கு 14 அல்லது 10 அடி அளவுள்ள குடிசைகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடிசைக்கும் 7500 /= மதிப்

→15

# மட்டக்களப்பு: அதிரடிப்படை வருகை

வடபகுதி மீதான தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்பாக செய்திகள் வரத் தொடங்கிய நாட்களில் இருந்தே மட்டக்களப்பு அரசபடைகளின் முற்றுமுழுதான முற்றுகைக்குள்ளான இடமாக மாறிவிட்டது. மட்டக்களப்பின் தெற்கே S.T.F.உம் வடக்கே இராணுவமும் கிழக்கே கடற்படையும் மேற்கே ஆகாயப்படையும் நடுவின் பரவலாக ஊடுருவியபடி பொலிஸ்படையும் என ஏகமேனிக்கு முற்றுகையிடப்பட்டுவிட்டது. இதற்கிடையில் சுற்றிவளைப்புக்கள், கைதுகள் என்பனவும் கேட்பாரற்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### சோதனைச் சாவடித் தொல்லை:

இரவு முழுவதும் வேட்டுச்சத்தங்களும் செல் வீச்சுக்களும் என இரவில் கூட நிம்மதியாகத் தூங்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

மட்டக்களப்பில் இருந்த இராணுவ அணிகள் வடக்கு நோக்கி நகர்த்தப்பட்டதை அடுத்து அனைத்து பொலிஸ் காவல் நிலையங்களும் பாதுகாப்பை பலப்படுத்தல் என்ற போர்வையில் செய்யும் அட்டூழியங்களும், அடாவடித்தனங்களும் சொல்லிமாளாது. இப்பொழுது மட்டக்களப்பில் தெற்கு எல்லையில் இருந்து வடக்கை நோக்கி ஒருவர் பிரயாணம் செய்தால் வாழைச்சேனைக்கிடையில் குறைந்தது 20 சோதனைச் சாவடிகளையாவது கடக்க வேண்டியுள்ளது. இது மட்டுமல்லாமல் மட்டக்களப்பு நகரினுள் பிரவேசிக்கும் அனைவரும் கோட்டைமுனைப் பாலத்தில் வைத்து மிக மோசமான முறையில் சோதனை செய்யப்படுகின்றனர். இதில் பெண்களைச் சோதனை செய்யும் இராணுவத்தின் பெண்படையினர் பெண்களிடமே மிக மோசமாக நடந்து கொள்கின்றனர். எந்த வயதினராக இருந்தாலும் கேவலமாகப் பேசுவது, இளம் பெண்களிடம் தேவையற்ற முறையில் கேள்விகள் கேட்பது, அடையாள அட்டையில் உள்ள பெயரை வாசிக்கத் தெரியாமல் தடுமாறுவதும் அதன் காரணமாக அனைவர் மேலும் வசைமாரி பொழிவதும் என இவர்களுடைய நடவடிக்கை ஒருபக்கம் இவர்களுடைய நடவடிக்கையை இரசிக்கும் இராணுவத்தினர் ஒருபக்கம், என பொதுமக்களின் பாடு பெரும்திண்டாட்டமாக உள்ளது.

### எரிபொருள் விற்கும் இராணுவத்தினர்:

இது ஒரு புறம் இருக்க யுத்தத்தைச் சாட்டாக வைத்து பணம் சம்பாதிக்கும் இராணுவத்தினரும் தமது கடமையில் வலு மும்முரமாகவே இருக்கின்றனர். மட்டக்களப்பு நகரின் மையத்தில் இருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் காலையில் இருந்து மாலை வரை வரிசையில் இராணுவ வாகனங்கள் காணப்படும். இவை அனைத்தும் எரிபொருள் நிரப்ப வருபவை அல்ல. வாகனத்தில் இருக்கும் எரிபொருளைக் குறைந்த விலையில் களவாக விற்பதற்கு வருபவையே. இந்நடவடிக்கையில் இராணுவ வாகனச் சாரதிகளுக்குக்கிடையே பரஸ்பர ஒற்றுமை நிலவுகின்றது. இதனால்தான் இன்றுவரை இது மிகவும் வெற்றிகரமாக நடந்து வருகின்றது. இதில் சாரதிகள் மாத்திரம் இல்லாமல் அதிகாரிகள் வரை தொடர்பு இருக்கின்றது.

### விசேட அதிரப்படையின் வருகை:

இதற்கிடையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பு S.T.F.இனரிடம் கையளிக்கப்பட உள்ளதாகவும் அறிய வருகின்றது. இதற்குக் காரணமாக கடந்த காலங்களில் இராணுவத்தினரே அத்துமீறி நடந்ததாகக் கூறப்படுகின்றது. மொத்தத்தில் இராணுவத்தினர் அத்துமீறி நடந்தது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகி விட்டது. ஆனால் இதற்கு பரிகாரமாக S.T.F.ஐ நிறுத்துவது என்பது S.T.F.ஐப் பற்றித் தெரியாதவர்களுக்குச் சொன்னால் பொருத்தமானதாக இருந்திருக்கும். மட்டக்களப்பு மாவட்ட மக்கள் S.T.F.னால் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் என்பது S.T.F.ஐ மட்டக்களப்பிற்குக் கொண்டு வர முடிவு செய்த அரசியல் வாதிகளுக்குத் தெரியாமலிருக்க நியாயமில்லை.

### விசேட அதிரடிப்படை இராணுவம் முரண்பாடு:

1990ஜூன் மாதம் தொடக்கமான இரண்டாவது ஈழ யுத்தத்தில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களைக் காவு கொண்டவர்கள் இந்த S.T.F.இனரே. 1990ல் இவர்கள் தமிழ் கிராமங்களை நோக்கி முன்னேறிய போது இவர்கள் சென்ற வழிகள் எல்லாம் தமிழ் இளைஞர்களின் பிணங்களே கிடந்தன. இந் நிகழ்ச்சிகளை இன்றும் மட்டக்களப்பு மக்களுக்கு கேட்டாலும் நெஞ்சம் நடுங்கும். அடுத்ததாக S.T.F.இனர் பாதுகாப்பைப் பொறுப்பேற்றுக் கொண்டால் பொதுமக்கள் S.T.F., பொலிஸ், இராணுவம் என மூன்று வகையானோருக்கு பதில் சொல்ல வேண்டிய ஏற்படும். ஒவ்வொரு படைப்பிரிவினரும் ஒவ்வொரு வகையான நிர்ப்பந்தத்தை பொதுமக்கள் மீது திணிக்க முனைவர். இயல்பாகவே இராணுவத்தினரின் ஏற்பாடுகளை S.T.F.னர் மதிப்பதில்லை. இது ஆரம்பத்தில் இருந்தே இருந்து வரும் இருபிரிவினருக்குமிடையிலான முரண்பாடு. இதன் காரணத்தினால் பெரும் அவதியை எதிர்நோக்குவது அப்பாவிப் பொதுமக்களே.

எனவே இந்நிலைமைகளினூடாக நோக்கும் போது வடக்கே பாரிய நடவடிக்கை இடம் பெறும் போது கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் இராணுவ நெருக்குதல்களினால் அப்பாவி பொதுமக்கள் பெரும் இன்னல்களைச் சந்திக்கப் போகின்றார்கள் என்பது மட்டும் தெளிவான உண்மை.

சாரங்கன்

# கழலக வீரம் –1

வவுனியா மன்னார் வீதியில் நெளுக்குளத்தின் அருகில் குழுமாட்டுச் சந்தி என அழைக்கப்படும் மரக் காரம்பளைச் சந்தி உள்ளது. இச் சந்தியைச் சூழ உள்ள பிரதேசத்தில் ஏறத்தாழ 150 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இக் குடும்பங்கள் அவ்வப்போது மலையகத்தில் நிகழ்ந்தவன் செயல்களால் இடம் பெயர்ந்த தமிழ்க்குடும்பங்களாகும். இவர்கள் நீண்ட காலமாக சன சமூக நிலைய நூலக வசதிகள் அற்ற நிலையில் இருந்து வருகின்றனர். தினசரிப் பத்திரிகைகளைக்கூட வாசிக்க முடியாத நிலை இருந்து வந்தது. இக்குறை பாட்டை நிவர்த்திக்கும் முகமாக சந்திக்கு அண்மையில் உள்ள காணி ஒன்றைச் சிரமதான மூலம் துப்பரவாக்கிச் சன சமூக நிலையம் ஒன்றை அமைக்க அப்பகுதி மக்கள் முடிவு செய்தனர். சன சமூகநிலையம் ஒன்று அமையுமிடத்து குழுமாட்டுச் சந்திக்கு தினமும் தமது தேவைகளுக்காக வந்து செல்லும் சமயபுரம் பாரதிபுரம் கணேசபுரம்பகுதிகளைச் சேர்ந்த மக்களும் பயனடைவர்.

மக்கள் சனசமூகநிலையம் அமைக்கும் முயற்சியில் ஈடுபடுவதை அறிந்து 05.08 1995 அன்று புளொட் இயக்க உறுப்பினர்கள் அலவாங்கு தாசன் என்பவர் தலைமையில் ஆயுதங்கள் சகிதம் வந்து சனசமூகநிலையம் அமைக்க வேண்டாம் என மிரட்டியுள்ளனர். தம்முடன் கலந்தாலோசிக்காதும் அனுமதி பெறாமலும் 'எதுவும்' செய்ய முடியாதென மிரட்டியுள்ளார்கள். "நாங்கள் சனசமூகநிலையம் அமைப்பதற்கு உங்களது அனுமதியை எதற்காகப் பெற வேண்டும்." என மக்கள் கேள்வியெழுப்பினர். பின்னர் அச்சிறு பிரதேசத்திற்கு புளொட்டால் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட செந்தில் என்பவர் நகர சபையில் தமக்குள்ள செல்வாக்கைப் பயன் படுத்தி மக்கள் துப்பரவு செய்த காணி நகர சபைக்குச் சொந்தமானது என நகர சபையூடாகத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளார்.

மக்கள் அக்காணி நகர சபைக்கு சொந்தமானது அல்ல எனநிரூபித்த போது போலிக் காணிச் சொந்தக்காரர் ஒருவரையும் அழைத்து சென்றுள்ளார் செந்தில்.

மக்கள் மேலும் பிரச்சினைகளை வளர்க்க விரும்பாது அக்காணியை விட்டு அதற்கருகில் உள்ள வேறு ஒரு காணியைச் சொந்தக்காரர்களின் உடன்பாட்டுடன் பெற்று சீமெந்து, செங்கல், தென்னோலை என்பவற்றைப் பாவித்து சனசமூக நிலையமொன்றை அமைத்தனர். மக்களின் இவ்விடாமுயற்சி புளொட் குழுவினருக்கு ஆத்திரமூட்டியது.

06.09.95 அன்று இரவு 2.30 மணி அளவில் மீண்டும் வந்து அலவாங்கு தாசனும் இன்னுமொருவரும் சனசமூக நிலைத்திற்கு தீ வைத்தனர்.

சனசமூகநிலையம் அமைத்தல் என்பது ஒரு சனநாயக உரிமை. அந்த உரிமைக்கு அரசாங்க நிர்வாக கட்டமைப்புக்கள் எதற்குள்ளும் அடங்காத ஆயுதக் குழு ஒன்று தீவைக்க முடியுமென்றால்...? அதை நகர சபை பார்த்துக் கொண்டு இருக்குமென்றால்..? ஜனநாயக விடுதலை மு... மூக்குச்சறித் துடைக்க மட்டுமே பயன் படும்!

# கழலக வீரம் –2

திருமலைப் புகையிரத நிலையம். இளைய வயதினன் ஒருவன் தனது உறவினர்களைப் புகையிரதத்தில் ஏற்றி விடுகிறான். புகையிரதம் புறப்படுகிறது விடைபெறுகிறான் கைகளை ஆட்டியபடி. பின் தன்வீடு நோக்கித்திரும்பி வருகிறான்.

தூரத்தில் வாகனம் (VAN) ஒன்று வருகிறது. வீதியில் வாகனங்கள் வருவது இயல்புதானே. அவன் நடந்து கொண்டிருக்கிறான். அவன் உணர்வதற்குள் அவனருகில் நிற்கும் வாகனம் அவனைப் பலவந்தமாக ஏற்றிச் செல்கிறது. பலமான காடையர்களின் பிடியில்இருந்து அவனால் தப்பமுடியவில்லை.

ஒரு கடத்தல் இது! ஏன்? அவன் என்ன தவறு செய்தான்... கடத்தியவர்கள் யார்..? வாகனம் திருமலை தற்தை செல்வா வீதியில் உள்ள அலுவலகம் ஒன்றின் முன் நிற்கிறது. இப்பொழுது யாவும் அவனுக்கு தெளிவாகிறது... தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் புளொட்டின் அலுவலகம். அவனைக்கடத்தி வந்தவர்கள்.. கழகத்தின் வீர புருஷர்கள். மக்களுக்கு விடுதலை பெற்றுத்தர வந்த தியாகிகள்.

வானை விட்டு அவனை இறக்கியவர்கள் அறை ஒன்றினுள் கொண்டு சென்றனர். தலைக் கீழாக கட்டித் தொங்கவிட்டனர். அவர்களுக்கு வீரம் பொத்துக்கொண்டு வந்தது. தாக்கத் தொடங்கினர். தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கு ஊழியம் செய்யும் தொண்டர்கள். அவனைக் கண்மண்தெரியாமல் தாக்கினர். க.பொ.த. உயர்தரமாணவனான அவனை 'புலி' எனக் கண்டு மிரண்டு தாக்கிப் பின்னர், திருமலை கிளப்பன் பொயின்ற் இராணுவ முகாமில் ஒப்படைத்தனர்.

வியப்பு என்னவெனில் இராணுவம் அம்மாணவனைத் தீர விசாரித்தபின் அவன் விடுதலைப்புலி அல்ல என விடுதலை செய்து விட்டது.

மாணவனை விசாரிக்கத் தெரியாமல் விசர் கொண்டு தாக்கியது ஏன்? வாகனமும் இடுப்பில் துப்பாக்கியும் இருக்கும் பொழுது ஏதாவது புரட்சிகரமானதைச் செய்ய வேண்டும் என்ற ஆவல் வந்து விடுகிறதோ என்னவோ?

இரண்டு மூன்று மாதங்களின் முன்பு மணியம். என்பவரையும் இதே போல் கடத்திச் சென்று தாக்கினர். அவர் அங்கிருந்து தப்பியோடி விட்டார். மணியம் தற்பொழுது திருகோணமலையிலேயே இல்லை. இதிலும் வேடிக்கை என்னவெனில் மணியம் முன்னாள் புளொட் அங்கத்தினர் என்பதாகும்.

வாழ்க கழக வீரர்! வளைக வீரம்!

# முகங்கள்_

பயணங்களிலிருந்து...



"எனக்கு அந்தந்த நாட்டில் என்னென்னமாதிரி ஆட்கள் சீவிக்கினமோ அதை என்ரை படங்கள் மூலம் வெளிக் கொண்டு வர விருப்பம். என்ரை எண்பது வீத மான படங்கள் அப்படியானவை தான். என்ரை படங்களில் மக்கள் வருவின; அவையின்ரை வாழ்க்கையோட சேர்ந்து வருவின; அதில அவர்கள் எப்படி வாழ்கிறார்கள் எண்டு தெரிய வரும்" எனக் கூறும் எஸ்.எப்.ரி.குணா என் ஒர் புகைப்படக் கலைஞர். இலங்கையரான இவர் 1967இல் இருந்து இங்கிலாந்தில் வசித்து வருகிறார். மூன்றாம் உலக நாடுகளின் கிராமங்களையும் மக்களின் வாழ்க்கையையும் தனது கருப்பு வெள்ளைப் புகைப்படங்களில் கலைத்துவமாக வெளிப்படுத்தும் இவரின் புகைப்படக் கண்காட்சி பிரிட்டிஸ் கவுன்சில் மண்டபத்தில் இம்மாதம் 21, 22, 23 ஆகிய தினங்களில் நடைபெற உள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போரும் சமாதானமும்



மக்களை மீட்பதை தமது பணியாக அவை வரித்துக் கொண்டுள்ளன. தமிழ் மக்கள் மீது அவைகாட்ட ஏற்பட்டுள்ள இந்த அக்கறை உணர்வு வெள்ளத்தில் மூழ்கி விட்டதால் அவர்களுக்கு இனப்பிரச்சினையின் அடிப்படைகளே மறந்து போய் விட்டன.

''நாட்டின் இனப்பிரச்சினைக்கு உடனடியாக ஒரு அரசியல் தீர்வு காணப்படாத பட்சத்தில், யுத்தத்தை மேலும் தொடர வேண்டி ஏற்படும். இதற்கு ஆயுதப் படைகள் மேலும் பலப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். அப்படிச் செய்வதானால் அரசாங்கம் (18வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இராணுவப் பயிற்சி அளிப்பதும், ஆகக் குறைந்தது மூன்றாண்டுகளாவது அவர்கள் படையில் கடமையாற்றுவதை கட்டாயமாக்குவதும் அவசியம் என்ற நிலைக்கு போக வேண்டி ஏற்படலாம். இன்று அரசியல் தீர்வை எதிர்த்து யுத்த மூலம் தீர்வை காண விரும்புகின்றவர்கள் இதற்கு தயாராக இருக்க வேண்டும்''

சிங்களப் பத்திரிகையொன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் இவ்வாறு தெரிவித்திருந்தார். அரசியல் தீர்வை நிராகரித்து யுத்தத்தை கோருகின்ற சிங்கள இனவாத மற்றும் பௌத்த பீடங்களைச் சார்ந்தவர்களிற்குப் பதிலடி கொடுப்பதற்காக அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ள போதிலும், அவரது இந்த கருத்து நடைமுறைக்கு வருவதற்கான வேலைகளை அவரது அரசாங்கத்தினரே செய்து வருகின்றார்கள் என்பது இப்போது தெளிவாகி விட்டது. அதிகாரப் பரவலாக்கம், பிராந்திய அமைப்புகள் என்கிற கோட்பாடுகள் தொடர்பாக அரசாங்கத்துள் ஏற்பட்டுள்ள இழுபறியும், அதன் காரணமாக, ஜனாதிபதியும், இத்திட்டத்தை தயாரித்த அவரது சகாக்களான ஜீ.எல்.பீரிஸ், நீலன் திருச்செல்வம் ஆகியோரும், கொஞ்சம் கொஞ்சமாக முன்வைத்த தீர்வுக்கு 'திருத்தங்கள்' கொண்டு வருவதில் இறங்கியுள்ளமையும் இந்த நிலைமையை மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது. பிராந்திய முதலமைச்சருக்கு இந்த ஆலோசனைகளில் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தரவாதத்தை (அதாவது, அவர் தனது பிராந்தியசபையின் பெரும்பான்மை ஆதரவை கொண்டிருக்கும் வரை அதிகாரத்திலிருந்து அவரை ஜனாதிபதியால் அகற்ற முடியாது) கைவிடத் தயார் என்று ஜனாதிபதியே கூறிவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



அரசியல் தீர்வு கைவசம் இருப்பதாக கூறி மாதக்கனக்கில் காலத்தை ஓட்டியது; 'சமாதானத்திற்கான யுத்தத்தை' நடாத்துவதில் இறங்கிய பின்னர் முன்வைத்த தீர்வுக்கான ஆலோசனைகளைக் கூட சரியாக வைக்காமல் அரைகுறையாக நடைமுறைப்படுத்துவதற்காக உழைப்பதற்கு தனது அரசாங்க சகாக்களைக் கூட வென்றெடுக்க முடியாமல் திணறுவது எல்லாவற்றையும் பார்க்கும் போது, புலிகள் அரசியல் தீர்வை ஏற்றுக் கொள்வார்களா இல்லையா என்ற பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினையே அல்ல என்றாகிப் போய் விடுகிறது. தவிரவும், இந்தத் தீர்வு ஆலோசனைகளை வெளியிட்டது கூட வெறும் காலத்தை இழுத்தடிக்கும் நாடகம் தானா என்ற சந்தேகம் மேலும் மேலும் வலுப்பெற்று வருகிறது.

உண்மையில், அரசியல் தீர்வை முன்வைக்க -அதுவும் முதன் முதலில் புலிகள் வைக்க -நாள் பார்த்திருந்த அரசாங்கம், டிசம்பர் மாதத்திலேயே அது தயாராக இருந்ததென்று இன்று கூறுவதை (வழமையான அதனது கப்சாக்களில் ஒன்றாகக் கருதாமல்) உண்மையென்று கொண்டால், அந்த இடைக்காலத்தில், தனது அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் அதை வைத்து அவர்களது ஆமோதிப்பை பெற்றிருக்க வேண்டும்; அதன்பின் அதனை முழு அரசாங்கத்தின் சார்பு ஆலோசனைகளாக அறிவித்திருக்க வேண்டும்; அதைப் புலிகளுக்கு வழங்குவதே சரியென்று கூறிய வாய்ப்பு, அரசாங்கம் சொல்வது போல் இல்லாமல் போனதும், உடனேயே மக்கள் முன்வைத்திருக்க வேண்டும்.

ஆனால், அரசாங்கமோ ஜனாதிபதியோ அவ்வாறு செய்யவில்லை. மாறாக, தீர்வு தயார் என்று கூறிக் கூறி காலத்தை ஓட்டியது; புலிகளுடனான ஒப்பந்தம் உடைந்ததும், தீவிரமாக யுத்தத்தில் இறங்கியது; யுத்தத்தை சிறப்பாக நடாத்துவதற்கு ஏற்றவிதத்தில் அதற்கான ஆயுத தளபாடங்கள் வாங்கல், படைகட்டு ஆட்சேர்ப்பு, யுத்த பிரச்சாரம் என்பவற்றில் தீவிரமாக இறங்கியது. தீர்வு யோசனைகளை அமுலுக்கு கொண்டு வருவதில் உள்ள சிக்கல்களை களைவதில் காட்டிய ஆர்வத்தை விட யுத்தமூலம் புலிகளை நசுக்கிவிட வேண்டும் என்பதில் தீவிரம் காட்டியது.

அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைப்பதன் மூலம் புலிகளை அரசியல் ரீதியாக பலவீனப்படுத்திவிடலாம் என்ற (இனப்பிரச்சினையை புலிப்பிரச்சினையாகப் பார்க்கும் சில தமிழ் அரசியல் பிழைப்பு வாதிகளினதும், புலி எதிர்ப்பு மனநோயாளர்களதும் ஆலோசனைக்களைக் கேட்டு) அதை முன்வைத்த போதும், அதைவிட புலிகளை பலவீனப்படுத்த யுத்தமே சிறந்த வழி என்பதே அரசாங்கத்தின், குறிப்பாக அதன் பாதுகாப்புப் பிரிவின் உறுதியான நம்பிக்கையாக இருந்தது. தனிப்பட்ட ஜனாதிபதியின் நல்லியல்புகள் பற்றிக் கூறுபவர்களை நாம் நம்பினால், அவர் துரதிர்ஷ்டவசமாக, அரசாங்கத்தின் தலைவராக அல்லாமல் அதன் பேச்சாளராகப் போய்விட்டார் என்று நாம் வெறுமனே பரிதாபப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் நிகழ்வுகள் வேகமாக யுத்தத்தை உக்கிரமாக நடாத்துவதை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கின்றன.

ஒப்பிரேசன் லீப்பில் தொடங்கி, இன்று வரை நடந்து கொண்டிருக்கும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் இடையில் நடைபெற்ற இராணுவரீதியான பின்னடைவுகளை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் - தீவிரமான யுத்தத்திற்கான வெறியூட்டலும், தமிழ் மக்கள் மீதான காழ்ப்புணர்வு வளர்க்கப்படுவதுமே நடந்து வருகின்றன என்று சொல்லலாம்.

இலங்கை வானொலியும், லேக் ஹவுஸ் பத்திரிகைகளும் சமாதான தீர்வு பற்றி தொண்டை நோகக் கத்துகின்ற போதும், அவை யதார்த்த நிலையை புரிந்து கொள்ள தயாரில்லாதவையாகவே உள்ளன. புலிகளிடமிருந்து தமிழ்

நவாலி தாக்குதலில் தேவாலய கட்டடம் உடையவில்லை என்பதை நிறுவுவதில் அவர்கள் காட்டிய அக்கறையில் ஒரு துளியையேனும் அத்தாக்குதலின் போது கொல்லப்பட்ட உயிர்களுக்கோ பாதிக்கப்பட்ட மக்களுக்கோ அனுதாபம் செலுத்துவதில் செலவழிக்க அவற்றுக்கு முடியவில்லை. உக்ரேனிலிருந்து கொண்டுவரப்பட்ட அன்ரனோவ் -32 ரக விமானமொன்று கடலில் வீழ்ந்தது கூட, அதன் ஓட்டியின் பெயர் தமிழ்ப் பெயராக இருப்பதால் (பாக்கியநாதன்) அவரும் ஒரு புலியாக இருக்குமோ என்ற சந்தேகம் வலுக்கும் அளவுக்கு இருக்கிறது நாட்டு நிலை என்ற யதார்த்தத்தை இந்த தொடர்பு சாதனங்கள் புரிந்து கொண்டதாக தெரியவில்லை.

யுத்தத்தை தொடர்ந்து நடாத்துவது, நாட்டில் சமாதானத்தை கொண்டுவருவதற்கு எதிராக இருக்கும் புலிகளை பலவீனப்படுத்தலே என்று திரும்பத் திரும்ப கூறும் இவை, சமாதானத்துக்கு எதிரான தென்னிலங்கை சக்திகள் மீது ஏன் யுத்தத்தை கட்டவிழ்த்துவிடவில்லை என்பதை எப்படி விளங்கிக் கொள்வது என்று புரியவில்லை.

செறிவாக மக்கள் வாழ்கின்ற யாழ்குடாநாடு போன்ற ஒரு பிரதேசத்தில், புலிகளின் மீது இலக்கு தவறாமல் தாக்குதல் நடாத்தி, அப்பாவித் தமிழ் மக்கள் பாதிக்கப்படும் நிலையை தவிர்த்து யுத்தத்தில் வெற்றி கொள்ள முடியும் என்று கூறுவதை வெறும் மௌடீகத்தினால் கூறப்படும் ஒன்று என்று எப்படிக் கொள்ள முடியும்? சுய புத்தியுள்ள எவரும், இது யுத்தத்தை நடாத்த கட்டும் சப்பைக் கட்டுத்தான் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் அமைப்பின் அங்கத்தவராக இருந்தாலோ அல்லது, வயிற்றுப் பிழைப்புக்காக ஜனாதிபதியின் அலரி மாளிகைத் தாவரத்தில் ஒதுங்கியிருந்தாலோ ஒழிய உங்களால் ஒருபோதும் இவ்வாறு கூற முடியாது. அண்மையில் வெளியிட்ட பத்திரிகை அறிக்கை ஒன்றில் இந்த மனித உரிமைக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் இப்படிக் கூறுகிறார்கள்: ''அரசாங்கம் இன்னொரு தாக்குதலுக்கு போவது அவசியம் என்று கருதினால், யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் எதிர் பார்க்கிறார்கள் என்பதில் தெளிவாகவும், அவர்களது நலன்களைப் பாதுகாப்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது என்பதை அவர்கள் நம்பச் செய்யவும் வேண்டும். இது அதன் கடமையாகும். சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தை இதற்காக முழுமையாக அரசாங்கம் பயன்படுத்த வேண்டும்''

எப்படியோ, அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எல்லாம், சமாதானத்திற்கான வழிமுறையாக அரசியல் தீர்வை விட யுத்தத்திலேயே அதிக நம்பிக்கை வைத்துள்ளதாகவே இன்றைய போக்குகள் காட்டுகின்றன. இதனால் தான் வடக்கிலே கொல்லப்படுபவர்களையிட்டு மௌனமாக இருக்கவும் அல்லது சந்தோசப்படவும் யுத்தத்திலே கொல்லப்படுகின்ற தெற்கைச் சேர்ந்தவர்களுக்காக இரத்தக் கண்ணீர்விடவும் அதற்கு முடிகிறது!

ஆக, இதுதான் நிலைமையென்றால், ஜனாதிபதி அவர்கள் கூறுவது போல கட்டாய இராணுவ சேவை அனைவருக்கும் வழங்கப்படுவது தவிர்க்கமுடியாததுதான்! வெறும் சிங்கள இனவாதிகளையும் பௌத்த பீடாதிபதிகளையும் மிரட்ட சொல்லப்பட்ட வார்த்தையல்ல இது. அரசாங்கத்தின் உள்நோக்கை நடைமுறைப்படுத்த அவசியமான வழியும் இதுதான்!

இந்தப் போக்கில் போனால், சமாதானத்தை விரும்பியவர் என்று அடிக்கடி புகழும் தனது கணவர் குமாரணதுங்கவினதும் தனதும் மகனான விமுக்தி கூட துப்பாக்கியுடன் யாழ்ப்பாணம் போக வேண்டிய நிலைமைதான் ஏற்படும் என்பதில் சந்தேகமேஇல்லை. சமாதானத்துக்காக யுத்தம் என்று ஆகிவிட்ட பின், யுத்தம் புனிதம் பெற்று விடுகிறது. அதன்பின், அந்த யுத்தத்திற்கு பலியாபவர்கள் எல்லாம் சமாதான விரோதிகள் என்பதில் என்ன சந்தேகம்!

இந்த விடயத்தில் சந்தேகம் இல்லாவிட்டாலும், இன்னொரு சந்தேகம் எழத்தான் செய்கிறது. அதுதான், இந்த 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் தமிழர்களும் அடங்குவார்களா என்பது.

தமிழர்கட்கு இராணுவப்பயிற்சி வழங்க அரசாங்கம் விரும்பினாலும், இராணுவம் தயாராக இராது என்பது தெளிவு.

அப்படியானால், 18வயதுக்கு மேற்பட்ட தமிழர்கள் எல்லாம் புலிகளிடம் கட்டாய இராணுவப் பயிற்சிக்கு போக வேண்டும் என்பது தானே தர்க்கம்? தர்க்கத்தின் முடிவு இந்த இடத்தில் வந்ததும், எம்மால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

ஆம், 18வயது சிறுவர்களை கூட கட்டாய ராணுவத்தில் சேர்க்கிறார்கள் புலிகள் என்று ஒப்பாரி வைக்கிற மனித உரிமைகட்கான பல்கலைக்கழக ஆசிரியர்களை நினைக்கத்தான் இந்த சிரிப்பு வருகிறது.

ஏனென்றால், யுத்தம் நீடிக்கப் போகும் கால எல்லை பற்றி அநுருத்த அவர்களைப் போல 2 மாதம் 1 மாதம் என்று ஜோசியம் கூறுவதை நம்ப மறுக்கும் புத்தியுள்ள எவருக்கும், புலிகள் 12 வயது சிறுவர்களை கட்டாயமாக தம்மோடு சேர்க்க வேண்டி வந்துள்ள இன்றைய நிலைக்கு இலங்கை அரசாங்கமும் ஒரு 10 வருடத்துக்குள் வந்தே ஆக வேண்டியிருக்கும் என்பது தெளிவாகத் தெரியும்.

அப்போது இந்த 'சமாதான யுத்தப்' பிரச்சாரிகள் என்ன சொல்லப் போகிறார்களோ?

போகட்டும்,

ஒரு ஆலோசனையை மட்டும் அரசாங்கத்துக்குச் சொல்லலாம். கட்டாய இராணுவ சேவை ஆரம்பிக்கும் போதே, ஒரு குழந்தைப் பண்ணையையும் உருவாக்குவது நல்லது. கோழிப்பண்ணை, மாட்டுப்பண்ணை போல.

யுத்தத்துக்கு உரிய வயதை ஒரு 10-12 வயதில் அவர்கள் பெற்று விடுவார்கள்! தொடர்ந்து இளம்சந்ததி கொல்லப்படுகையில் அதை சமாளிக்க பண்ணை வளர்ப்பைத் தவிர சிறந்த மாற்றுவழி இல்லை.

பிறகென்ன, 'யுத்தம்.......யுத்தம்....யுத்தம்'

அது முடிந்தபின் 'சமாதானம் சமாதானம் சமாதானம்' என்ற அரசாங்கத்தின் கொள்கைக் வெற்றிக்கொடி நாட்டப்பட்டு விடும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசப்பற்றுமிக்க வியாபாரம்

## දිවයින The Island



உபாலி நிறுவனத்தின் பத்திரிகைகளான 'திவயின, ஐலன்ட்' என்றதும் ஒருவருக்கு முதலில் ஞாபகம் வருவது விஜேசோமாவின் கேலிச் சித்திரங்கள் தான். அவருடைய பேனாவிலிருந்து விழும் கோடுகள் இலாவகமானவை; நேர்த்தியானவை. ஆனால் நேர் கொண்ட பார்வையைத் தருவன அல்ல. பக்கம் சாராத தன்மையன அல்ல. அவருடைய கேலிச்சித்திரங்கள் பக்கம் சாராத பத்திரிகையாளனின் வெளிப்பாடுகளாக இருப்பதற்குப் பதில் சிங்கள பௌத்த அரசையும் அதன் கருத்தியலையுமே வெளிப்பாடாகக் கொண்டிருக்கின்றன.

தமிழர்கள் எல்லோருமே புலிகள் / புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்று கருதுகிற சாதாரண சிங்கள மனோபாவத்துக்கும், இதே காரணத்துக்காகத் தமிழர்களைக் கைது செய்து இன்னல்படுத்தும் அரசுக்கும், விஜேசோமாவின் கேலிச்சித்திரங்களுக்கும் அதனை வெளியிடும் ஐலன்ட், திவயின பத்திரிகைகளுக்கும் இடையில் இலங்கையின் ஏனைய சிறுபான்மை இனங்கள் தொடர்பான மதிப்பீட்டில் பெருமளவு வேறுபாடேதும் இல்லை. தமிழ் பொது மகன் / தமிழ் அரசியல்வாதி ஆகியோரின் குறியீடாக விஜேசோமாவுக்குத் தெரிவது பொட்டு வைத்த ஒரு புலி தான். ஏற்கனவே வெளியான அவரது கேலிச்சித்திரங்கள் கொண்ட புத்தகத்தில் வன்முறை, தீவிரவாதம், பயங்கரவாதம் ஆகியவற்றின் குறியீடாக அவர் வரைந்திருப்பது பொட்டு வைத்த புலியொன்றின் தலையைத் தான். ஆனால் அரச பயங்கரவாதம் பற்றியோ, ஜே.வி.பி. வன்முறை பற்றியோ அவரது கேலிச்சித்திரங்கள் பேசியது கிடையாது. இப்போது விசேட அதிரடிப்படையால் மர்மமான முறையில் கடத்தப்பட்டு கழுத்து நெரிக்கப்பட்டு ஆற்றில் வீசப்பட்ட தமிழர்களைப் பற்றி அவருடைய பேனா ஒரு கோடும் கீறாது. அவ்வளவு 'தேசப்பற்று' அவருக்கு!

இங்கு பிரச்சினை விஜேசோமா பற்றியதல்ல. 'ஐலன்ட்', திவயின பற்றியது. விஜேசோமாவையும் விட தேசப்பற்று விஞ்சிய அதனை வெளியிடும் உபாலி நிறுவனம் பற்றியது. இந்நிறுவனத்தின் தலைவர் சீவலி ரத்வத்தை. இதன் பணிப்பாளர்களில் ஒருவர் இவரது மகளான லக்மினி விஜேவர்த்தனா. இவ்விருவரும் 1992 ஒக்.21 முதல் 1992 நவ. 26 வரையான 35 நாட்களுள் இலங்கை அரசாங்கத்துக்கு 16 தொகுதி ஆயுதங்களை இறக்குமதி செய்து வழங்கியுள்ளனர். இதன் மொத்தப் பெறுமதி 39 லட்சத்து 73 ஆயிரத்து 920 அமெரிக்க டொலர்கள்.

ஒருபுறத்தில் அரசை விமர்சிப்பதாகக் காட்டிக் கொண்டாலும் மறுபுறத்தில் தமது வியாபாரத்தில் குறியாக இருக்கிறார்கள் இவர்கள். (இவ்விடத்தில் ஸ்ரீமான் பொது ஜனத்தை யுத்தச் செலவு, சுமையாக நசுக்குவதாகவும்; அவரை விழிபிதுங்க நாக்குத் தொங்க, நசுக்கிவருவதாகவும் விஜேசோமாவின் கேலிச்சித்திரமொன்று ஞாபகம் வருகிறதல்லவா?)

சரி, இவ்வியாபாரத்தை இவர்கள் எப்படிச் செய்தார்கள்? உபாலி நிறுவனத்தின் பெயரிலா? அது தான் இல்லை. உபாலி நிறுவனத்துக்கு துணையான இன்னொரு நிறுவனத்தை உருவாக்கினார்கள். அதன் பெயர் ஏசியன் இன்ரநஷனல் பிரைவேட் லிமிடெட் (Asian International (Pvt) Ltd. இந்நிறுவனத்தின் ஐந்து பேர் கொண்ட பணிப்பாளர் சபையில் டொக்டர் சீவலி ரத்வத்தையும், லக்மினி விஜேவர்த்தனாவுமே பிரதானமானவர்கள். இந்நிறுவனம் இலங்கை கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதியப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் பணிப்பாளரான ரத்வத்தை ஆயுதக் கொள்வனவு - விற்பனவு தொடர்பாக இராணுவ, கடற்படை தலைமையகங்களுடன் கடிதத் தொடர்புகளை மேற்கொண்டிருந்தார்.

ஆயுதக் கொள்வனவு தொடர்பாக இங்கிலாந்திலுள்ள L.D.A., Security Eye, சிங்கப்பூரிலுள்ள Fabric National Dila Industries Belbic இஸ்ரேலிலுள்ள Pracon ஆகிய நான்கு நிறுவனங்களதும், பிரதிநிதியாக உபாலி பத்திரிகை உரிமையாளர்களால் நடாத்தப்படுகிற ஏசியன் இன்ரநஷனல் பிரைவேட் லிமிடெட் விளங்குகிறது. மேற்குறித்த நான்கு நிறுவனங்களும் ஆயுத விற்பனையிலீடுபட்டுள்ள வெளிநாட்டு நிறுவனங்களாகும். இஸ்ரேலிலுள்ள Pracon நிறுவனம் தான் ஏசியன் இன்ரநஷனலின் பிரதான ஆயுத வழங்குனர். மற்றையவை துணை நிறுவனங்களே.

| திகதி | ஆயுதவகை | தயாரிக்கப்பட் நாடு | வாங்கப்பட்ட தொகை | ஒன்றின் விலை U$ | மொ.பெறுமதி U$ | மொ.பெறுமதி இலங்கை ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 92.ஒக். 21 | ஸ்னைப்பர் ரைபிள்ஸ் | நமீபியா | 20 NOS | 3731 | 74620 | 3731000 |
| நவ. 10 | 7.62X51பிபீ பெல்டட் பவல் அமோ | தெ. ஆபிரிக்கா | 800.000 RDS | 1000255க்கு | 204000 | 10,200000 |
| நவ. 10 | கிரனைட் 40mm HE | தெ. ஆபிரிக்கா | 3000 | 2.50 | 96000 | 48,00000 |
| நவ. 10 | 9X9 | தெ. ஆபிரிக்கா | 200000 RDS | 1000.145க்கு | 29000 | 14500000 |
| நவ. 10 | குண்டு AP பிளண்ட் | ஐரோப்பியநாடுகள் | 30,000 | 17.50 | 525000 | 26250000 |
| நவ. 10 | ஸ்மோக்படகு B310 | U.K. | 1000 | 10.50 | 10.500 | 525000 |
| நவ. 10 | ஸ்மோக்ஜெனரேட்ஸ் E 301 | U.K. | 1000 | 5.50 | 5500 | 275000 |
| நவ. 12 | 40 mm மல்டிசொட் கிரனைட் லோன்ச்சர் | போர்த்துக்கல் | 50 | 26.200 | 1.310.000 | 65500000 |
| நவ. 12 | 40.mm கிரனைட் லோன்ச்சர் | ஸ்பெயின் | 80 | 840 | 672000 | 3360000 |
| நவ. 12 | 60.mmகொமாண்டே மோட்டர் | போர்த்துக்கல் | 35 | 1360 | 47600 | 2380000 |
| நவ. 16 | 60.mm மோட்டார் குண்டு SMK | போர்த்துக்கல் | 1000 | 16.50 | 16500 | 825000 |
| நவ. 16 | 7.62X39 mm பிளேன்க்ஸ் | போர்த்துக்கல் | 1.000.000 | 100,21வீதம் | 121,000 | 6050000 |
| நவ. 16 | 7.62X54 mm போல் பேல்டட் | கிரீஸ் | 500.000 | 1000.286வீதம் | 143000 | 7150000 |
| நவ. 16 | 7.62 X 51mm போல் | கிரீஸ் | 1000.000 | 1000.154வீதம் | 154000 | 7700000 |
| நவ. 26 | கிரனைட் ரைபிள்ஸ் | தெ. ஆபிரிக்கா | 15.000 | 36.95 | 554.250 | 27712500 |
| நவ. 26 | கிரனைட் ரைபிள்ஸ் | தெ. ஆபிரிக்கா | 15.000 | 41.05 | 615.750 | 30787500 |
| | | | | மொத்தம் | U$ 3973920 | ரூ.198696000 |

ஏசியன் இன்ரநஷனல் நிறுவனத்துக்குத் தொடர்புடைய இங்கிலாந்திலுள்ள L.D.A. என்ற நிறுவனம் மூலம் தான் ரத்வத்தை ஏறத்தாழ 40 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங்களை வாங்கி இலங்கை இராணுவத்துக்கு விற்பனை செய்துள்ளார்.

இராணுவத்துக்கு விற்பனை செய்யப்பட்ட 16 தொகுதி ஆயுதங்களுள் ஸ்னைப்பர் ரைபிள்ஸ், கிரனைட் ரைபிள்ஸ், கிரனைட் லோஞ்சர், கிரனைட் குண்டுகள், மோட்டார் குண்டுகள் என்பனவும் இன்னும் பலவும் அடங்கும்.

வழமையாக ஆயுத பேரத்தில் ஈடுபடும் ஒரு நிறுவனத்துக்கு 5% இலிருந்து 50% வரை கொமிஷன் கிடைப்பதுண்டு. ஆக, ஏறத்தாழ 19 கோடி இலங்கை ரூபா பெறுமதியான இந்தப் பேரத்தில் 5% கொமிஷன் கிடைத்திருந்தால் 90 லட்சம் ரூபாவைப் பெற்றிருப்பார் ரத்வத்தை. கொமிஷன் 10%மானால் 190 லட்சம் கிடைத்திருக்கும். அதே 25% மானால் 490 லட்சம் கிடைத்திருக்கும். 50% மானால்....?

''உபாலி நிறுவனம் தனது வெளியீடுகளான 'ஐலன்ட், திவயின' மூலம் இனவாதம் எனும் பேயைக் கிளப்புகிறது. பத்து வருடங்களுக்கு மேலாக நடைபெறும் யுத்தத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சிக்குத் தள்ளப்பட்டு விட்டது. இந்நிலையிலும் அவர்கள் நாட்டைப் பயங்கரமான யுத்தத்தை நோக்கியே தள்ளுகிறார்கள். திவயின இப்படி நடந்து கொள்வது சிங்களவரின் மேல் உள்ள மாசற்ற அன்பினால் அல்ல. அவ்வியாபாரத்தின் மூலகர்த்தாவான சீவலி ரத்வத்தை ஓர் யுத்த வியாபாரியாக இருப்பதாலும், யுத்தம் அவர்களுக்கு கோடிக்கணக்கில் உழைத்துத் தரும் ஓர் வழியாக இருப்பதாலும் ஆகும்,'' என இவ் ஆயுத வியாபாரத்தை அம்பலப்படுத்திய 'ராவய' பத்திரிகை கூறுகிறது.

இவ்விடயம் ராவயவில் அம்பலமாகியதும் உபாலி பத்திரிகை நிறுவனத்தின் உரிமையாளரான சீவலி ரத்வத்தை இவ்விடயங்கள் அனைத்தும் பொய் என்னும், அறிக்கை ஒன்றை திவயினவிலும், ஐலன்ட் இலும் வெளியிட்டார். லங்காதீபவிலும் அவ்வறிக்கை வெளியாயிற்று. தவிர ராவய ஆசிரியர் விக்டர் ஐவனைப் பற்றி, இவர் ஜே.வி.பியில் இருந்த போது நடைபெற்ற சம்பவங்களைக் குறிப்பிட்டு கட்டுரை ஒன்றையும் இப்பத்திரிகைகள் வெளியிட்டன.

ஏசியன் இன்ரநஷனல் நிறுவனம் உபாலி நிறுவனத்தின் ஒரு துணை நிறுவனம் அல்ல என்றும், உபாலி நிறுவனமோ, அதனோடு சம்பந்தமுடைய பணிப்பாளர்களோ ஆயுத விற்பனையுடன் சம்பந்தப்படவில்லை என்றும் அதற்கான பணம் பெறப்படவில்லை என்றும் டொக்டர் சீவலி ரத்வத்தை தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

பதிலாக ஏசியன் இன்ரநஷனல் தலைவரான சீவலி ரத்வத்தையால் ஒப்பமிடப்பட்டு கடற்படை கமாண்டர் கே.ஆர். எல்.பெரேராவுக்கு 1987.07.13 அன்று எழுதிய கடிதத்தின் முதல் அத்தியாயத்தை சுட்டிக்காட்டிய ராவய சீவலி ரத்வத்தை மூலம் ஆயுத விற்பனைக்கென எழுதப்பட்ட கடிதத் தொடர்புகள் இரண்டு நிறுவனங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய நிறுவனங்கள் என தெளிவுபடுத்துகின்றன. உண்மை இப்படியிருக்க ஏசியன் இன்ரநஷனல் நிறுவனத்துக்கும், உபாலி நிறுவனத்துக்கும் உள்ள தொடர்பை வாசகர்களுக்கு ஒரு விதமாகவும், கடற்படையினருக்கு இன்னொரு விதமாகவும் தெரிவிப்பது ஏன் என்று கேள்வியெழும்பியுள்ளது.

'இங்கு பிரசுரிக்கப்பட்ட கடிதம் ரத்வத்தை அவர்களால் எழுதப்படாதது என்பதை திவயின /ஐலன்ட் போன்ற பத்திரிகைகள் நிரூபித்துக் காட்டட்டும். பந்தயம் பிடிக்க எம்மிடம் பணமில்லை. இருந்தாலும் உபாலி நிறுவனத்தின் நூறு கோடிக்காக ராவயவைப் பந்தயம் வைக்க நாம் தயார். அதன்படி நாம் கூறுவது பொய் என்றால் அதனை நிரூபித்து உங்களுக்கு வெறும் தலையிடியாக இருக்கும் ராவயவை உபாலி நிறுவனத்தோடு இணைக்கும்படி நாம் சவால் விடுகிறோம்' என்று திவயின /ஐலன்ட் பத்திரிகைகளுக்கு சவாலும் விடுத்துள்ளது ராவய.

-ரட்ணா

---

**Asian International (Pvt) Ltd**
89 Hyde Park Corner, Colombo 2
Head Office: Sri Lanka. Tlx: 21198 Upalico CE. Tel: 94120 29954 546852
European Office: 49 Spencer Road, Osterley, Middlesex, England TW7 4BN Tel: 01-568 3868

24th July 1987

The Director (Logistics)
Sri Lanka Army
Army Headquarters
COLOMBO

Dear Sir,

REGISTRATION OF ADDITIONAL PRINCIPALS AS SUPPLIERS

We enclose herewith for your easy reference your letter dated 2nd March 1987 registering our Firm as a Supplier. It is noted that your records in this connection include, Procon Limited, Israel, as our only principal and supplier.

We now thank you to kindly register the following Firms as our additional Principals and Suppliers for the product range listed below:

1. NAME OF FIRM: Security Eye International Ltd
   ADDRESS : No 17/19 Stratford Place, London WIN 9AF, England
   TELEPHONE : 01 493 8590
   TELEX NO : 291429
   FAX NO : 01 493 8280
2. NAME OF FIRM: FABRIQUE NATIONALE de L'Industrie Belgique
   ADDRESS : Singapore Representative Office, No 9 Battery Road, 11-05/07, Straits Trade Building, Singapore 0104
   TELEPHONE : 5332442
   TELEX NO : CAVEAT RS 20619
   FAX NO : 5 32 5658

DESCRIPTION OF PRODUCT RANGE

1. Body Armour
2. Bomb Disposal Equipment
3. Anti Riot Equipment
4. Night Vision Equipment
5. Laser Finders and Optical Equipment
6. Communications Equipment
7. Pyrotechnics
8. Transport Equipment
9. Fire Fighting Equipment
10. Fire Fighting Vehicles
11. Surveillance Equipment
12. Ammunition, Mortars
13. Emergency Compact Military Food Rations
14. Combat Food Rations

We are enclosing letters of accreditation from the two Firms referred to above.

We look forward to your early confirmation of their registration which would enable us to service your requirements with a greater degree of efficiency.

Thanking you in anticipation of your kind assistance.

Yours faithfully,
ASIAN INTERNATIONAL (PVT) LIMITED

Dr Sivali H Ratwatte
CHAIRMAN

c c: The Hon Minister of National Security
c c: The Secretary, Ministry of Defence

Directors:
Dr. Sivali H. Ratwatte (Chairman), Mrs. Lakmani R. Wijewardene, Mr. Gerald Hidelaratchi B. A. Cey, FISMM, MCIM, FBIM (Managing Director) Mr. Nalatha Dayawansa, Mr. A. Nalin Wijekoon BSc Eng, M. Sc Eng, MIEE, MIMechE, Mr. Ranjit Hewavitarne BSc (Eng), MSc (Eng), C Eng MIMechE, MIGasE (Resident Overseas)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எம்முடைய தாயகமும் வடக்கே!

## முல்லைத்தீவு மாவட்டம்

இம்மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் முஸ்லிம்கள் 5% ஆகக் காணப்படுகின்றனர். ஆனால் முஸ்லிம்களின் செறிவு இம்மாவட்டத்தில் சில பிரதே சங்களில் கூடுதலாகக் காணப் படுகின்றது. முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்களில் 90% ற்கு அதிகமானவர்கள் இம்மாவட்டத்தில் கரையோரப்பற்று உதவி அரசாங்க நிர்வாகப் பிரிவின் இரண்டு வலயங்களில் செறிந்து காணப்படுகின்றனர். அதில் முத லாவது வலயம் முல்லைத்தீவு நகருக்குக் கிழக்காக உள்ள ஹிஜ்ராபுரம்; நீராவிப்பிட்டி; தண் ணீரூற்று ஆகிய புவியியல் ரீதி யாகத் தொடர்ச்சியான முஸ்லிம் கிராமங்களைக் குறிக்கின்றது. (படம் 1) இம்மூன்று கிராமங்களி லும் முல்லைத்தீவு மாவட்டத்தின் 75% மான முஸ்லிம்கள் வாழ்கின் றார்கள். இப்பகுதி 25 சதுரமைல் பரப்பளவைக் கொண்டதாகும். இப்பிரதான முஸ்லிம் செறிவு கடல் வளத்தினையும்; நிலவளத் தினையும் கொண்டதாகக் காணப் படுகின்றது. இப்பிரதேசத்தில் காணப்படும் முஸ்லிம் கிராமங்களும்; அதன் அயலில் காணப் படும் பொருளாதார வளங்களும் இணைந்த வகையில் முல்லைத்தீவில் முஸ்லிம்களை பெரும் பான்மையாக கொண்ட ஒரு நிர்வாகப் பிரதேசம் உருவாக் கப்பட வேண்டும். இவ்வாறு உரு வாக்கப்படக்கூடிய பிரிவு ஏறக் குறைய 3 சதுர மைல்களைக் கொண்டிருக்கும். (படம் 3;4)

மற்றுமொரு முஸ்லிம் செறிவு முல்லைத்தீவு நகரத்தின் தெற்குப் பகுதியில் இருந்து ஏறக்குறைய நான்கு மைல்கள் கரையோரமாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தினுள் கல்விப்பாடு; நாலாம் கட்டை; உடுப்புக்குளம் ஆகிய முஸ்லிம் குடியிருப்புக்கள் உள்ள டக்கப்படக்கூடியதாகக் காணப் படுகின்றன. இது 15 சதுரமைல் பரப்பைக் கொண்டதாகும். இப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டும் முஸ்லிம்களுக்கென ஒரு நிர்வாகப் பிரதேசம் உரு வாக்க முடியும். (படம் 4) அவ் வாறு உருவாக்கக்கூடிய இப் பிரதேசம் தென்னை; சிறுபயிர் ஆகிய நிலவளத்தையும்; அதே நேரத்தில் கிழக்காக கடல் வளத் தையும் கொண்ட பகுதியாக இருக்கும்.

மேற்குறித்த இரண்டு முஸ்லிம் செறிவுகளுக்கும் வெளியே முறிப்பு; முத்தவராயன் கட்டு ஆகிய முஸ்லிம் விவசாயக் குடி யேற்றங்கள் காணப்படுகின்ற மையும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் (படம் 1).

மேற்குறித்த விவசாயக் குடியிருப்புக்கள் ஏலவே குறிப் பிட்ட முஸ்லிம் செறிவுகளில் ஏற் பட்ட நிலமின்மைப் பிரச்சினை யைத் தீர்ப்பதற்காக ஆரம்பிக் கப்பட்டன. ஆகவே எதிர்காலத் திலும் பெருகும் சனத்தொகைக்கு ஏற்ற பொருளாதார மாற்று வழிகளை இம்மா வட்டத்திற்குள் அடையாளம் காணக்கூடியதாகவும்; அச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம் சிறுபான்மையினரும் மாவட்ட நில; கடல்வளத்தினைப் பெறும் பங்காளிகளாக இருக்கக்கூடியதான ஒரு அதிகாரப் பரவலாக்கல் முறையை முல்லைத்தீவு முஸ் லிம் சிறுபான்மையினர் வேண்டி நிற்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## கிளிநொச்சி மாவட்டம்

இம்மாவட்டம் மிக அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்டது. இம்மாவட்டத்தில் பூநகரிப் பகுதி யிலுள்ள நாச்சிக்குடாவிலும்; கிளி நொச்சி நகரத்திலும் முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். இம்மாவட்டத்தின் பூநகரியை அண்மித்ததாக. முஸ்லிம் புனித ஸ்தலம் ஒன்று காணப்படுகின்றது என்பது குறிப் பிடத்தக்கது. (படம்1)

## யாழ்ப்பாண மாவட்டம்.

யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் பரவலாக 20ற்கும் மேற்பட்ட இடங்களில் முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். ஆயினும் யாழ்ப்பாண நகரில் முஸ்லிம்களின் செறிவு மிக அதிகம். (80 ற்கும் அதிகமா னவர்கள்) அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மாநகர சபையில் அமைந்திருக்கும் சோனகத்தெரு; புதிய சோனகத்தெரு ஆகிய வைகளே யாழ்ப்பாண முஸ்லிம்களின் மிகப்பிரதான குடியிருப்புக்களாகும். மாநகர சபை எல் லைக்குள் 10% மாகக் காணப் படும் முஸ்லிம்கள் மாநகரசபைத் தேர்தல்களில் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்தலில் முக்கியத்துவம் வகித்து வந்திருக்கின்றார்கள்.

யாழ்ப்பாண முஸ்லிம்களில் மிகப் பெரும்பான்மையானோர் வர்த் தகம்; சேவை; போக்குவரத்துத் துறை போன்ற பொருளாதார முயற்சிகளில் ஈடுபடுபவர்களாவர். மேற்குறித்த பொருளாதார நட வடிக்கைகளுக்கு இம்மாவட்டத்தின் பொருளாதாரத்தில் முஸ் லிம்கள் தங்கி வாழ்பவர்களாகக் காணப்படுகின்றனர். ஆயினும் முஸ்லிம்களின் சுதந்திரமான பொருளாதார; அரசியல் நடவடிக் கைகளுக்கு ஏற்ற சிறுபான்மைப் பாதுகாப்புக்களை இம்மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

யாழ் மாநகர சபைக்குள் முஸ் லிம்கள் செறிந்து வாழும் சோனக தெரு; புதிய சோனக தெரு பகு திகள் அதிகாரப் பரவலாக்கலில் கருத்திற்கெடுக்கப்பட வேண்டும். மேற்குறித்த முஸ்லிம் செறிவுக்கு விசேட அந்தஸ்து முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பாதுகாப்பதோடு சிறுபான்மையினருக்கான பாதுகாப்பையும் அளிக்கும்.

தொகுத்து நோக்கின் வடக்கில் முஸ்லிம்களின் பரம்பல் போக்கு பின்வரும் பண்புகளைத் தெளி வாக்குகின்றது.

1 மன்னார்; முல்லைத்தீவு மாவட்டங்களிலும் யாழ்ப்பாண மாநகர சபைக்குள்ளும் புதிய நிர்வாகப் பிரிவுகள் முஸ்லிம்க ளுக்கு உருவாக்கப்பட வேண்டும். இந்நிர்வாகப்பிரிவுகளுக்கு போதிய அதிகாரம் வழங்குவதன் மூலம் இம்மக்களின் சுய அபிவிருத்தியைத் தூண்டலாம்.

2. எஞ்சிய தனித்துக் காணப்படும் முஸ்லிம் குடியிருப்புக்களுக்கும் மக்களுக்கும் பொருத்தமான சிறுபான்மைப் பாதுகாப்பு அவசியம்.

3. வடக்கில் முஸ்லிம்களின் சுதந்திரமான பொருளாதார நடவடிக்கைகளுக்குத் தடை இருக்கக்கூடாது.

## வடமாகாணத்தில் தமிழ்; முஸ்லிம் இன உறவு.

தனித்துவமான இனங்களுக்கு இடையில் ப்ரஸ்பரமானதும்; அதே நேரத்தில் முரண்பாடானதுமான உறவுகள் காணப்படலாம். இன உறவின் தன்மையை வரலாற்று; அரசியல்; பொருளாதார; சமூக; கலாசார சூழ்நிலைகள் உருவாக்கும். இலங்கையின் மிக அண் மைக்கால வரலாறறில் இன முரண்பாடுகள் வெகுவாக ஓங்கி நிற்கின்றன.

வடமாகாணத்தில் தமிழர்களும்; முஸ்லிம்களும் தனித்துவமான இனங்களாக அடையாளப்படுத் தப்பட்டுள்ளனர். இவ்விரு இன மக்களுக்கிடையிலும் பரஸ்பர உறவுகள் மிக நீண்ட காலமாகக் காணப்பட்டிருக்கின்றது. இன முரண்பாடுகளுக்கான சான்றுகள் இவ்விரு குழுக்களுக்கிடையில் மிகக் குறைவாகவே காணப்பட் டன. பொருளாதார ரீதியாக தமி ழரில் முஸ்லிம்களும் முஸ்லிம் களில் தமிழரும் தங்கி வாழ்கின்ற தன்மையை வடக்கில் அவதானிக்கலாம். இனக் கலாச்சாரத் தனித்துவமும்; இனங்களுக்கிடை யில் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் மதிக்கின்ற சூழ்நிலையும் இங்கு காணப்பட்டது. இவ் உறவின் சாதகமான போக்கினைப் பல காரணிகள் தீர்மானித்திருக் கின்றன.

தமிழ் முஸ்லிம் இன உறவின் அடிப்படையாக தமிழ் மொழி காணப்படுகின்றத வரலாற்றுக் காரணங்களால் முஸ்லிம்களின் தாய்மொழியாகத் தமிழ்மொழி விளங்குகின்றது. மொழி பரஸ்பர இனவுறவின் அடிப்படையாகும். இதனை மிகத் தெளிவாக வடக் கில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இரண்டாவது; வட மாகாணத்தில் முஸ்லிம் சிறு பான்மையினரின் குறைவான எண் ணிக்கை பெரும்பான்மையினருக்கு அச்சுறுத்தலாக இருக்க வில்லை.

வடக்கின் பல பிரதேசங்களில் முஸ்லிம்களின் வாக்குகளில் தமிழ்ப்பிரதிநிதிகள் தங்கி இருந்த தன்மை காணப்பட்டது. உதாரணமாக யாழ்ப்பாண மாநகர சபை; முல்லைத்தீவு; வவுனியா தொகுதி களின் தேர்தல்களில் முஸ்லிம் சிறுபான்மையினரின் வாக்குகள் தேர்தல் முடிவைத் தீர்மானிக்கும். சக்தி கொண்டதாகக் காணப்பட்டன. இப்பிரதேசங்களில் தமிழ்; அரசியல்வாதிகள் முஸ்லிம் சிறு பான்மையினருக்கு சாதகமான கொள்கையைப் பின்பற்ற இவை காரணமாயிற்று. மன்னார்த் தேர்தல் தொகுதியில் முஸ்லிம் சிறு பான்மையினர் தமது அபேட்சகர்கள் மூலமாகப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்திற்கு மிக நீண்ட காலமாக முயற்சித்திருந்தாலும் கூட 70% மான தமிழ்ப் பெரும் பான்மையினருக்குத் தமது பிரதி நிதியை இலகுவாகத் தேர்ந்தெடுப்பதில் கடந்த காலங்களில் பிரச்சினை எதுவும் இருக்க வில்லை. அதனால் இம்மாவட் டத்தில எவ்வித அரசியல் ரீதி யான முரண்பாடும் இனங்களுக் கிடையில் எழவில்லை.

பொருளாதார நடவடிக்கை ரீதியாக தமிழ்;முஸ்லிம் மக்க ளுக்கிடையில் முரண்பாடுகள் மிகக் குறைவாகவே காணப் பட்டன. காரணம் தமிழ்முஸ்லிம் பொருளாதார நடவடிக்கைகள் மிக அதிகமான பிரதேசங்களில் தனித்துவமானவையாக; முரண்பா டற்றவையாகக் காணப்பட்டமையாகும். விவசாயப் பொருளாதாரத்தை எடுத்துக்கொண்டால் முசலி; மாந்தை; நானாட்டான்; முல்லைத்தீவு முஸ்லீம்கள் இந்நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இதில் முசலிப் பிரதேசம் விவசாய நீர்ப்பாசன ரீதியாக தமிழ்ப்பிரதேசங்களில் இருந்து தனிமைப் படுத்தப்பட்டதாகக் காணப்படு கின்றது. ஆகவே இங்கு நிலத் திற்கானதும்; நீர்ப்பாசனத்திற் கானதுமான போட்டிகள் இனங்களுக்கிடையில் இருக்கவில்லை. மாந்தை; நானாட்டான் பிரதேசங்களில் கட்டுக்கரைக் குளத்தி லிருந்து கிடைக்கின்ற போதிய அளவான நீர்வசதி நீர்ப்பாசன ரீதியான போட்டியை இங்கும் இனங்களுக்கிடையில் ஏற்படுத்த வில்லை. முல்லைத்தீவு மாவட்டத்திலும் இவ்வாறான தன்மையே காணப்பட்டது.

கடல்வள பொருளாதார நடவடிக்

ஹஸ்புல்லாஹ்


கைகளில் மீன்பிடியை எடுத்துக் கொண்டால் முஸ்லீம்; தமிழ்; சிங் கள மீன்பிடி வலயங்கள் மன் னார்த்தீவிலும் பிரதான நிலத் திணிவின் கரையோரங்களிலும் நீண்ட கால அனுபவத்தின் மூல மாகத் தெளிவாக வரையறுக்கப் பட்டிருந்தன. அத்துடன் முஸ்லீம் கள் பாரம்பரியமாக சுழியோடிகளாவார்கள். (முத்துக்குளித்தல்; சங்கு குளித்தல்; அட்டை குளித் தல்) இன்றும் இப்பாரம்பரியத்தின் தொடர்ச்சி காணப்படுவதையும்; மாற்று இனத்தின் போட்டி மேற் குறித்த தொழில்களுக்கு குறை வாகக் காணப்படுவதையும் காண லாம்.

வடமாகாணத்தில் வர்த்தக; போக்குவரத்து; சேவை போன்ற பொரு ளாதாரத்துறைகளில் விகிதாசார ரீதியாக முஸ்லிம்களின் பங்களிப்பு அதிகமாகும். அங்காடி வியாபாரம்; வாங்கி விற்றல்; நுகர்வுப்பொருள் விற்பனை ஆகிய வியாபார நடவடிக்கைகளில் முஸ்லிம்கள் ஆர்வமாக வடமாகா ணத்தின் நகர்ப்புறங்களில் ஈடுபட்டு வந்தனர். மேற்குறித்த தொழில்க ளுக்கு பெருமளவு போட்டி தமிழ் மக்களிடம் இருக்கவில்லை. அதே போல சில குறிப்பிட்ட சேவைத் தொழில்களில் உதாரண மாகத் தையல் தொழிலில் முஸ்லிம்கள் தேர்ச்சி பெற்றவர்களாகக் காணப்பட்டார்கள். இவைகள் இனப்போட்டியை அல்லாமல்;இன உறவை வளர்க்கும் தொழில் முறைகளாக வடமாகாணத் திலிருந்து முஸ்லிம்கள் விரட் டப்படும் வரை காணப்பட்டது.

முஸ்லிம்கள் வடக்கிலிருந்து தமி ழீழ விடுதலைப் புலிகளால் பல வந்தமாக வெளியேற்றப்பட்ட போது கூட தமிழ் முஸ்லிம் உறவை சீரழிக்கக்கூடிய கொலை; கொள்ளை போன்ற நிகழ்ச்சிகள் தமிழ்ப் பொது மக்களால் நடத் தப்பட வில்லை. முஸ்லிம்கள் சாரிசாரியாகத் தமது வாழ் விடத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த போது தமிழ்ப் பொது மக்கள் மௌனிகளாக; மனம் வெதும்பியவர்களாக; L.T.T.E யின் ஆயுதக் கட்டளைக்கு முர ணாக முஸ்லிம்களுக்கு உதவ முடியாதவர்களாக இருந்தார்கள் என்பது வெளியேறிய மக்கள் கூறிய விபரங்களிலிருந்து அறியக் கூடியதாக இருந்தது.

கடந்த நான்கு வருடங்களாக பிரதேச ரீதியாக இவ்விரு இனங் களும் பிரிந்து வாழும் சூழ் நிலை யிலும் கூட தமிழ் முஸ்லிம் உறவின் அடிப்படைகளில் மாற்ற மில்லை என்றும்; மீள் குடியேற் றத்தின் மூலமாக முஸ்லிம்கள் திரும்பவும் தமது தாயகம் செல்லும் சூழ்நிலை உருவாக்கப்படும் போது தமிழ்முஸ்லிம் உறவு திரும்பவும் கட்டி எழுப்பப்படலாம் எனவும் முஸ்லிம்தமிழ் ஆகிய இரு சாராரும் நம்புகின்றனர் என்பதற்கு ஆதாரங்கள் காணப் படுகின்றன.

அதே நேரத்தில் பலவந்தமான வெளியேற்றமும்; அகதி வாழ்க்கையும் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் பாதிப்புக்களை ஏற் படுத்தி இருக்கின்றது என்பதுவும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அதே போல ஆயுதக் கலாச்சாரத்தில் உருவாக்கப்பட்டு வரும் தமிழ் இளம் தலைமுறையினர் முஸ்லிம் சிறுபான்மையினரைப் பற்றிய தவறான அபிப்பிராயங் களைக் கொண்டிருக்கவும் வாய்ப்பளிக்கின்றது. மேற்குறித்த இனத் தப்பபிப்பிராயங்களை முறையான கல்வியூட்டல் முறை மூலம் இல் லாமல் செய்ய முடியும்.




வடமாகாணத்தில் முஸ்லிம்களுக்காக உருவாக்கப்படக்கூடிய நிர்வாகப் பிரதேசங்கள்

## பலவந்தமான வெளியேற்றத்தால் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு உருவாகி இருக்கும் புதிய பிரச்சினைகள்.

முஸ்லிம்கள் பலவந்தமாக வடக் கில் இருந்து வெளியேற்றப்பட் டார்கள். முஸ்லிம்கள் என்ற இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகவே வெளியேற்றப் பட்டார்கள். வெளியேற்றத்தின் போது பொருள்களும்; சொத்துக்களும் பறிக்கப்பட்டதோடு வடக்கில் முஸ்லிம்களுக்கு வாழ உரிமை இல்லை என்றும் கூறப் பட்டு வெளியேற்றப்பட்டார்கள்.

சமகால உலக வாரலாற்றில் பொஸ்னியாவின் ஒரு குறித்த இனத்தைச்சேர்ந்தவர்கள் என்பதற்காக அப்பாவிகளான மக்கள் ஆயுத முனையில் வெளியேற்றப்பட்டதைப் பார்க்கின்றோம். பொஸ்னியாவைப் பொறுத்தவரை வெளியேறியவர்களுக்கும் வெளியேற்றியவர்களுக்குமிடையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவ்விரு இனங்களுக்கும் இடையில் மிக நீண்டகாலமாக பகைமை காணப்பட்டதையும் அவதானிக்கலாம். மாறாக வட மாகாணத்தைப் பொறுத்த வரையில் ஏற்கனவே விளக்கப் பட்டது போல் இனப் பகைமத்துவமும்; யுத்த சூழ்நிலைகளும் முஸ்லிம் தமிழ் மக்களுக்கி டையில் இருக்கவில்லை. முஸ் லிம்கள் எண்ணிக்கை ரீதியாக சொற்ப தொகையினராகக் காணப் பட்டதும்; முஸ்லீம்களின் பலவந்தமான வெளியேற்றத்தைத் தடுக்கக் கூடிய தேசிய; சர்வதேச ரீதியான முயற்சிகள் எடுக்கப்படாமையுமே வெளியேற்றியவர்களின் நோக்கம் நூறு வீதம் வெற்றியளிக்கக் கார ணமாக இருந்தது.

வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றிய வரலாற்றுத் தவறுக்காக L.T.T.E மனம் வருந்துவதாகச் செய்திகள் மிக அண்மைக் காலத்தில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆயினும் தமது தவறுக்குப் பரிகாரமாக வட மாகாண முஸலிம்களின் வாழ்விட உரிமையை அங்கீகரித்து; மீள் குடியேற்ற முயற்சிகளை L.T.T.E யினர் இதுவரை மேற்கொள்ள வில்லை என்பதுவும் குறிப்பிடத் தக்கது. மாறாக அரசாங்கத்திற்கு முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்துடன் தொடர்பான முன் நிபந் தனைகளை L.T.T.E யினர் முன்வைத்திருக்கின்றார்கள்.

வடமாகாண முஸ்லிம்களைப் பொறுத்த வரை கடந்த நான்கு வருடங்களாக அகதி முகாம்களில் வாழ்கின்றார்கள. இவர்கள் தமது பொருளாதார அடிப்படையிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கின்றார்கள். தமது உணவு; உடை; உறைவிடம்; கல்வி; சுகாதாரம்; ஒழுக்கம் ஆகியன பாதிக்கப்பட்ட நிலையில் முகாம் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்புதிய சூழ்நிலைகளில் முஸ் லிம் சிறுபான்மையினர் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மிகக் கவனமாகப் பரீட்சிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

வெளியேற்றப்பட்ட மக்கள் திரும் பவும் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும். அது எப்போது? சமா தான சூழ்நிலையிலா? அல்லது இனப்பிரச்சினைகளுக்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்திலா? மீள் குடியேற்றம் யாருடைய அங்கீகாரத்தில் செய்யப்பட வேண்டும்? இலங்கை அரசாங் கத்தாலா? அல்லது அரசாங் கத்திற்குச் சமமாக தமிழ் மக்கள் சார்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபடுபவர்களும் இம்மக்களை பலவந்தமாக வெளியேற்றியவர்களுமான L.T.T.E யினராலா? மீள் குடியேற்றத்துடன் தொடர்பான புனர்வாழ்வு பற்றிய திட்டங்கள் என்ன? முதலிய வினாக்களுக்கு விடை காண்பதும் அவசியமான தாகும்.

இரண்டாவதாக; வடக்கில் முஸ் லிம் சிறுபான்மையினர் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு அங்கு வாழ்ந்து வருகின்ற போது இம் மக்கள் திரும்பவும் வெளியேற்றப் படமாட்டார்கள் என்பதற்கான உத்தரவாதம் என்ன? ஆயுதக் கலாசாரம் வடக்கில் தொடர்கின்ற இச்சூழ்நிலையில் இம்மக்களுக்கு வழங்கக்கூடிய குறுங்காலப் பாதுகாப்பு என்ன? வடக்குத் தமிழ் மக்களுடையதும் அதே நேரத்தில் பாரம்பரியமாக வாழ்ந்த எனைய சிறுபான்மையினருடையதுமான தாயகம் என்ற உண்மை எவ்வாறு எல்லா சாராரினாலும் அங்கீகா ரத்தைப் பெறலாம்? தாம் திரும் பவும் வடக்கை விட்டு வெளி யேற்றப்பட மாட்டோம் என்ற மன நிறைவோடு முஸ்லிம் சிறு பான்மையினர் வடக்கில் வாழ்வதற்கான உத்தரவாதம் என்ன? என்பவை பற்றியும் சிந்திக்க வேண்டி யுள்ளது.

மூன்றாவதாக; உடைமைகள் பறிக்கப்பட்டு; பொருளாதார அடிப்படைகள் சீரழிந்து; சமூக; கலாசாரச் சூழ்நிலைகள் வேர றுக்கப்பட்ட நிலையில் காணப் படும் முஸ்லிம் அகதிகளின் மீள குடியேற்றம் இம்மக்களின் நியாயமான புனர்வாழ்விற்கு ஏற்ற திட்டத்துடன் செயலாற்றப்பட வேண்டியது அவசியமானதாகும்.

இறுதியாக; வடக்கிற்கான அதிகாரப் பரவலாக்கலோடு உரு வாகப் போகின்ற புதிய அரசியல் சூழ்நிலையில் எவ்வாறான சிறு பான்மைப் பாதுகாப்புக்கள் இம்மக்களுக்கு வழங்கப்படும்? விகிதாசார ரீதியாக குறைவான எண்ணிக்கையைக் கொண்ட இம்மக்களின் அரசியல் அபிலாசைகள் எவ்வாறு அரசியல் பிரதிநிதித்துவம் மூலம் பாதுகாக்கப்படலாம்? அது போல தமிழ் முஸ்லிம் உறவை மீண்டும் வடக்கில் கட்டி எழுப்புவதற்கு எவ் வாறான புதிய திட்டங்கள்; நடை முறைப்படுத்தப்படுதல் வேண்டும்? முதலானவை வடமாகாண முஸ்லிம் சிறுபான்மையினர் வெளி.யேற்றப்பட்டதால் ஏற்பட்ட புதிய பிரச்சினைகளாகும்.

-ஸக்ரம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழில் மாற்றுச் சினிமா: நம்பிக்கைகளும் பிரமைகளும்

யமுனா ராஜேந்திரன்

எனது விமர்சன அணுகுமுறை தமிழில் மாற்றுச் சினிமாவை உருவாக்கும் செயல் நோக்கம் கொண்டது.சினிமாவை மாற்றுச்சினிமாவை நோக்கி நகர்த்துவது பற்றிய சிந்தனையே இப்போது தேவை. சகட்டு மேனிக்கான தந்தக்கோபுர எதிர் விமர்சனமே தீவிர கலை இலக்கியவாதிகளிடம் நிலவி வருகிறது. குணெ சொல்கிறபடி ''எத்தனை தான் உன்னதக் கலையை சிறுபான்மை புத்திஜீவி வட்டம் பேசினாலும், அந்த வட்டத்திலிருக்கும் ஒவ்வொருவரும் வேறு வேறு சமூக, அரசியல், பொருளியல் பார்வை கொண்டவர்கள் தான். எத்தகைய உன்னதப் படைப்பும் வெகுஜனங்களிடம் கொண்டு போகப் படவேண்டும்.நான் பார்த்த உன்னதப் படங்களில் மிகவிரவிய ஒரு அம்சம்: அவை எளிமையானவை. தீவிரமானவை பாசாங்கு அற்றவை. திட்டமிட்டு அவை தம்மை சாதாரண மனிதனிலிருந்து தூரப்படுத்திக் கொள்வதில்லை.

தமிழ்ச் சூழலில் உன்னத படைப்புக்கான அளவுகோல்களாக கலாசாரவாதிகள் கருதும் உரைகல் இதுதான்: படைப்பு முடிந்த அளவு தன்னை சாதாரண மனிதனிலிருந்து தூரப்படுத்திக் கொள்ள வேண்டும். 500பேருக்கு மேல் விரும்பி வாசிக்கப்படும் நாவலிலும் பத்தாயிரம் பேருக்கு மேல் பார்க்கப்படும் சினிமாவிலும் ஏதோ கோளாறு இருக்கிறது.

இது "nonsense" அறியாமை. சினிமா சில விஷயங்கள் பேசப்பட வேண்டும். நான் பார்த்த சில படங்கள் பற்றிச்சொல்கிறேன்.

கோமல் சுவாமிநாதன் கதை எழுதி இயக்கிய திருப்பங்கள், அனல் காற்று, ஒருஇந்தியக் கனவு ,

அருண் மொழியின் ஏர்முனை, ஜெயபாரதியின் குடிசை, ஊமை ஜனங்கள்,

ஹரிஹரனின் ஏழாவது மனிதன்,

ஜெயகாந்தனின் உன்னைப் போல் ஒருவன். மற்றும் புதுச் செருப்பு கடிக்கும்,

தா. பாண்டியன் எடுத்த சங்கநாதம்

பாலுமகேந்திராவின் வீடு, அழியாத கோலங்கள் மற்றும் மறுபடியும், யாத்ரா, கோகிலா, மூன்றாம் பிறை (பிற படங்களை இதேதரத்திலானவை என்று கொள்ள முடியாது)

ருத்ரய்யாவின் அவள் அப்படித்தான்,

ராஜாஜியின் சிறுகதையான திக்கற்ற பார்வதி,

ஆர். சி. சக்தியின் படங்களான சிறை, பத்தினிப் பெண், கூட்டுப் புழுக்கள்,

பீம்சிங் இயக்கிய ஜெயகாந்தனின் நாவல்களான சில நேரங்களில் சில மனிதர்கள், ஒருநடிகை நாடகம் பார்க்கிறாள்,

சேதுமாதவன் இயக்கிய இந்திரா பார்த்தசாரதியின் நாவலை அடிப்படையாகக் கொண்ட மறுபக்கம்

ஞான ராஜசேகரன் இயக்கிய தி. ஜானகிராமனின் நாவலான மோகமுள்,

இரண்டு விஷயங்களை நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

1. வெகுஜன சினிமா சார்ந்தவர்களை குறிப்பிட்ட நல்ல படங்களைத் தர முடியாமல் முடக்கிப் போட்ட காரணங்கள் என்ன?

2. தீவிர சினிமா சார்ந்தவர்கள் ஏன் தமது தளத்தில் தொடர்ந்து செயல்பட முடியவில்லை?

இதற்கான காரணங்கள் இரண்டு. ஒன்று சினிமா கட்மைப்பு எழுந்து நிற்கும். சமூக அமைப்பு. மற்றையது சினிமா கட்டமைப்பின் உள்ளார்ந்த தர்க்கம் பற்றிய புரிதலின்மை.

'உள்ளார்ந்த தர்க்கம் பற்றிய புரிதலின்மை'நிறைய விவாதங்களுக்கு இடந்தரக் கூடியது. ஆனால் தீவிர சினிமா தளத்தில் இது நடைமுறையில் விமர்சிக்கப்படாதது, விவாதிக்கப்படாதது.

வெகுஜன சினிமா சார்ந்தவர்கள் எடுத்த தீவிரமான படங்கள் பேசப்பட்டன. தீவிரமான சினிமா சார்ந்தவர்கள் எடுத்த படங்கள் வெகுஜனத் தளத்தை எட்டவில்லை. வெகுஜன சினிமா சார்ந்தவை பேசப்படக்காரணம் சினிமா ரசிகனின் நினைவுத் தடத்தில் பதிந்திருக்கிற நடிகன் பற்றிய பிரதிமைகள், இசை பற்றிய அனுபவங்கள், இயக்குனர் பற்றிய முன் மதிப்பீடுகள் போன்றவை அவனுக்குள் சில நிலைத்த மதிப்பீடுகளை உருவாக்கிக் கொண்டிருப்பது தான். கமலஹாஸன் , மணிரத்தினம், பாலச்சந்தர், இளையராஜா, ரகுமான் போன்றவர்களோடு சேர்த்துக் காணப்படும் படம் பார்வையாளனின் அக்கறைக்குள் போகிறது. தொழில்நுட்ப ரீதியிலான, அமைப்பு ரீதியிலான விடயங்கள் இயல்பாகவே இப்படங்களை வெகுஜன சினிமாவுக்கான கூறுகள் உள்ளிட்ட தாக்குகிறது.

கோமல் சுவாமிநாதனின் அனல் காற்று நாடக வடிவத்தின் திரை வடிவம்தான். சினிமாவுக்கென்றிருக்கும் நகரும் தளம் அதற்கில்லை.

மகேந்திரன், பாரதிராஜா, பாலுமகேந்திரா, சேதுமாதவன், பாலச்சந்தர் போன்றவர்கள் கொடுத்த தீவிரமான படங்களையும்,

கோமல் சுவாமிநாதன், ஹரிஹரன், ஜெயகாந்தன், அருண்மொழி ஜெயபாரதி போன்றவர்கள் கொடுத்த தீவிரமான படங்களையும்,

பார்ப்வர்கள் சினிமா எனும் ஊடகத்தை கையாள்வதில் முன்னவர்க்குள்ள லாவகத்தையும் பின்னவர்களுக்குள்ள தடுமாற்றத்தையும் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும்.

தீவிரகலை இலக்கியவாதிகளுக்கு தமது கருத்துக்கள் மீதுள்ள அக்கறையே முக்கியம். வெகுஜன சினிமா சார்ந்தவர்களுக்கு சினிமா சாதனத்தின் தனித்துவமும் அது செயல்படும் தளமான பார்வையாளனுமே முக்கியம்.

டன் செயல்படும் மேதமை அவருக்கு இருக்கிறது.

தமிழ்ச் சூழலில் இம்மாதிரியான ஒருவர் எவ்வளவு மோசமாக தீவிரகலை இலக்கியவாதிகளால் விமர்சிக்கப்பட்டிருப்பார் என்று யோசிக்க முடிகிறது. அமைப்புக்குள்ளிருந்தே அமைப்டை எதிர்த்துத் திரள்கிற மனப் பக்குவமோ கிலேசமற்ற அறிவுணர்வோ தமிழ்ச் சூழலில் இல்லை.

ஸியாம் பெனிகல்,கௌதம் கோஷ், ஸத்யஜித்ரே போன்றோரின் பல படங்களும் INDIAN FILM FINANCE CORPORATION உதவியுடன் கொண்டு வரப்பட்டவை.

தமிழ்ச் சூழலில் பெரும்பாலான தீவிர கலை இலக்கியவாதிகள் தொடர்ந்த சினிமா பார்வையாளர்களாக இல்லை. பாலுறவு பற்றிய இடதுசாரிகளின் பார்வை மௌடீகமானவை, மூடுண்டவை வங்காளத்தைப் போலவோ கேரளாவைப்போலவோ பலம் வாய்ந்த திரைப்படச் சங்கங்களின் இயக்கம் தமிழில் இல்லை. வெகுஜன சினிமா பற்றிய விமர்சன மரபுகள் தமிழ் அறிவுலக வாதிகளிடம் இல்லை.

ஏழாவது மனிதன் எடுத்த ஹரிஹரன் பாரிஸ் நைட்

கிளப்/ படத்தை செந்திலை வைத்து








வைப்பற்றிப் பேசுவதற்கு, சாதாரண சினிமா பார்வையாளனின் மன நிலையை முதலில் புரிந்து கொள்ளும் முயற்சி வேண்டும்.

ஸத்யஜித்ரே 'ஷோலே' படத்தில் நடிகர்களின் தேர்ந்த நடிப்பு பற்றியும், காட்சியமைப்பின் புத்திசாலித்தனம் பற்றியும் சிலாகித்திருக்கிறார். அவரது 'சித்ரஞ்ச்கா கிலாமி' படத்தில் வர்ணனை தருபவர் அமிதாப்பச்சன். அம்ஜத்கான் சஞ்சீவகுமார் போன்ற பிரபல நடிகர்கள் நடித்திருந்தனர்.

தீவிர தமிழ் சினிமா படைப்பாளர்களின் உள்ளார்ந்த முரண்பாடுகள், காட்சிரூப அக்கறையின்மை என்பன பற்றி இதுரை பேசப்படவில்லை. சினிமா என்பது நடிப்பு, கதாபாத்திரத் தேர்வு, இசை, கமெரா, கோணம், கதைத் தேர்வு, அன்றைய கலைச்சூழல் பற்றிய அறிவு, நிலவும் சூழலின் சினிமா மீது துவேஷமற்ற/பகையுணர்வற்ற தன்மை போன்ற எல்லாம் சேர்ந்ததுதான். ஏன் தமிழ்ச்சூழலில் கிரிஸ் கர்னாட் மாதிரியான ஸியாம் பெனிகல் போன்ற பரதன், பத்மராஜன் போன்ற சமாந்தர சினிமாக்காரர்கள் வெற்றிகரமாக உருவாகவில்லை?

தமிழ் சினிமாவில் மாற்றுச் சினிமா என்றிருக்கிறவை பற்றி வெளிப்படையாகச் பாரதிராஜாவின் பதினாறு வயதினிலே, வேதம் புதிது, காதல் ஓவியம், கருத்தம்மா, பசும் பொன்,

கமல்ஹாஸன் சம்பந்தமான தேவர் மகன், மகாநதி,

ரஜனிகாந்த் சம்பந்தமான முள்ளும் மலரும், ஜானி,

மணிரத்தினத்தின் அஞ்சலி, நாயகன், மௌனராகம், ரோஜா, பம்பாய்,

சுஹாசினியின் இந்திரா,

மகேந்திரன் இயக்கிய உதிரிப்பூக்கள், மெட்டி, பூட்டாத பூட்டுக்கள்,

மணிவண்ணணின் இனி ஒரு சுதந்திரம்,பாக்கியராஜாவின் ஒரு கை ஓசை, பாலச்சந்தர், கோமல் சுவாமிநாதனின் தண்ணீர் தண்ணீர், ஒரு வீடு இரு வாசல், நிழல் நிஜமாகிறது.

இவ்வாறு தீவிர சினிமாவை முயன்று பார்த்தவர்களில் வெகுஜன சினிமா (வியாபார சினிமா) சார்ந்தவர்களும் இருந்திருக்கிறார்கள். தீவிர கலை இலக்கிய தளத்தில் செயல்பட்டவர்களும் இருந்திருக்கிறார்கள்.

ஏதோ வெகுஜன சினிமா சார்ந்தவர்கள் எல்லோரும் மக்களை ஏமாற்றும் வியாபாரிகள் என்றோ, வெகுஜனங்களால் பார்க்கப்பட்ட எல்லாப் படங்களும் வியாபாரப் படங்கள் என்றோ கொள்ளப் படத்தேவையில்லை.

பாரதிராஜா படங்களைப்பற்றிய விமர்சனங்கள் எத்தகையதாயினும் அவர் படங்களில் கதாபாத்திரங்கள் இறுக்கமாகக் கட்டமைக்கப்பட்டிருப்பதையும், தொடர்பான உணர்ச்சியை தொற்றவைக்கக்கூடிய ஆற்றலை நடிகர்களுக்குள்ளிருந்து கொண்டு வர முடிவதையும் நாம் பார்க்க வேண்டும். (உதாரணம் கிழக்குச் சீமையிலே, பசும் பொன்.)

Make up பற்றிய பிரச்சினையும் கூட படத்தின் தீவிரத்தன்மையைத் தீர்மானிக்கிறது. செல்வராஜின் தேனீர் நாவலின் திரை வடிவம் ஊமை ஜனங்கள் ஜெயபாரதி இயக்கத்தில் பாக்கியராஜ், சரத்பாபு நடித்தது.

சரத்பாபுவின் அம்மாவாக வருபவரின் குரல், தோற்றம், தலைநரை போன்றவற்றை பார்ப்பவர்களுக்கு சத்தியம் செய்தாலும் அந்தப் பாத்திரம் வயதான தாயின் பாத்திரம் என்று நம்ப மாட்டார்கள்.

இந்த இரு தன்மைகளையும் இணைக்கக்கூடிய இயக்குனர்களாகவே ஸியாம் பெனிகல், பத்மராஜன், பரதன், தோப்பில் பாஸி, கிரிஸ் கர்னாட் போன்றவர்களை நான் காண்கிறேன்.

எம். ஜி. ராமச்சந்திரனையும் ஜெயலலிதாவையும் நடிகர்களுக்கு சமூக மரியாதையை உருவாக்கிக் கொடுத்தவர்களாகக் காண்கிறர் கிரிஸ் கர்னாட். அதே கிரிஸ் கர்னாட் தான் Nehru Dynastyஐ விமர்சிக்கும் போக்கில் 'துக்ளக்' நாடகம் போடுகிறார்.அதே கிரிஸ்கர்னாட் தான் சங்கர் இயக்கத்தில் காதலன் படத்தில் கவர்னராக நடிக்கிறார். பம்பாய் படத்தின் ஒளிப்பதிவாளர் தான் கர்னாட்டின் படமான செலுவி படத்தின் ஒளிப்பதிவாளரான ராஜீவ் மேனன். கிரிஸ்கர்னாட் லண்டன் நேரு மையக் கூட்டத்திலும் இந்திய அரசியலை விமர்சித்திருக்கிறார்.

கிரிஸ் கர்னாட் வேடதாரியா? இல்லை நிச்சயமாக இல்லை. ஒரு சினிமாக்காரராகத் தான் இயங்கும் சூழல் பற்றிய அறிவு அவருக்கு இருக்கிறது. ஒரு கலைஞனாக தனது கட்டுப்பாட்டுக்குள் இருக்கிற விஷயங்களில் தனித்துவத்து

எடுப்பது எவ்வளவு கொடுமை? கவிதை பாட நேரமில்லை எடுத்த யூகி சேது ஜெயலலிதா வாழ்க்கை வரலாற்றைத் தருவது எவ்வளவு கொடுமை?

வீடு, அழியாத கோலங்கள் கொடுத்த பாலுமகேந்திராதான் ரெட்டை வால் குருவியையும், சதிலீலாவதியையும், அர்ச்சனாவை உடம்பு உரித்துக் காட்டும் தெலுங்குப் படத்தையும் எடுத்தவர்.

எந்தத் தனிப்பட்ட இயக்குனர் மீதும் பிரம்மை கொள்ளத் தேவையில்லை. நம்மை நாமே விமர்சித்துக் கொள்ளாமல் வெகுஜன சினிமா மீது பகைமை கொள்ளத் தேவையில்லை.

பாலுமகேந்திரா மீதோ இடதுசாரி இயக்குனர்கள் மீதோ நாம் கொண்டிக்கும் நம்பிக்கை மூடநம்பிக்கையின் பொருட்டோ அறிவு சாராமலோ இருப்பது தமிழில் மாற்றுச் சினிமாவுக்கு ஆரோக்யமானதல்ல.

நிலவும் சினிமாவிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். பார்வையாளனிடமிருந்து கற்றுக் கொண்டு அவனுக்கு புதிது தர வேண்டும். விமர்சனமற்ற சுய சந்தோஷம் செயல் முடக்கத்துக்கான முதல் படி. இதில் நாம் அவதானமாயிருக்க வேண்டியது இப்போது அவசியம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்கள், குழந்தைகள் உரிமையும்

## புதிய சட்ட சீர்திருத்தமும்

இலங்கையின் குற்றவியல் கோவையானது (Penal Code) 1883ம் ஆண்டு வரையப்பட்ட நூற்றுப் பன்னிரெண்டு வருடகால பழமை வாய்ந்ததாகும். இதில் பெண்கள் - குழந்தைகள் தொடர்பான சரத்துகளில் சில திருத்தங்களைச் செய்ய முன்வந்துள்ளது பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம். பழைமை வாதிகள், மதவாதிகள் போன்றோரது கடும் விமர்சனங்களுக்கு மத்தியிலும் பெண்கள் - குழந்தைகள் சம்பந்தமாக விரும்பியோ விரும்பாமலோ சட்டத்தில் திருத்தங்களைச் சேர்க்க அரசு தலைப்பட்டது ஏன்? பெண்கள் - குழந்தைகள் பால் அரசுக்குள்ள கரிசனையா? அல்லது பெண் ஜனாதிபதி, பெண் பிரதமமந்திரி ஆகியோரது ''ஜனநாய க/ பெண் விடுதலை'' உணர்வுகளின் நிமித்தமா? நிச்சயமாக நடைபெறுகின்ற சம்பவங்கள் இதிலெதுவும் காரணமில்லை எனத்தான் புலப்படுத்துகின்றன. அப்படியானால், பெண்கள் - குழந்தைகள் தொடர்பாக ஏற்கனவே இருந்து வரும் சட்டங்கள் சர்ச்சைக்குட்படுத்தப்பட்டு புதிய திருத்தங்கள் இணைக்கப்பட என்னதான் காரணமாயுள்ளது?

- பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு, பலாத்காரம் போன்றவை சமூகத்தில் மிக மோசமாயுயர்ந்துள்ளது. விஷேடமாக சிறுமிகள் மீதான பாலியல் குற்றம்........ தகப்பன் மகளை பாலியல் வல்லுறவு கொள்வது, பாட்டன் பேத்தியை வல்லுறவு கொள்வது, கும்பலாகச் சேர்ந்து பாலகிகளை பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கியபின் கொலை செய்து புதைப்பது........

-பெண்களையும், சிறுமிகளையும் ஏமாற்றி/ கடத்திச் சென்று விபச்சாரத்திலீடுபடுத்துவது........

- மேலும், ஆண் சிறுவர்களை தன்னினச் சேர்க்கை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது தென்னிலங்கையில் கரையோரப் பகுதிகளில் மலிந்துவிட்டது. உல்லாசப் பிரயாணிகளின் டொலர்களுக்கு இவர்கள் பலியாக்கப்பட்டும் வருகிறார்கள். அது மாத்திரமின்றி, உள்ளூர்க்காரர்களின பாலியல் இச்சைக்கு எத்தனையோ ஆண் சிறுவர்கள் இரகசியமாய்ப் பலியாகி வருகிறார்கள். சில மாதங்களுக்கு முன் ஒன்றரை வயது பாலகன் ஒருவன் குதம் வழியாகக் கொள்ளப்பட்ட பலாத்கார உறவால் குடல் வெளியேறி மரணமானான். புத்த பிக்கு ஒருவர் தனது மடாலயத்தில் வைத்து பதினொரு வயதுச் சிறுவனுடன் பலாத்காரமாக குதவழி உறவு கொண்டதினால், சிறுவனுக்கு இரத்தப் பெருக்கு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான்........ இவ்வாறே பல சம்பவங்கள் நிகழ்ந்து செல்கின்றன......

பெண்கள் - குழந்தைகள் மீதான பாலியல் வல்லுறவின் அதிகரிப்பும், ஆணாதிக்கம் பெண்களுக்கெதிராய் எடுத்துள்ள பாசிச வடிவமும் மனிதாபிமானமுள்ள எவரையும் அச்சுறுத்துவதாயுள்ளது. இந்நிலையில் இலங்கையின் பெண்கள் இயக்கங்களதும், ஜனநாயக வாதிகளதும் நிர்ப்பந்தத்தின் காரணமாகவும், சர்வதேச அரங்கில் எழுப்பப்படும் கேள்விகளாலும், புதிய அரசாங்கம் தன்னை ''ஜனநாயகமானது'', ''பெண்கள் - குழந்தைகளில் அக்கறையுடையது'' என காட்டிக்கொள்வதற்காகவும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசானது சட்டத்தில் சில புதிய வரிகளைச் சேர்த்துள்ளது.

பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு தொடர்பாக ஏற்கனவே இருந்து வரும் 1883ம் ஆண்டைய சட்டம் பாலியல் வல்லுறவை (Rape) எப்படி அணுகுகிறது என்று பார்ப்போம்.

குற்றவியல் கோவை 363வது சரத்து பாலியல் வல்லுறவு (Rape) பற்றிக் கூறுகிறது. இப்படிக் கீழ்க்காணும் ஐந்து சந்தர்ப்பங்களில் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் ஒரு ஆண் ஒரு பெண்ணுடன் புணர்ச்சியில் ஈடுபடுவது பாலியல் பலாத்காரமாகக் கொள்ளப்படுகிறது.

''**முதலாவது** - அவளது விருப்பத்திற்கு எதிராக

**இரண்டாவது** - அவளது சம்மதம் (Consent) இல்லாமல்

**மூன்றாவது** - அவளைக் காயப்படுத்துவதாக அல்லது கொலை செய்வதாக அச்சுறுத்தி அவளது சம்மதத்துடன் நடைபெறுவது.

**நான்காவது** - அவளது சம்மதத்துடன், ஆனால் ஆண் தான் அவளது கணவன் இல்லையென அறிந்திருக்கும் நிலையில், பெண் அவன் தான் தனது சட்டபூர்வமான கணவன் அல்லது நிச்சயிக்கப்பட்டவன் என நம்பி புணர்ச்சிக்கு தனது சம்மதத்தை வழங்கியபோது''

(இருட்டான இடத்தில் ஆள் மாறாட்டம் நடத்தல், ஒரே சாயலில் இருத்தல்...... இந்நிலையில் பெண் விரும்பி ஆணு டன் ஒன்று கூடிய பின்னர், தான் கூடியவன் கணவனோ, காதலனோ இல்லை என்பதைக் கண்டு கொள்ளும் போது அவனால் அவள் மோசடி செய்யப்பட்டதை உணர்கிறாள்.- கட்டுரையாளர்)

**ஐந்தாவது** - 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்ணுடன் அவளது சம்மதத்துடனோ சம்மதமின்றியோ புணர்ச்சியில் ஈடுபடுவது.

**விளக்கம்** - ஆண்குறியை யோனியில் உட் செலுத்துவது மாத்திரமே பாலியல் பலாத்காரம் என்று ஒப்புவிப்பதற்கு போதுமானது.

**விதிவிலக்கு** - ஆண் தனது சொந்த மனைவியுடன் கொள்ளும் புணர்ச்சி மனைவி பன்னிரெண்டு வயதுக்குக் கீழ்ப் பட்டவளாயில்லாதவிடத்தில் பாலியல் பலாத்காரம் (Rape) ஆகாது''

குற்றவியற் கோவை 364வது சரத்து பாலியல் வல்லுறவிற்கான தண்டனையைக் கூறுகிறது.

'' யார் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டாலும் சிறைத்தண்டனை வழங்கப்படும். இது இருபது வருடங்களுக்கும் நீடிக்கப்படலாம். அதேபோல் குற்றப் பணம் செலுத்தவும் வேண்டும்.''

பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகளுடன் பாலியல் உறவுகொள்வது குற்றமாகக் கூறப்படுவதன் காரணம், நூறு வருடங்களுக்கு முன்னர் பெண்களுக்கு பன்னிரண்டு வயதிலேயே திருமணம் செய்து வைக்கப்படும் வழக்கம் பரவலாகக் காணப்பட்டதாகும். இதைச் சட்டமும் அங்கீகரித்தது. ஆண்களுக்கு பதினான்கு வயது திருமணத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட வயதாகும். பன்னிரெண்டு வயதில் சிறுமிகள், சிறுமிகளாயன்றி பெண்களாகக் கருதப்பட்டதன் விளைவுதான் இத்தகைய சட்டம் இயற்றப்பட்டதன் காரணமாயுள்ளது.

- இந்தச் சட்டம் மூளைக் குறைபாடுடைய, உடல் ஊனமுற்ற, சித்த சுவாதீன மற்ற பெண்களில் தனித்துவமான நிலையைக் கணக்கிலெடுக்கத் தவறிவிட்டது.

- மனைவியின் சம்மதம் இல்லாவிட்டாலும் அவள் 12 வயதுக்குக் கீழ்ப் படாதவளென்றால் கணவன் அவளைப் வல்லுறவுக்குட்படுத்துவது குற்றமாகாது. அதாவது திருமண உறவில் மனைவியை பாலியல் வல்லுறவு செய்யும் உரிமை கணவனுக்கிருப்பதை சட்டம் உறுதிப்படுத்துகிறது.

மேலும், அமுலில் உள்ள இச்சட்டம், தான் ''குற்றமற்ற'' பாலியல் புணர்ச்சி என அங்கீகரிப்பவற்றைவிட தனது சட்டத்தின்படி குற்றத்திற்குரியவை எனக் காணும் சம்பவங்களிற்கு எத்தகையத் தீர்ப்பை வழங்குகிறது? சட்டத்தில் காணப்படுவது போல் பாலியல் வல்லுறவு கொள்ளும், எல்லாக் குற்றவாளிகளும் தண்டனை அனுபவிக்கிறார்களா?

நடைமுறையில், வல்லுறவுக்குள்ளான பெண் தான் வல்லுறவு செய்யப்பட்டதை நிரூபிக்க அவளுக்குள்ள ஆற்றலிலேயே குற்றவாளிக்கான தண்டனை தங்கியுள்ளது.

பாலியல் வல்லுறவு தொடர்பான சட்ட ரீதியான இயக்கப்போக்கு பின்வருமாறு அமைகிறது:

அ) பலாத்காரத்துக்குள்ளான பெண் பிறரது நிர்ப்பந்தமின்றி தானாக முன் வந்து வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் (பொலிஸில் முறையிட வேண்டும்).

ஆ) அதையும் கூடிய விரைவில் செய்யவேண்டும். பலாத்காரம் செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்கள் கடந்த பின் முறையீடு செய்தால் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(வல்லுறவுக்குள்ளான பெண் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளவேண்டியிருப்பதால் பரிசோதனைக்குட்படும்வரை அவள் குளிக்கக் கூடாது. குளித்தால் அவளது உடலில் ஒட்டியிருக்கும் ஆண்விந்து கழுவப்பட வாய்ப்பிருப்பதால் குற்றவாளியை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமற் போகும் என இந்த வழக்கை அணுகும் பொலிஸார், சட்ட மருத்துவ அதிகாரிகள் (JMO), வழக்கறிஞர்கள் கூறுகின்றனர். பொலிஸில் முறையிட்டு இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் வைத்தியபரிசோதனைக்கு பெண் உள்ளாக்கப்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் இரண்டு நாட்களும் செல்லும். அதுவரை தன்மீது விழுந்துள்ள அசிங்கத்தைக் கழுவாமல் சுய உணர்வு நிலையிலுள்ள ஒரு பெண்ணால் எப்படியிருக்க முடியும்...? தனது உடலைக் கழுவிக் கொள்வதன் மூலம் அந்த அருவருப்பான உணர்வுகளிலி ருந்து மீளுவதாக பெண் உணர்கிறாள். இது பெண்ணின் உளவியலுடன் பிணை ந்த ஒன்றாகும். ''குளிக்கக் கூடாது'' எனக் கூறுவதும் பெண்ணை அந்தப் பயங்கரமானதும் அருவருப்பானதுமான உணர்வுகளிலிருந்து மீளவிடாது தடுத்து வைத்திருக்கும் ஒரு சித்திரவதையே என பெண் உளப்பகுப்பாளர் ஒருவர் கூறுகிறார்.)

இ) வல்லுறவுக்கான சாட்சியங்களாக பெண்ணிடம் எதிர்பார்க்கப்படுபவை:

- அவளது உடலில் ஒட்டியிருக்கும் ஆண் விந்து
- பெண்ணின் உடலில் ஏற்பட்டிருக்கும் காயங்கள்

(காயங்கள் காட்டப்படாவிட்டால் அவள் சம்மதித்ததாகவே கருதப்படுகிறது. இதனால் வழக்கு விசாரணையில் காய ங்கள் முக்கிய சாட்சியங்களாகின்றன.)


- சம்பவம் நடந்த இடம், நேரம்.
- சம்பவ நேரத்தில் அவள் உடுத்தியிருந்த உடைகள் மிக முக்கியமான சாட்சியங்களாகக் கணிக்கப்படுகின்றன. விசேடமாக உள்ளாடைகள்.

இந்த சாட்சியங்களுடன் பொலிஸில் முறையீடு செய்யும் பெண் தனக்கு நடந்த சம்பவத்தை அப்படியே பொலிஸாருக்குச் சொல்ல வேண்டும். (பொலிஸ் நிலையத்திலுள்ள ஆண்கள் முன்நி லையிலேயே பெண் பலவாறும் விசாரிக்கப்பட்டு முறையீடு பதிவு செய்யப்படும்)

ஈ) பின்னர் அவள் 24 மணித்தியாலங்களுக்குள் மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பப்படுவாள். இலங்கையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு சட்ட மருத்துவர்கள் என்ற வீதத்திலேயே உள்ளனர். இதனால் ''24மணி நேரத்துக்குள்ளான பரிசோதனை'' என்பது சாத்தியமா என்பது சந்தேகமே. இவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2) குற்றவாளியை அவளால் யாரெனச் சரியாக கூற முடியாவிட்டால் சந்தேக நபர்கள் அழைத்த வரப்பட்டு அடையாள அணிவகுப்பு நடத்தப்படும். ஆண் அடையாளங் காணப்பட்டால் அவனும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவான். அவனது உடலிலிருந்து விந்து எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்படும். பெண்ணின் உடலில் காணப்பட்ட விந்தும் ஆணிடமிருந்த எடுக்கப்பட்ட விந்தும் ஒன்றா என பரிசோதிக்கப்படும் ( மூன்று மாதத்திற்குள் ஆண் அடையாளங் காணப்படாவிட்டால்/ தப்பிவிட்டால் வழக்கு தள்ளுபடியாகும்.)

அடுத்த இதழில் முடியும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போரும்!

நீங்கள் பிறந்தது பிறகு உங்கள் குழந்தைப் பருவம்; உங்கள் ஆளுமை உருவானது; இன்பங்களும் துன்பங்களும் பிணைய வாழ்ந்தது; என யாவும் நிகழ்ந்த தேசத்தை விட்டு விலகி - நீங்கி வேறிடம் ஒன்றில் இருக்கிறீர்கள். நீண்ட பிரிவு.... நீங்கள் வேர் கொண்ட மண்ணில் இருந்து நீண்ட பிரிவு. (காரணங்கள் எவையாகவும் இருக்கலாம்) பின்னர் உங்கள் தேசத்துக்குப் போவதாக முடிவு செய்கிறீர்கள். என்ன வகையான உணர்வில் நீங்கள் அமிழ்வீர்கள்? தான் வெறுங்காலுடன் ஓடித் திரிந்து பழகிய மண்ணில்தான் ஒரு மனிதனால் மனத்திருப்தியை உணர்ந்து கொள்ளமுடியும் என்பது சுவீடிஸ் எழுத்தாளர் வில்லியம்ஸ் மூ பெரியின் வார்த்தைகள்.

பருவ காலங்கள் ஒழுங்காக வந்து போகிற, வசந்தக் காற்றில் வெடி மருந்து மணக்காத, வெள்ளத்தில் ரத்தம் கலக்காத, வெளியை ஓலம் நிறைக்காதவோர் தேசம் என்றால்.... எனக்குத் தெரியும். நீங்கள் நெஞ்சம் நிறைந்த கிளர்வுடன் தான் போவீர்கள். உங்கள் தேசம் யாழ்ப்பாணமென்றும் கொழும்பிலிருந்து போகிறீர்கள் என்றும் வைத்துக் கொள்ளுங்கள். ஏன் உங்கள் முகம் வாடுகிறது....? இதயம் வேதனையில் நிரம்புகிறது....? போவதற்கு விருப்பமில்லையா....? போகும் வழிப்பாடுகளைப் பொறுக்கமுடியாதா....? இல்லை போய் எதிர்கொள்ளப்போகும் துயரங்களைத் தாங்க வலுவில்லையா...?

வடபுலம் நோக்கி புறப்பட்ட புகையிரதத்தில் இரவு நான் புறப்பட்டேன் எனது தேசம் நோக்கி. நீண்ட நாட்களின் பின்... ஆண்டவரே! துயரங்களைத் தாங்கும் வலுவை எனக்குத் தாரும். மக்களைப் ''புலிகளின் பிடியிலிருந்து'' விடுவிப்பதற்கு இவர்கள் ''முன்னேறிப் பாய்ந்த'' பிறகல்லவா போகிறேன். சிங்கம் பாய்ந்தது புலியிலா? மக்களிலா? என்று தெரியாமல் பதைப்புடன் போகிறேன். பத்திரிகைகளை வாசித்து பீ.பீ.சியையும் கேட்டு மனதை ஆற்றிக் கொள்ள முடியுமென்றால்.... போகாமல் விடலாம். அம்மாவை, அப்பாவை, அயலவரை, ஊராரை எண்ணி உலைப்புறுகிறது மனம். சோதனைகள் யாவும் தாண்டி நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். இளைஞன் ஒருவன் இவ்வாறு கூறுகிறான் ''இப்ப என்னைத் தமிழன் எண்டதுக்காக ஒருத்தனும் பிடிக்கேலாது'' உங்களுக்குப் புறிகிறதா? தமிழர் என்கிற இன உணர்வுக்கும் இருப்புக்குமான அரசியல் எல்லைக்குள் நாங்கள் அப்போது நடந்து கொண்டிருந்தோம். பிறகு, ஓமந்தையில் பயணிகள் தங்குமிடம். இருக்கும் வசதிகளைக் கொண்டு நேர்த்தியாக அமைக்கப்பட்டது. சிற்றுண்டிச்சாலை, ஓய்வெடுக்கும் மண்டபம், குளிக்குமிடம், மலசலகூட வசதிகள் உட்பட யாவும் ஒருங்கமைந்த அமைப்பை பெரும் வளவொன்றில் நிறுவியிருந்தார்கள். ஆயிரம் பேர்வரையில் தங்க முடியும். அப்பயணிகள் யாவரும் அங்கு தங்கியேதான் போக வேண்டும். தங்கிப் போனாம். கிறவல் புழுதியெழ கறள் பிடித்த வாகனம் நடுநடுங்கப் பயணம். இருள் கவ்விய கடலில் படகேறிப் பயணம். நீண்ட நாட்களின் பின் நட்சத்திரங்களை - எண்ணுக் கணக்கற்ற நட்சத்திரங்களைக் காண்கிறேன். நியோன் விளக்குகள் மாயமாய் ஒளிரும் நகரம் அமைதியைத் தருவதில்லை. இந்தக் கடல் கூட அச்சமுடன் கடக்கப்பட்ட நாட்களை யோசித்தேன். நான் யாழ்ப்பாணத்தை விட்டு வரும்பொழுது இதே கடலில் தலைக்கு மேலே ஒளிவீசும் குண்டுகள் (லேசர் புள்ளட்ஸ்) சீறிப்பாய தலை குனிந்தே வந்தேன். இன்றோ திரும்பிச் செல்லும் போது கடலில் காற்றும் கனவுகளும் நிரம்பியிருந்தன. விரால் மீன்கள் துள்ளிப் பாயும்.... ஓட்டி மூட்டிய பீடி ஒளிரும் இரவும் கடலும். தூரக் கரையின் ஒளிகள் தெரிகின்றன. இறங்குதுறை மனிதக் குரல்களால் நிரம்பியிருக்கிறது. படகுகளில் மோதிக் கடல் நீர் சளக்கிடுகிறது. ஈரக் காற்று... ஈர மண்... போரின் சாரம் தோய்ந்த வாழ்வு இப்பொழுது என்னில் மோதுகிறது. மறுபடி பயணம் யாழ் நோக்கி. தட்டிவான் ஆட்கள் முட்டி வழிகிறது. கூரையின் மேல் ஏறிக் கொள்கிறேன். தள்ளாடி மூச்செறிந்து போகிறது வான்.

''ஓ! வண்டிக்காரா ஓட்டு வண்டியை ஓட்டு போவோம் புதிய நகரம் நோக்கி'' வானத்து ஒளியில் கண்டி வீதி நீள்கிறது.

பாதை மருங்குநீளம் ஐம்பது அடிக்கு ஒரு இடைவெளிகளில் எதிர்காலச் சந்ததிகளுக்காக நடப்பட்ட மலை வேம்பு, வேம்பு, மகோகனி இன்னும் பல மரங்கள் சிறுபருவப் பாலகர்கள் போல மூரி மட்டைக் கூடுகளுள் ஆடுகின்றன.

இருள் புலரும் பொழுதில் நான் வீடு சேர்ந்தேன். அம்மா கண்கலங்க என்னைப் பார்க்கிறாள். தங்கச்சி கட்டிப்பிடித்துக் கொஞ்சுகிறாள். தம்பி முகத்தில் சலனமற்று நிற்கிறான். அவன் ஏன் இறுகிப் போயிருக்கிறான்?





முற்றமும் பதுங்கு குழியானது முடியாதோ...?

உடனடியாக இடம்பெயர்ந்து முகாம்களில் பதிவுசெய்த குடும்பங்கள்

| | |
|---|---|
| 1. யாழ்ப்பாண நலன்புரி முகாம் | - 7,500 |
| 2. சாவகச்சேரி நலன்புரி முகாம் | - 1,500 |
| 3. கோப்பாய் நலன்புரி முகாம் | - 4,200 |
| 4. நல்லூ ார் நலன்புரி முகாம் | - 9,000 |
| மொத்தம் | - 22,200 |

(உடனடியாக 91 நலன்புரி முகாம்கள் யாழ்ப்பல்கலைக்கழகம் உட்பட திறக்கப்பட்டன)

இன்னுமொருமுறை இராணுவம் வரும் என்றால் தன்னை தேட வேண்டாம் என்று அவன் அம்மாவிடம் சொன்னானாம்.

9.07.1995க்குப் பின்னர் யாழ்ப்பாணம் செல்லும் எவரும் உடன் போக விரும்புமிடம் நவாலி. ''தேவாலயம் நிமிர்ந்து நிற்கிறது. குண்டு வீசப்படவில்லை. அருகில் இருந்த புலிகளின் நிலத்தடி வெடிமருந்துச் சேமிப்புக் கிடங்கு வெடித்தே மக்கள் பலியாகினர்'' என்று அரச செய்திப் பத்திகையான தினகரன் செய்தி வெளியிட்டிருந்தது. சாதாரணமாக கிருஸ்தவ தேவாலயம் என்றவுடன் யாவரும் நினைப்பது பரந்த வளவொன்றில் சுற்றிவர பாரிய இடவசதி கொண்ட தேவாலயம் ஒன்றையே. நவாலி செண்.பீட்டர்ஸ் தேவாலயமோ சிறியது. யேசுவானவர் குடியிருந்த கட்டிடத்திலிருந்து பதினைந்து யாருக்கப்பால் நாற்புறமும் குடிமனைகள். ஒன்பதாம் திகதி சிங்கம் முன்னேறிப்பாயத் தொடங்கிய போது மக்கள் சாரி சாரியாக இடம் பெயர்ந்தனர். ஒழுங்கைகளுக்குள் தலைதெறிக்க ஓடினர். குழந்தைகள் புரியாத பயத்தில் பெற்றவர் கைகளைப் பற்றிக் கொண்டனர். வண்டில்களை மாடுகளும் மனிதர்களும் இழுத்துக் கொண்டோடினர். கிழடு கட்டைகள் மூட்டை முடிச்சுக்களோடு வண்டில்களில் தொங்கினர். நாற்புறமிருந்தும் ஷெல்கள் பொழியத்தொடங்கின. புலிகளைத் தாண்டிப் போய் அவை வீழ்ந்து வெடித்தன. அம்மா எங்கை... தம்பி எங்கை... அக்கா எங்கை... அப்பா எங்கை... ஓடு! ஓடு!!. வெடிகள் அண்மிக்கின்றன. இதயங்கள் அதிர்கின்றன. பூமியும் கூடவே. ஆண்டவனே! எங்கு போவது? சிறுமி ஒருத்தி அழுதபடி ஓடுகிறாள். வயல் வெளிகளில் கவச வாகனம் வருகிறது. துவக்கு நுனிகளில் தீப்பிழம்பு பளிச்சிடுகிறது. யுத்தத்தின் கோர அலறல்.

மக்களோ ஓடுகின்றனர். ''மக்களே! தேவாலயங்களிலும் கோவில்களிலும் தங்குங்கள் நாங்கள் தேவன் உறையும் இடங்களைத் தாக்குவதில்லை''. அறிவித்தல்கள் வானொலியில் கேட்டன. மக்களும் கேட்டனர். நம்பினர். நம்புவதை விடவும் தங்குவதற்கு வேறு புகலிடம் இல்லையே! தேவன் நிழலே தஞ்சம். சிலரோ அப்பாலும் ஓடினர்... மூளாயில் இருந்து தலையில் தூக்கிய இறங்குப் பெட்டியுடன் ஓடிய ஆச்சியும் அப்புவும் கொடிகாமத்தில் ஓர் மரநிழலில் தான் நின்றனர். நின்று திரும்பிப் பார்த்தனர்.

அவர்கள் பார்த்த திக்கில் நடந்து முடிந்திருந்தது ஓர் பயங்கரம்... கொடூரம்... அவலம்.... தேவன் நிழலில் தஞ்சமடைந்தவர்களைப் பாருங்கள். பிஞ்சுகள் பெடிபெட்டைகள், பெண்டுகள், அப்புமார், ஆச்சிமார் தேவாலயத்தின் அச்சிறு முன்றலில் குந்தியிருந்தனர். இன்னும் இன்னும் வந்தபடிதான் மக்கள். பிரிந்த குடும்பங்கள். தாயற்ற பிள்ளை, ஆச்சியை விட்டு வந்த அப்பு, அப்பா இன்னும் வரேல்லையே.... ஏன்? சமாதானம் இப்படி வருமென்று நீங்கள் நினைத்தீர்களோ. நேரம் செல்லச் செல்ல தேவாலயம் நிரம்பி அயல் மனைகளும் நிரம்பியது. அவலம் நிரம்பியது. முதியவர் ஒருவர் சொல்கிறார் ''தம்பி, நான் பாத்துக் கொண்டிருக்கிறன்... ஓம் தம்பி... நான் பாத்துக் கொண்டிருக்க புக்காரா பதியுது. எட்டுக் குண்டுகள் தம்பி... என்ரை ஆண்டவரே! எட்டுக் குண்டுகள்''. தேவாலய அத்திவாரத்திலிருந்து ஐம்பது மீட்டர் கூடஇல்லை. யாவும் வெடித்தன. எங்கள் செவிப்பறை மென் சவ்வுகள் எவ்வளது அதிர்வுள்ள ஒலியைத் தாங்கும்? இலங்கைப் பாராளுமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது யாரேனும் ஒருவர் கேளுங்கள்.

சிதறிப் போன வீடுகளை உங்களுக்குக் காட்டுவேன். நிமிர்ந்து நிற்கும் தேவாலயத்தையும் காட்டுவேன். ஆனால் சிதறிப்போன உடல்களையும் மனங்களையும் எப்படிக் காட்டுவேன். தேவன் கோவில் சுவர்களில் செந்நீர் தெறித்து வழிந்தது. தசைப் பிண்டங்கள் ஒட்டிக் கொண்டன. அம்மாவின் வயிறு பிளந்து பிள்ளை தெரிந்தது. தவழ்தல் வென்று தளர் நடை பயிலும் மழலை ஒன்று மண்ணில் சரிந்தது. ஆச்சி மண் தின்னவா மண்ணுள் முகம் புதைத்தாய். ஆச்சியை நிமிர்த்திவிடு. ஓலம் வானத்தை அறைகிறது. மனைவியின் பிணத்தின் முன்னிருந்து குழந்தையைப் கையிலேந்தி உன் தலையை அறை..... நெஞ்சை அறை.... அழு.... நன்றாக அழு.... அவள் எழும்ப மாட்டாள். உன் தலையைக் கோதமாட்டாள். உன் பிள்ளைக்கு முலை தந்து பாலூட்ட மாட்டாள். அம்மா எத்தனை பிள்ளைகள் உனக்கு? எங்கே உன் கணவன்? விழி வற்றி வரண்டு போனதே! அழ வாய் இன்றி அமந்து போனாய். அப்பா எங்கே என்று அழும் உன்சின் மகளுக்கு கூட்டி அள்ளிக் கூடையில் போட்டு கொண்டுபோய் அப்பாவைக் கொட்டினார்கள் என்றா சொல்வாய்? அப்படித்தான்..... அப்படியேதான்... அள்ளடா. அடையாளம் தெரியாத உடலங்களையெல்




போகவரப் புதிய நிலையம்.....


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





அழிவுப்பாடுகள்
அஞ்சலிப்பிரார்த்தனைகள்
என் அம்மா எங்கே?



...கோவில்.....
...தைந்த.....



...கள் ஓடும்
... ஓடும்....



... நிறைந்து
... குமையும்....

லாம் அள்ளு. ஒன்றாகப் போடு.... அந்தக் கையை எடு... அந்தத் தலையை எடு.. மிஞ்சிய அந்த இறைச்சிக் குவியலையும் அள்ளு.. போகிறது உழவு இயந்திரம்... பொற் சுண்ணப் பாடலில்லை. தேவாலய மணியில்லை.. பொன்னான மேனியிலே ஒரு பொல்லாப்பு வந்ததென்ன...

யாழ்ப்பாண தேசம் துயரங்களைத் தாங்கிக் கொள்கிறது. உடல்களை அள்ளினர். குருதியைக் கழுவினர். இடிபாடுகளை அகற்றினர். மிஞ்சியவர்களைச் சேர்த்துக் கொண்டு வாழப் புறப்பட்டனர்.

முன்னேறிப் பாய்தல் எனும் இராணுவ நடவடிக்கை பாரிய பிரதேசத்தை - வலிகாமத்தின் வளமான பயிர்செய் நிலத்தை நாசமாக்கி மக்களுக்கு உயிர், உடமை இழப்புக்களை ஏற்படுத்தியதைத் தவிர வேறு வெற்றிகள் எதனையும் சாதிக்கவில்லை.

மக்களின் இடம்பெயர்வு என்பது இன்றைக்குப் பாரியதொரு பிரச்சினையாக உணரப்படுகிறது. ஓர் இராணுவ நடவடிக்கையின் பின் இரண்டு வகையான பிரதேசங்கள் உருவாகின்றன. (1) நிரந்தரமாகவே இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடுகிற பகுதி. (2) இராணுவத்தின் கட்டுப்பாட்டிலில்லாத ஆனால் மக்கள் வசிக்க முடியாத சூனியப் பகுதி.

மூன்றாவது ஈழப்போரின் ஆரம்பத்தின் பின்னர் 'இராணுவம் தனது முன்னணிப் பாதுகாப்பு அரண்களுக்கு வெளியே வந்து தாக்குதல்களை மேற்கொள்வதும் பின்னர் திரும்புவதுமான போர் உத்தியை கையாளத் தொடங்கியது. புலிகளும் இவ்வுத்தியை உணர்ந்து கொண்டு வலுச் சண்டைகளைத் தவிர்ப்பதும் இராணுவத்தை அவர்களது முன்னனிப் பாதுகாப்பு அரண்களிலிருந்து நீண்ட தூரம் இழுத்து வந்த பின்னரே தாக்குவதுமான உத்தியை பதிலாகக் கைக்கொள்ளத் தொடங்கினர். இக்''கலைத்துப் பிடித்து விளையாடும்'' விளையாட்டின் விளைவு இராணுவக் கட்டுப்பாட்டிலில்லாத ஆனால் மக்கள் வசிக்க முடியாத சூனியப் பிரதேசத்தின் அளவதிகரித்ததாகும். இதனால் இடம் பெயரும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு விடுவிக்கப்பட்ட பிரதேசத்தின் எல்லை இராணுவத்தில் முன்னணிப் பாதுகாப்பு அரணிலிருந்து மூன்று அல்லது நான்கு கிலோமீற்றர் தூரத்துக்கிடையில் ஊடாடியபடி இருக்கும். இடம் பெயரும் மக்கள் இராணுவம் போனபின்பும் கூட மீளக் குடியேற அச்சம் கொள்கிறார்கள். மீளக் குடியேறினாலும் எந்நேரமும் ஓடித் தப்புவதற்கான நோக்கமுடன் நிலையற்ற அன்றாட வாழ்வையே வாழ்கிறார்கள். வட்டுக்கோட்டை, அராலி, மூளாய், சித்தங்கேணி, சில்லாலை, மாசியப்பிட்டி, அளவெட்டி, மல்லாகம், சுன்னாகம், ஏழாலை ஆகிய பிரதேசத்து மக்கள் இவ்வாறான நிலையில் உள்ளனர்.

நிரந்தரமாக இடம்பெயர்வோரில் 80%மான மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டிலில்லாத யாழ்ப்பாண மையப்பகுதி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் உறவினர்களினதோ அறிந்தவர்களினதோ வீடுகளில் தங்கிக் கொள்கிறார்கள். சிலர் வாடகைக்கு வீடுகளை பெற்றுக் கொள்கிறார்கள். பொருளாதார ரீதியாக வசதியற்றவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களுமான 20%த்தினர் தங்குமிட வசதிகள் அற்று நலன்புரி முகாம்களில் (அகதி முகாம்) தங்குகின்றனர். யாழ் மாவட்டத்தில் வலி-வடக்கு, வலி-தென்மேற்கு, வலி-மேற்கு, வலி-கிழக்கு, வடமராட்சி கிழக்கு, தீவக வடக்கு, தீவகத் தெற்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகள் முழுமையாகவோ பகுதியாகவோ பாதிக்கப்பட்டதனால் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். யாழ் மாவட்டத்தின் மொத்த நிலப்பகுதியில் 32%மான பகுதி நிரந்தரமாக இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது.

யாழ் மாவட்டத்தில் மட்டும் ஏறத்தாழ 190 நலன்புரி நிலையங்கள் உள்ளன. இந்நலன்புரி நிலையங்களில் ஏறத்தாழ 39,500 குடும்பங்கள் உள்ளனர். இந்நலன்புரி நிலையங்களைக் கூட மீண்டும் மீண்டும் தொடரும் இராணுவ நடவடிக்கைகளால் கைவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

| ஒப்பரேசன் லீப் போவேட் (Operation Leap Forward) சில விபரங்கள் | | |
|---|---|---|
| 1. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் (பாரிய காயங்களுக்காக) | - | 856 |
| 2. இறந்தவர்கள் (தேவாலய சூழலில் உடனடியாக இறந்த 120 பேர் உட்பட) | - | 220 |
| 3. சிறுகாயங்களுக்காக சிகிச்சை பெற்றுத் திரும்பியவர்கள் | - | 1,414 |
| மொத்தமாக | - | 2,490 |

நலன்புரி நிலையம் ஒன்றை அமைக்கும் போது தங்கும் குடில்கள், மலசல கூட வசதிகள், குடிநீர் வசதி, மருத்துவம், கல்வி வசதி போன்றவற்றைக் கவனிக்க வேண்டியுள்ளது. இவை யாவும் ஒருங்கமைந்த நிலைமையில் எந்த நலன்புரி நிலையங்களும் இல்லை. மறுகரையில் எந்த நலன்புரி நிலையமும் மக்கள் தனது சொந்த நிலத்தில் வேர் கொண்டு வாழ்வது போன்ற வசதிகளை அளிக்க முடியாது. மக்கள் இந்த அகதி முகாம்களில் அனுபவிக்கும் துயரங்கள் சொல்லி மாளாது. நெருங்கி அமைந்த சிறு சிறு குடில்களுக்குள் வாழ்க்கையின் எல்லா ஒழுங்குகளையும் அடக்கி விட முடியுமா? நலன்புரி நிலையங்களில் வாழ்வோர் எதிர் கொள்ளும் மற்றுமொரு பிரச்சினை சீவனோபாயத்திற்கான வேலை தேடுவதாகும். உதாரணமாக, கடற்தொழிலாளர்கள் குடாநாட்டின் மையப்பகுதியில் இருந்தபடி தமக்குக் கைத்தேர்ச்சியான கடற்தொழிலை செய்ய முடியாது. மேலும், தொழில் தேடி நீண்ட தூரங்களுக்கு செல்ல வேண்டியும் ஏற்படுகிறது. இடம் பெயர்ந்து வாழும் பிரதேசங்களிலேயே கூலிவேலை செய்ய முற்படும் போது ஏற்கனவே அங்கு நிரந்தரமாக வாழ்ந்து வரும் தொழிலாளர்களுடன் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இம்முரண்பாட்டில் முதன்மை, இடம் பெயர்ந்தவர்களுக்குக் கிடைப்பதில்லை. அநேகமானவர்கள் விறகு வெட்டிகளாக மாறியுள்ளனர். தென்மராட்சியின் சிறுசிறு பற்றைக் காடுகளை நோக்கி இருபது, முப்பது மைல்கள் சைக்கிளில் ஓடி, சுமக்க முடியாப் பாரத்தை ஏற்றி, சுவாசப்பைகள் உலை முகத் துருத்தி போல மூச, சைக்கிளை உழக்கி வந்து ஒரு பாரம் ரூபா முந்நூற்றி ஐம்பதுக்கு விற்கிறார்கள். ஒவ்வொரு பயணமும் உயிரைத்தின்னும் பயணம்.

சாவகச்சேரிப் பகுதியில் மீளக்குடியமர்த்தலுக்காக (Relocate) புதிய நலன்புரி நிலையமொன்று அமைக்கப்பட்டு வருகிறது. சிறு பற்றைக் காடுகளை அழித்து கடும் வெயிலில் தங்களுக்கான இடங்களைத் தாங்களே துப்பரவு செய்து கொண்டிருந்தனர் அகதிகள். 'திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை' என்பார்கள். செம்மனச் செல்விக்கு மண்ணள்ள இறைவன் வந்தான் என்பார்கள். பாருங்கள்... யாருமற்ற ஆச்சி ஒருத்தி தனது இடத்தை தானே துப்பரவாக்கிக் கொண்டிருந்தாள். காற்றை வென்று கடலை வென்று, கரையெல்லாம் தன்மகன் மீன் நிறைத்த கதை சொல்லி, அவள் அழுகிறாள்.... சிறுமியொருத்தி மூன்று கல்லு வைத்துத் தீ மூட்டித் தேனீர் வைக்கிறாள்.... அவள் அம்மா சொ.. கிறாள்: ''அவளுக்கு என்ன தெரியும்.'' அப்பனைத் தொலைத்த கதை அவள் வளரச் சொல்லம்மா! மக்கள் இடம்பெயரும் துயரங்களாகிப் போயினர். அவர்களுக்கு இப்போது புரிகிறது. யுத்தத்தை, அனர்த்தங்களை தடுத்து நிறுத்தும் அதிகாரம் தம்மிடம் இல்லையென. எனவேதான் அவர்கள் திடீர் பேரிடர்களுக்கு உடனடியாகவும் நீண்ட கால அடிப்படையிலும் முகம் கொடுப்பது எப்படியெனச் சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள். எனவே திடீர்ப் பேரிடர் தோற்றுவிக்கும் முழுப்பிரச்சினைகள் பற்றிய கல்வியூட்டலை அவர்கள் திட்டமிடத் தொடங்கியுள்ளனர். இப்பணியில் யாழ்ப்பாணத்தில் தொழிற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் (TRO) ஈடுபட்டுள்ளன. தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தின் செயற்பாடுகளை இடம் பெயர்ந்தவர்களும் புனர்வாழ்வுப் புணியாளர்களும் சிலாகித்துப் பேசுகின்றனர்.



உடலம் சிதைந்து உதிரம் வழியும்.....

யாழ் குடாநாடு சனப்பெயர்ச்சியை முன்னொருபோதும் இல்லாதவாறு சந்தித்துள்ளது. இப்பெயர்ச்சி மேலும் சில பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. முக்கியமாக கல்வித் துறையில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. யாழ் குடாநாட்டிலுள்ள ஏறத்தாள் 500 பாடசாலைகளில் 235 பாடசாலைகள் அழிந்துள்ளன. 94 பாடசாலைகள் கைவிடப்பட்டுள்ளன. சில பாடசாலைகள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இட வசதியின்மை காரணமாக பல பாடசாலைகள் மாலை நேரப் பாடசாலைகளாக ஆக்கப்பட்டுள்ளன. சில தீவகப் பாடசாலைகள் இடம் பெயர்ந்த பின்னர் மாணவர் தொகையினை விடவும் ஆசிரியர் தொகையினை அதிகம் கொண்டுள்ளன. பொதுவாக யாழ்ப்பாணத்தில் கல்வி நிலையை நோக்கும் போது தேர்வு முடிவுகளை நோக்கிய அவதானிப்பாளர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ''ஆண்டு ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட முதன் நிலைத் தேர்வுப் பரீட்சைகளில் மாணவர்கள் குறிப்பிடத் தக்க பெறுபேறுகளைக் காட்டினர். பொதுக் கல்வித் தேர்வில் (O/L) அனேகமானவர்கள் தமிழ் மொழிப் பாடத்தில் பூச்சியப் புள்ளிகளை பெற்றமை அவதானிக்கப்பட்டது. அதேவேளை இடம் பெயர்ந்த மாணவர்கள் குறிப்பாக தீவகப் பகுதி மாணவர்கள் யாழ் மாவட்டப் பாடசாலைக்கு சமனான அடைவுகளை மேற்குறித்த பரீட்சைகளில் பெற்றுக் கொண்டதை அவதானிக்க முடிந்தது. இது தீவக மாணவர்களின் சமூக நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக இருக்கலாம்.'' யாழ்ப்பாணச் சமூகக் கட்டமைப்பினுள்ளும் சில மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. பிரதேசப் பாகுபாடுகளை பௌதீக ரீதியாக மக்கள் இழந்துள்ளனர். திருமணங்கள் தத்தமது ''குறிச்சிகளுக்கு'' அப்பாலும் நிகழ்கின்றன. கலப்புத் திருமணங்களும் நிகழ்கின்றன. யாழ்ப்பாணத்தின் சமூகவியலாளர்களுள் ஒருவரான பேராசிரியர் கா.சிவத்தம்பி பின்வருமாறு குறிப்பிடுகிறார். ''ஏறத்தாழ இந்த சமூகம் (யாழ்ப்பாண) உருவான காலம் முதல் இன்று வரை பாரிய அளவுக்கு சனப்பெயர்ச்சி ஏற்பட்டதில்லை. இப்பொழுதுதான் அந்தப் பெயர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்தப் பெயர்ச்சிகள் நிச்சயமாக ஓர் மாற்றத்தை ஏற்படுத்தும். பெயர்ச்சி இல்லாதவரை இந்த அடுக்குமுறை (யாழ்ப்பாண சமுதாயம் என்பது இறுகிய அடுக்கமைப்புக் கொண்ட சமுதாயம். இது நிலமானிய அமைப்பைச் சேர்ந்த சமுதாயம். குறிப்பாக ஆசிய உற்பத்தி வழிமுறையிலான நில மானிய அமைப்பு) அப்படியே பேணப்படும். உதாரணமாக திருநெல்வேலி என்பது பாரம்பரியமாக உயர்மட்டத்தினர் வாழ்கின்ற இடம். அங்கு இப்பொழுது இடம்பெயர்ந்தோர் நிறையப் பேர் இருக்கின்றார்கள். இனி இந்த அடுக்கு நிலையைப் பேணுவது என்பது சாத்தியமில்லாது போய்விடும். நாளை இந்த மாற்றங்கள் அப்படியே தக்கவைத்துக் கொள்ளப்படும் என்றுதான் நினைக்கிறேன்.

# வாழ்வோம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அரசியல் யாப்பு சீர்திருத்தமும் மலையக மக்களும் (இறுதிப்பகுதி)



# மலையக மக்களுக்கான அரசியல் தீர்வு என்ன?

பீ.ஏ.காதர்

இதுவரை சுதந்திர இலங்கையில் வரையப்பட்ட இரு யாப்புகளிலும் மலையக தலைமைகள் குறிப்பிடத் தக்க எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

இலங்கை தமிழ்த் தலைமைகள், குறிப்பாக தந்தை செல்வநாயகத்தின் காலத்தில், இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழர்களின் நலன்களை பாதுகாக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்டு பாராளுமன்றத்திற்கு வெளியிலேயே தமது ஜனநாயக போராட்டங்களை நடத்தின. அவர்கள் எப்பொழுதும் ஒரு ரசியல் கோரிக்கையை தமது மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக முன்வைத்து வந்துள்ளனர்.

40களில் ஐம்பதுக்கு ஐம்பது 50களில் சமஷ்டி, 60களில் மாவட்ட சபை, 70களில் சுயாட்சி இப்படி அவர்களது கோரிக்கைகள் வலுப்பெற்று வந்துள்ளன.

சோல்பரி அரசியலமைப்பிலே அவர்களது வலியுறுத்தலால் 29ம் சரத்து சேர்க்கப்பட்டது. தனிச் சிங்கள சட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நீதிமன்ற -நிர்வாக மொழியாக தமிழை ஆக்கிக் கொண்டனர். 1972 யாப்பில் அதை உறுதிப்படுத்திக் கொண்டனர். அவர்கள் விட்ட தவறுகள் எவ்வாறாயிருப்பினும் அவர்கள் எப்போதும் ஒரு அரசியல் கோரிக்கையை முன்வைத்தே வந்துள்ளனர்.

ஆனால் மலையகத் தலைமைகள் ''தொழிற் சங்கக் கண்ணோட்டம்'' கொண்டவையாக இருந்து வந்துள்ளன. அன்றாட நிர்வாக தொழிற் சங்க பிரச்சினைக்கு அப்பால் அவர்களது பார்வை செல்லவில்லை. அவர்களால் அரசியல் தீர்வுக் கோரிக்கை எதுவுமே முன்டனெடுக்கப்படவில்லை. அரசியல் கோரிக்கையை முன்வைத்து அதனை மக்கள் மயப்படுத்தி, அதனை அடைவதற்காக பாராளுமன்றத்திற்கு வெளியே ஜனநாயக போராட்டங்கள் நடத்துவது பற்றிய சிந்தனை எழவே இல்லை.

சம்பள உயர்வு -பிரஜாவுரிமை இவ்விரு கோரிக்கைகளுக்கும் அப்பால் அவர்களது கோரிக்கைகள் வளர்ச்சி பெறவில்லை. காரணம் மலையகத் தலைமைகள் தொழிற் சங்க தலைமைகளாகவே இருந்து வந்துள்ளன. உதாரணமாக; மலையகத்தில் 50வருடங்களுக்கு மேலாக ஆதிக்கம் செலுத்தி வருகின்ற இ.தொ.கா. ஒரு தொழிற்சங்கமே- அரசியல் கட்சியில்ல. 1977ல் தேர்தலில் போட்டியிடுவதற்காகவே இ.தொ.கா. அரசியல் பிரிவு ஒன்று பதிவு செய்யப்பட்டது. தேர்தல் ஆணையாளரால் இ.தொ.கா. அரசியல் பிரிவு என்றே பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறைந்தது மூன்று சந்தர்ப்பங்களிலாவது தொழிலாளர் பலத்தை வைத்து அரசியல் கோரிக்கை எதையும் வென்றெடுத்திருக்கலாம். முதலாவது சந்தர்ப்பம் 1983 வன்செயலின் பின்னர் உருவானது. உலக அனுதாப அலையைப் பயன்படுத்தி அரசியல் கோரிக்கையை வென்றெடுத்திருக்கலாம். 1983 வன்செயலால் மலையகத் தமிழரே பெரிதும் பாதிக்கப்பட்டனர். மலையகத்தில் ஒரு குமுறல் நிலை காணப்பட்டது. மலையக மக்கள் எத்தகைய போராட்டத்திற்கும் தயாராக இருந்தனர். ஒரு தலைமை மாத்திரமே தேவைப்பட்டது. குமுறிக் கொண்டிருந்த மலையக மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் அல்லது அவர்களை திருப்திப்படுத்தும் வகையில் ஜனாதிபதியிடம் 9.9.83ந் திகதி வலியுறுத்துவதற்காக இ.தொ.கா. 15 தீர்மானங்களை நிறைவேற்றியது. அதில் **முதற் தடவையாக ஒரு பிரதான அரசியல் கோரிக்கையை முன் வைத்தது.** அத்தீர்மானம் வருமாறு.

"(13) 280,000 சனத்தொகையைக் கொண்ட முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய பிராந்தியங்களுக்கு மூன்று மாவட்டங்கள் இருக்கின்றன. மற்றொரு மாவட்டம் -கிளிநொச்சி உருவாக்கப்படுவது பற்றி ஆராயப்பட்டு வருகிறது. மத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழர், அவர்களின் வாழ்வை வளம்படுத்திக் கொள்ளும் பொருட்டு, இது போன்ற நிறுவன அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். இப்படி புதிதாக உருவாக்கப்படும் மாவட்டங்களுக்கு வெளியே வாழும் இந்திய வம்சாவழியினர் தங்கள் நல்வாழ்வை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, அங்கு குடியேறி குடியேற்றங்களை அமைப்பதற்கு முதன்மை வழங்கப் படல் வேண்டும்.''

ஆனால் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தவோ, மக்கள் மயப்படுத்தவோ இல்லை. மாறாக, இக் கோரிக்கைக்கு ஆதரவு தேடுவதற்கு பதிலாக தொண்டமான் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை கண்டித்து தமிழகத்தில் நடைபெறவிருந்த 'ஹர்த்தாலை'' கைவிடுமாறு கோரி தமிழகம் சென்று தமிழக அமைச்சர் காளி முத்துவால் ''தொண்டமான் அமைச்சராக இருக்கலாம்'' ஆனால் ஜே.ஆருக்கு அவர் ஒரு தோட்டி'' என கடும் கண்டனத்துக்கு உள்ளானார்.

2. திம்பு பேச்சு நடைபெற்ற போது சகல தமிழ்ப் போராளிக் குழுக்களும் மலையக மக்களின் பிரச்சினையில் அக்கறை காட்டின. சகல தமிழர் அமைப்புகளினதும் ஆதரவோடு மலையக மக்களுக்கு அரசியல் தீர்வு ஒன்றை வலியுறுத்தியிருக்கலாம்.

3. ஜே.வி.பி பலம் பெற்று திகழ்ந்த சூழலில் 1983 ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு பிரேமதாச பெரிதும் இ.தொ.கா.வில் சார்ந்திருந்தார். இச்சந்தர்ப்பத்தை இ.தொ.கா சரியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம்.

மக்களை அரசியல் மயப்படுத்துவதில் கட்சித் தலைமைக்கு பெரும் பங்குண்டு. அரசியல் கோரிக்கையை- தீர்வை- முன்வைத்து தொடர்ச்சியாக வலியுறுத்தாமல் மக்களை அரசியல் மயப்படுத்த முடியாது.

அண்மையில் உருவான முஸ்லீம் காங்கிரஸ் கூட கிழக்கு முஸ்லீம்களுக்கென பிராந்தியரீதியான தீர்வைக் கோருகிறது. சனத்தொகையில் ஏறத்தாள அதேயளவுள்ள முஸ்லீம்களை விட எண்ணிக்கையில் அதிகமானோர் ஒரே பிரதேசத்தில் செறிவாக வாழ்கின்ற மலையகத் தமிழருக்கு என்ன அரசியல் தீர்வை இனி மலையகத் தலைமைகள் முன்வைக்கப் போகின்றன என் பதிலேயே மலையக மக்களின் எதிர்காலம் மாத்திரமல்ல மலையகத் தலைமைகளின் எதிர்காலமும் தங்கி இருக்கிறது.

அரசியலமைப்பு மீள்வரையப்படும் இச்சந்தர்ப்பம் மலையக மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்ஸ்வ்ப்பதற்கு ஏற்ற தருணமாகும்.

●

நெஞ்சச் சிறு குழியின் உள்ளிருந்து பிளிறுகிறது ஏக்கம்
என் துயரம் எப்பொழுதும் வாழுமோ
என் கவிதையை போலே
வெறுவான நுனியில் தலைநிமிர்த்திய
புளிய மரத்தின் சிற்றிலையின் கனவினதே அளவான
என் கனவுகள் காற்றாடியின் அலகுகளில்
கறுப்பாகி படிந்துள்ளன

சில நாட்களின் முன் எழுதிய
என் கவிதை இப்படி இருந்தது
ஓர் காதல் கவிதைக்குரிய தொடக்கம் இருந்ததாக நீங்கள்
நம்பத்தொடங்குமுன் வாசியுங்கள்:-

"வெறுமை மெல்ல மெல்ல அழிந்து போனது
மண்ணுடன் புரண்ட அலைகளில் குமுறல் இல்லை
பௌர்ணமி நிலவோடு
காற்றோ விசும்பின் கதைகள் ஆனது
தெப்பக் குளத்தில் மெல்லென விழுந்த பூவெனக்காதல்
என்னுள் ஆடுகிறது.
ஆத்மாவினுள் பிறந்து விழிகளில் பரிதவித்து
உன்னைத்தேடி ஏங்குகிறது காதல்
அந்திமாலை வேளைகளில்"
(என்ன!
கரைகள் ஈரப்படுத்தும் துயரம் இருக்கவே செய்யும்
என்று உணர்கிறீர்களோ!)


உன் ஆத்மாவை மூன்றாம் மனித வார்த்தைக்குள் காணுவது
முடியாது
என்பதைப் போலவே
விழியும் விழியுள் ஒளிரும் காதலும்
சாஸ்வதமாயிருக்கும் எனவும்
எந்தக் கண்ணீரிலும் கரையாதிருக்கும் எனவும்
எந்த வார்த்தைகளுக்கும் அஞ்சாதிருக்கும் எனவும்
நான் நம்பேன்

என் காதல் இனியொரு முறை கெஞ்சாது
இளவேனில் கால தளிர் போலும் உதடுகளைக் கௌவி
வசந்தகால ஊர்க்குருவியின்
உயர்வானச் சறுக்கல் போல
காதலின் ஆழியுள் ஓர் நாள் போவேன்.
உன் ஆத்மா எனக்கு பொய் சொல்லாது என்றால்
இன்னொரு வசந்தத்துக்கு இந்த வேனிலில் வாடியிரு!

நானே என் நெஞ்சத்தில் அகழ்ந்த மாயச்சுனையில்
நீர்மொண்டு அருந்த முயன்று மாய்ந்தேன் என்றால்
நோவதற்கும் நொந்தழுது பாடுதற்கும் பின்
வாழ்வதற்கும் நானேயானேன்.

●

8. 8. 1995
இரவு 9.45



## தெ. புவனேந்திரனின் கவிதையொன்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வலுவிழந்த கர்ணகடூரம்!

சரிநிகர் 77வது இதழில் வவுனியாவைச் சேர்ந்த நண்பர் எஸ். ரவீந்திரனின் மனவருத்தத்தைப் படித்தேன். நாசமறுப்பான் தனது கட்டுரையின் எந்தவொரு இடத்திலும் ராஜன் ஹூல் அணியினருக்கு (யாழ் பல் கலைக்கழகம் உத்தியோகபூர்வமாக மறுத்த பின்னரும் அவர்கள் விளம்பர வசதிகளுக்காக தங்களை யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் என அழைத்துக் கொள்வது நேர்மையீனமானது என்பது என் கருத்து) ஒரு அரசியல் கருத்து இருக்கக்கூடாது என்று குறிப்பிட்டிருக்கவில்லை. ஆனால் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தல் போன்ற மிகுந்த நடுநிலைமையுடன் செய்யப்பட வேண்டிய பணிகளில் ஈடுபடுவோர் பிரச்சினையின் (Conflict) ஒரு தரப்பு அரசியல் கருத்துக்கு சார்பாக/எதிராக இயங்க முற்படும்போது அவர்களின் பணியில் இடம் பெறக்கூடிய பாரபட்சம், நம்பகத்தன்மையிழப்பு போன்ற ஆபத்துக்களைச் சுட்டிக்காட்டுவதே நாசமறுப்பானின் கருத்தாக விருந்தது.

சரிநிகரின் கருத்துக்களோடு எனக்குள்ள முரண்பாடுகள், உடன்பாடுகள் ஒருபுறமிருக்க, என்னைப் பொறுத்தவரையில் சரிநிகரின் 75வது இதழ் ஈழத்தமிழரின் இதழியல் வரலாற்றில் ஒரு சாதனை என்றே கருதுகிறேன்.

ரவீந்திரனின் அபிப்பிராயப்படி, சரிநிகர் ஆசிரிய பீடம் எல்லாக்கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்று கூறியபடி எதிரெதிரான கருத்துக்களைப் பிரசுரித்தாலும் பத்திரிகையை முழுமையாக வாசித்து முடித்ததும் சரிநிகர் சாதுரியமாகவும் மறைமுகமாகவும் புலிகளை நியாயப் படுத்துவதை உணர்வதாகச் சொல்கிறார். ஒரு நேர்மையான பத்திரிகை பிரச்சினையொன்றின் இருபக்கக் கருத்துக்களையும் பிரசுரிப்பதன் நோக்கம் அதன் வாசகர்கள் இருபக்கக் கருத்துக்களையும் அறிந்து கொள்ளவேண்டும் என்பதே. இவ்விரு கருத்துக்களையும் ஆராய்ந்து அவ்விரண்டு எதிரெதிர்கருத்துக்களில் ஒன்றை ஏற்று மற்றதை நிராகரிப்பதோ அல்லது இரண்டையும் ஏற்பதோ/நிராகரிப்பதோ வாசகரின் பொறுப்பாகும். மனோரஞ்சன் சொன்னதே சரியானது என்று ஒரு வாசகரும் இல்லை விக்டர் ஐவனின் கருத்தே சரியானது என்று இன்னொரு வாசகரும் கருதிக்கொள்ள அவர்களுக்குச் சுதந்திரமுண்டு. புலிகளின் மீதான மனோ ரஞ்சனின் கர்ணகடூரமான விமர்சனத்தை விக்டர் ஐவனின் கருத்து வலுவிழக்கச் செய்துவிட்டதாக (தனது புலி எதிர்ப்பு நிலைப்பாட்டையும் மீறி) தான் உணர்வதற்கு சரிநிகரை ரவீந்திரன் குற்றஞ்சாட்டுவது வேடிக்கையாகவுள்ளது. இவர் கருத்துச் சுதந்திரம் என்பது புலிகளை விமர்சிக்க மட்டுமேயன்றி. ராம் மாணிக்கலிங்கம், ராஜன் ஹூல், மனோரஞ்சன் போன்ற புனிதர்களை விமர்சிக்கவல்ல என்று கருதுகின்றாரா? தென்னிலங்கையிலும், விடுவிக்கப்பட்ட பிரதேசமான வவுனியா (?)விலும் தங்களுக்கு இருக்கும் பிரச்சார ஏகபோக உரிமையை சரிநிகர் (மட்டுமே!) பயமுறுத்துவதே ரவீந்திரனின் மனக்குறைக்கு காரணமென நினைக்கிறேன்.

இன்று தமிழ் மக்களின் நிலை தொடர்பாக தமிழ்ப் புத்திஜீவிகள் யாருமே எழுதவோ பேசவோ தயங்குகிறார்கள் -அதாவது விடுதலைப் புலிகளுக்கெதிராக தமிழ்ப் புத்திஜீவிகள் யாருமே எழுதவோ பேசவோ தயங்குகிறார்கள் என்ற ரவீந்திரனின் அங்கலாய்ப்பு ஆச்சரியமாகவிருக்கிறது. ஏன் வவுனியாவில் தென்னிலங்கைப் பத்திரிகைகள், இந்திய மேற்கத்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள் கிடைப்பதில்லையா? அல்லது அவற்றில் தொடர்ச்சியாக இடம்பெறும் ராஜன் ஹூல் அணியினரின்,ராம் மாணிக்கலிங்கம் அணியினரின் கட்டுரை களைப் படிப்பதில்லையா? அல்லது இவர்களை ரவீந்திரன் தமிழ்ப் புத்தி ஜீவிகள் பட்டியலில் சேர்க்கவில்லையா?

ராம் மாணிக்கலிங்கம், மனோரஞ்சன் ஆகியோரின் கருத்துக்கு முரணான கருத்துக்களை சிங்களவர்களான விக்டர் ஐவன்,மார்க் செனிவிரத்ன போன்றோர் முன்வைப்பதில் என்ன தவறிருக்கிறது? அரச முக்கியஸ்தரான ராம் மாணிக்கலிங்கத்தை விட, விக்டர் ஐவனுக்கு ஈழத்தமிழர் தொடர்பாக கருத்துக்கூற தகுதியும், தார்மீக உரிமையும் உண்டென நம்புகிறேன். ஐவன், செனிவரத்னா போன்றோர்க்குப் பதிலாக பேராசிரியர் நளின் அல்லது தயான் போன்றோர் விடுதலைப் புலிகளை விமர்சித்திருந்தால், அதுவும் சிங்களவர்களின் கருத்து என்று ரவீந்திரன் கூறியிருப்பாரா?

''சிங்களவர்களே மறுக்கிறார்கள்'' என்று காட்டுவதற்காக, வேண்டு மென்றே ஐவன், செனிவிரத்னாவின் கருத்துக்களை சரிநிகர் பிரசுரித்தது என்ற ரவீந்திரனின் கருத்தை நான் நம்பவில்லை. பதிலாக ஐவன், செனிவிரத்னா போன்றவர்களின் கருத்துக்களை யொத்த தமிழர்களை சரிநிகரால் தென்னிலங்கையிலோ அல்லது விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலோ கண்டுபிடிக்க முடியாது போய் விட்டதென்றே நினைக்கிறேன். அப்படியே ஒரு சிலரிருந்தாலும் அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட புத்திஜீவியாக இல்லாது போயிருக்கக் கூடும். இந்தத் தட்டுப்பாடே சரிநிகரை சிங்களச் சிந்தனையாளர்களைத் தேடிப்போக வைத்திருக்கிறதென நினைக்கிறேன். தமிழ்ப் புத்திஜீவிகளை விட, சிங்களச் சிந்தனையாளர்கள் தமிழர்களின் பிரச்சினையை புரிந்திருக்கிறார்கள் என்பதனை சரிநிகரின் 75வது இதழில் மட்டுமல்ல, அதன் எல்லா இதழ்களிலும் காணலாம். இவர்களின் கருத்துக்களைத் தாங்கி வரும் சிங்கள மாற்றுப் பத்திரிகைகளை தமிழர்களால் வாசிக்கமுடியாது. தென்னிலங்கையிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகைகள் ராஜன் ஹூல் அணி,ராம் மாணிக்கலிங்கம் அணியினருக்கக் கொடுக்கும் முக்கியத்துவத்தில் ஒரு சிறு அளவிலேனும் இவர்களுக்குக் கொடுப்பதில்லை. வீரகேசரியைப் பற்றிக் கூறத்தேவையில்லை. இந்நிலையில் இவர்களின் கருத்தக்களை தமிழர்கள் அறிந்துகொள்வதற்கு ஒரேயொரு வாய்ப்பாக இருக்கும் சரிநிகருக்கு நன்றி சொல்லவேண்டும்.

**கண்ணன் நோர்வே**




# மட்டு செஞ்சிலுவைச் சங்கத்தின் நிலை இதுதான்!

தங்களது யூன்15 - யூன் 28, 1995 சரிநிகர் பத்திரிகையில் (இதழ் 74) இரண்டாம் பக்கத்தில் ''மட்டுநகர் செஞ் சிலுவைச் சங்கம் இன்னொரு ஊழல் தலைவர்'' என்ற செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் உண்மைக்குப் புறம்பானதும், அப்பட்டமான பொய்யும் ஆகும். ஆகவே இ. செ. சங்கம் மட்டக்களப்பு கிளையின் மாவட்ட செயலாளரும், மண்முனைப்பற்று செஞ்சிலுவைச் சங்கத் தலைவரும் ஆகிய நான் உண்மை விவரத்தை ''சரிநிகர்'' வாயிலாக வெளிப்படுத்த விரும்புகிறேன்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கோ அல்லது அகதிகளுக்கோ உணவுப் பொருட்கள் வழங்குவது இல்லை. இது சங்கத்தின் விதிமுறைகளுள் ஒன்று. இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் மண்முனைப் பற்றுப் பிரிவு 01-05-1993ல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அன்று தொடக்கம் 15-05-1995வரை இப்பிரிவில் உள்ள (றொபட்) நவரெத்தினராசா பிரதேச சபைத் தலைவரின் உறவினர்கள் உட்பட எவருக்கும் சங்கத்தினாலோ அல்லது இலங்கை செஞ்சிலுவைச் சங்க மண்முனைப் பற்றுப் பிரிவுத் தலைவரினாலோ, அல்லது அப்போதை உப தலைவர். க. அமரலிங்கம் அவர்களினாலோ அல்லது சங்கத்தின் பெயரில் ஆரையம்பதி வாழ் நலன் விரும்பிகளினாலோ எந்த விதமான உணவுப் பொருட்களும் விநியோகிக்கப்படவில்லை என்பதை நான் திட்டவட்டமாகக் கூறுவேன்.

ஆனால் வாகரைப் பிரிவில் கட்டுமுறிப்பில் ஏற்பட்ட அனர்த்தங்களால் அகதிகளாக வாழைச்சேனை விபுலாநந்தா பாடசாலையில் தஞ்சம் அடைந்த மக்களுக்கு உதவும் நோக்காக மட்டு. கிளைத் தலைவர் பி. வசந்தராஜா அவர்கள் சில தொண்டர்களையும், தனது கையாட்களையும் நிர்வாக சபை உறுப்பினர் மா. சதாசிவத்தின் மேற்பார்வையில் பயன்படுத்தி (மா. சதாசிவம் நிர்வாகசபை உறுப்பினர்.) மட்டு. ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தில் ஊழியராக கடமையாற்றும் பொழுது சங்கப் பணம் ரூபா பத்தாயிரத்தை மோசடி செய்தது ஒரு வருடத்திற்குப் பின் தெரிய வந்து தனது மோட்டார் சைக்கிளை சங்கத்திற்கு அடைவு வைத்து வேலையை இராஜினாமாச் செய்து தண்டனையில் இருந்து தப்பியவர். மட்டக்களப்பு நகரில் வியாபார தலங்களில் சமையாத உணவுப் பதார்த்தங்கள் சேகரித்ததாக அறிய முடிந்தது.

அந்த உணவுப் பொருட்கள் எங்கு கொடுக்கப்பட்டதோ தெரியாது. நிச்சயமாக மண்முனைப்பற்றுப் பிரிவில் கொடுக்கப்படவில்லை. இந்த அகதிளுக்கு மட்டு. நகரில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியினால் கையளிக்கப்பட்ட உடுபுடவைகளும், பாய்களும் மட்டு. செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் எடுத்துச் சென்று சங்கத்தின் முக்கிய தொண்டர் எஸ். சிவநேசன் அவர்களால் விநியோகம் செய்யப்பட்டது என அறிகின்றேன். இயக்கங்களில் இருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட சிலர் தொழில் வாய்ப்பின்றி மட்டு. செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களாக ரி. வசந்தராசாவின் சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு செஞ்சிலுவைச் சங்கத்தில்சேர்த்துக் கொள்ளப்பட்ட பின் மட்டு. செஞ்சிலுவைச் சங்கத்திற்கு இந்த நிலை ஏற்பட்டது.

பிரான்ஸ் துதுவரினால் மட்டு. மாவட்டத்தில் வன்செயலால் பாதிக்கப்பட்ட 430 நபர்கட்கு தொழில் உபகரணங்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்க மட்டு. கிளையினூடாக விநியோகம் செய்வதற்கு வழங்கப்பட்டது. இவற்றில் 39 நபர்கட்கு (சிகை அலங்காரம், சலவைத் தொழில், மரவேலை, கட்டிட வேலை, வீட்டுத் தோட்டம், விறகு வெட்டி) மண்முனைப் பற்றுப் பிரிவில் ஆரையம்பதியில் அமைந்துள்ள அரசாங்க கால் நடை அபிவிருத்திக் காரியாலய மண்டபத்தில் வைத்து மட்டு கிளைத் தலைவர் டி. வசந்தராசாவினாலும், மண்முனைப் பற்றுப் பிரிவு பிரதேச செயலாளர் மா. உதயகுமார் அவர்களாலும் 18-04-1995 உபகரணம் பெறுவோருக்கு விநியோகிக்கப்பட்டது. ஆனால் நிச்சயமாக மரம் ஏறுவோருக்கு உபகரணம் வழங்கப்படவில்லை. செஞ்சிலுவைச்சங்க பிரிவுகள் தாபிக்கப்படாத பின்வரும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் வெல்லாவெளி, வாகரை, பட்டிப்பளை ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளருக்கு ஒதுக்கப்பட்ட தொழில் உபகரணங்களுக்கு நேர்ந்த கதி தெரிவு செய்த நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் நிர்வாகத் தொண்டருக்கும் மட்டுமே தெரியும்.

25-04-1995 உடன் மட்டு. கிளையின் செயற்பாடுகள் இலங்கை செஞ்சிலுவைச்சங்க இடைக்கால நிர்வாகசபைத் தலைவரினால் சுற்று நிருபம் பி/95/01க்க அமைய இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கணக்கு பரிசோதனையும் நிர்வாகத்துக்கு எதிரான முறைப்பாடுகளுக்கு விசாரணையும் முடிவடைந்த பின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படும்.

**த. இராஜேஸ்வரன்,**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
**மட்டக்களப்பு.**

# அடிப்படை உரிமை மீறல்

கடந்த 13 வருடமாக ஆரையம்பதி கமநல சேவை நிலையத்தில் இலிகிதராக் கடமை செய்துள்ளேன். இக் காலப் பகுதிக்கு வழங்க மறுக்கப்பட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைப் பெற முயற்சி மேற்கொண்டதைப் பிடிக்காத பெரும்பாக உத்தியோகத்தர் அன்றைய மட்டக்களப்பு கமநல சேவை உதவி ஆணையாளரைத் தவறாக வழி நடத்தியதன் பேரில் எவ்வித விசாரணையோ விளக்கமோ இன்றிப் பதவியில் இருந்து இடை நிறுத்தினர். பின்பு குற்றச்சாட்டுகளை புனையுமாறு பெரும்பாக உத்தியோகத்தரைப் பணித்திருந்தார். இவர் சம்பளம் கொடுக்காமை பற்றியோ, செய்கின்ற தவறுகள் பற்றியோ விசாரணை மேற்கொள்ள முடியாத அன்றைய உதவி ஆணையாளர் அப்பாவியாகிய என்னைத் திடுதிடுப்பென்று பணி இடை நிறுத்தம் செய்தார். பெரும்பாக உத்தியோகத்தரின் குற்றச்சாட்டுக்களுக்கு நான் தகுந்த பதில் அளித்த போதும் அவை பற்றி நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இருந்தும் ஒரு வருடத்தின் பின்பு சேவையை விட்டு நீக்குவதாக பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்தார். இதனை அடுத்து கொழும்புக்கு மேன்முறையீடு செய்ததன் பேரில் தற்போதைய உதவி ஆணையாளர் எவ்வித விசாரணையும் செய்யாது உடனடியாக வேலைக்குச் சேர்த்துக் கொள்ள ஆணை பிறப்பித்தார். இவரது ஆணையின்படி கடமைக்குச் சென்றபோது நிலையப்பணிப்பாளர் மூலமாக கடமை செய்யாது தடுக்கப்பட்டதோடு அச்சுறுத்தலுக்கும் அவமதிப்புக்கும் ஆளாக்கப்பட்டேன். இது தொடர்பில் பொலிஸில் முறையிட்டதன் பேரில் பாதுகாப்புச் சூழல் ஏற்படுத்தப்பட்டது. இது தொடர்பாக உதவி ஆணையாளரினதும் மற்றும் அதிகாரிகளினதும் கவனத்திற்குக் கொண்டு வந்த போதிலும் பயன் ஏற்பட்டதாக இல்லை. தற்போது பெரும்பாக உத்தியோகத்தரால் எவ்வித கடமைகளும் வழங்கப்படாத நிலையில் சம்பளம் ஏதும் தரப்படாத நிலையில் தடுப்புக்காவல் கைதி போன்று இருக்க வேண்டியுள்ளது. சம்பளமின்றி வேலையோ எனப்பலரும் கேட்கின்றனர். இத்தகைய அடிப்படை உரிமையை மீறிய செயல்களுக்கெதிராக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு ஜனநாயகப் பண்பு களை நிலைநிறுத்த முன்வர வேண்டும்.

**வே. சந்திரேஸ்வரி,**
**ஆரையம்பதி.**

# இது யோக்கியமல்ல!

சரிநிகர் இதழ் 74இல் மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக ஆசிரியர்கள் என்ற பேரில் ஒரு அறிக்கை வந்தது. இதே பேரிற் சில காலமாகவே அறிக்கைகள் வருவதைக் கண்டுள்ளேன். அண்மையில் ஐரோப்பாவுக்கு வருகை தந்த மனோரஞ்சன் இவ் வமைப்பின் உறுப்பினராக அறிமுகப்படுத்தப்பட்டார். (இது எவரதும் ஒரு தவறாக இருக்கலாம்) இந்த அமைப்புக்கும் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்துக்கும் எதுவித தொடர்புமில்லை என்பது விவரமறிந்து பலரது கருத்து. அது சரியாயின், இவ்வாறான அறிக்கைகளை வெளியிடுவோர் மேற்கூறிய பேரைப் பயன்படுத்தி எழுதி வருவது, அவர்களது கட்டுரைகள் வலியுறுத்த முனையும் நேர்மை என்ற கோட்பாட்டுக்கு முரணானது. விடுதலைப்புலிகளை விமர்சிப்பது மட்டுமே மனித உரிமைக்கான செயற்பாடாகிவிடாது. அரசின் கயமையை மழுப்பிக் கொண்டு, விடுதலைப்புலிகள் மீதான காழ்ப்புணர்வை வெளிப்படுத்த மனித உரிமை வாதங்களை முன்வைப்பது, எவ்வகையிலும் யோக்கியமல்ல.

**சிவசேகரம்**
**லண்டன்**

# தகுதி அற்ற அதிபர்கள் நியமனம்!

மட்டக்களப்பு மாவட்ட கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் மண்முனைப்பற்றுக்கல்விப் பிரதேசத்தில் அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆரையம்பதியில் உள்ள சிவமணிவித்தியாலயத்திலும் காங்கேயனோடையில் உள்ள அல்கிறா வித்தியாலயத்திலும் முறையே வன்னியசிங்கம் அப்துல்சலாம் ஆகியோர் அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் அதிபர் தரமற்ற சாதாரண ஆசிரியர் சேவையிலும் குறைவானவர்கள். இதேவேளை மண்முனைப் பற்றுக் கல்விப் பிரதேசத்துக்குள் அதிபர் தரங்களையுடைய பலர் உதவி அதிபராகவும் உதவி ஆசிரியராகவும், இருக்கும் போது தரமற்ற ஆசிரியரை அதிபராக நியமிப்பதும் அதிபர் தரத்தில் உள்ள எங்களைப்போன்ற பலரை வேதனை அடைய வைக்கின்றது.

இதனை உங்கள் பத்திரிகை மூலமாக உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி எமது குறைகளைத்தீர்க்க உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**புதுக்குடியிருப்பு**
**T. மோகன்**

www.tamilarangam.net



# இருட்டுவெளி

மேற்கைத்தவிர எங்கும் கரி பூசிய வானம் கூடவே ஒரு பக்கம் சரிந்து போய்க்கிடந்தது. பூமிக்கு குடைபிடித்துக் குடைபிடித்து சலித்துபோன துயரமாய்க் கூட இருக்கலாம். என்னென்ன கொடூரங்கள். இந்தப்பூமியின் முகமெங்கும் பார்க்கச் சகிக்காது மேகக்கூட்டங்கள் ஒடித்தப்பின காற்று காறித்துப்பியது எல்லோர் முகங்களிலும், எதையுமே விளங்கிக் கொள்ளாதவர்களாய் ஏன் இன்னும் மனிதர்களாய் வாழ்கிறார்கள் என்பதுதான் யாருக்குமே புரியவில்லை? சோர்ந்து போய் உறங்க இடம் தேடும் சூரியன், எல்லாமிழந்த சன்னியாசியைப்போல் அந்த சாயங்கால மாலைப் பொழுது துயருற்றுப் போய்க்கிடந்தது.

அந்த மின்கம்பத்தின் நுனியில் ஒற்றையாய்ப் போன காகம் இறக்கையில் ஒட்டியிருக்கும் அழுக்குகளை சொண்டால் கொத்திக் கொத்தி திரும்பவும் விழுங்கிக் கொண்டிந்தது. அந்த மின்கம்பத்தோடு ஒட்டியபடி அவள், அவளுக்கு எதிரே அந்தப்பள்ளிக் கூடம் இடித்துத் தள்ளப்பட்ட சுவர்கள், நாற்புறமும் சுவர்கள், நாற்புறமும் சுருள் சுருளாய் சுருண்டு போய்க்கிடக்கும் முட்கம்பி வேலிகள் முன்னே மண்நிரப்பிய சாக்குகளை அடுக்கிய சென்றி. அந்த சென்றியின் உள்ளே ஒரு ஏ.கே., ஒரு எஸ்.எம்.ஜி. ஸ்ராண்டில் குழாய் வாய்களைத்திறந்தபடி மனித வேட்டையாடத் தயாராயிருந்தது. அதனைச்சுற்றிலும் நாலைந்து ஆமிக்காரர்கள் கைகளில் எம் சிக்ஸ்ரினும், ரீ பிப்ரி சிக்ஸ்சுடனும் அட்டகாசமாய் சிரித்துப் பேசிக் கொண்டிந்தார்கள். இன்றிரவுக்கு எத்தனை மனிதர்களை எப்படியெப்படி வதைத்து கொன்றெரிப்பது என்ற ருசிகரமான உரையாடலாய் கூட இருக்கலாம்.

அவள் அந்த தார்றோட்டைக் கடந்து சென்றியை நோக்கி நடந்தாள். கண்களுக்கு வெளியே நீர் சொக்கிப் போயிருந்தது. கன்னங்களில் கண்ணீர் சாரைசாரையாய் வடிந்ததற்கான தடங்கள். அழுது அழுதுஅவள் கன்னங்கள் வீங்கிப்போயிருந்தன.

''மொக்கத மொக்கத'' சென்றியிலிருந்த ஆமிக்காரன் தலையை நீட்டியபடி கேட்டான் ''எண்ட புள்ளையக் காட்டுங்க ஐயா அவன் ஒரு அப்பாவி அவன ஒண்டும் செய்துபோடாதீங்க....'' தலையிலடித்துக்கொண்டழுதாள். கையெடுத்துக்கும்பிட்டாள். விழிகளிரண்டும் முட்டி கன்னங்கள் நீரால் நிரம்பி வடிந்தது. அவளின் உள் ஆத்மா துடித்து துடித்து அழுதது.

தாய்மையின் பாசம் எத்தனை மகத்தான, புனிதமானது. பசுபிக்சமுத்திரத்தைப்போல் ஆழம் கொண்டதோ? இல்லை அது எல்லையற்றது. ஒவ்வொரு உயிர்களையும் குண்டுகளால் தகர்த்தெறிந்து கொல்லும் அந்த துவக்குகளுக்கும் இந்த மனிதர்களுக்கும் தாய்மையின் குமுறல் எத்தனை மகத்தானது என்பது எங்ஙனம் தெரியப்போகிறது. அது எல்லையற்றது. விசாலமானது. எல்லாவற்றிற்கும் மேலாக புனிதமானது.

அவள் கெஞ்சிக் கெஞ்சி அழுதாள். அவர்கள் கேள்விகள் கேட்டு அதட்டியபடி சிரித்தார்கள். முன்னர் அந்த இடம் ஒரு பள்ளிக்கூடம். அன்பும், பண்பும், அறிவும் போதிக்கப்பட்ட இடம், இன்று அது ஓர் வதைமுகாம். கொடூரங்களின் உறைவிடம், துரோகத்தனங்களின் தரிப்பிடம். யூனிப்போர்ம் போட்ட மிருகங்கள் துவக்குகளுடன் நடந்து திரிந்தன. வலது பக்கமுள்ள மூன்றாவது கட்டிடம் தான் விசாரணைக் கூடம். ரத்தமும் சதையும் தெறித்து அறைகுறை உயிருடன் இன்னும் எத்தனை மனிதர்கள் ஊசலாடிக் கொண்டிருக்கிறார்களோ?

அவர்கள் அதட்டியபடி சிங்களத்தால் ஏதோ சொல்லிச் சொல்லிச் சிரித்தார்கள். ஒருவன் வெளியே வந்தான். துவக்கை மார்பில் வைத்து அழுத்தியபடி கொஞ்சத்தூரம் தள்ளினான். தெருவைக்கடந்து அந்தமின்கம்பம் வரை தள்ளினான்.

அந்த மின்கம்பத்தோடு சாய்ந்தபடி நிற்க முடியாமல் கீழே சரிந்து குந்திக்கொண்டாள். இந்த மண்ணில் பிறந்த அனைவரும் தோமஸ் அல்வா எடிசனுக்கு எப்படி நன்றி சொல்லாமலிருக்க முடியும். நன்றி எடிசனே நன்றி.

ஆனால் பின்னரோ... இந்த மின்கம்பங்களின் அடியிலிருந்தல்லவா உயிர்கள் பிரிந்தன . துடித்துதுடித்து அழுதன, கையெடுத்துக்கும்பிட்டுக் கெஞ்சின. கோழிக்காகவும் வாழைக்குலைக்காகவும் உயிர்கள் பிரிந்தன.இயக்க மோதல்கள், பதவிவெறிகள், போராட்டம் தூசாக, மின்கம்பத்தின் அடியில் ரயரில் மனிதம் சுருண்டு சுருண்டு எழுந்தன. ஆனாலும் யேசுவைக்காட்டிக் கொடுத்த கொலைஞர்கள் புனிதர்களாய் இன்றும் ஊர்களுக்குள் பஜிரோக்களிலல்லவா அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

பூட்ஸ்கால்களை நிலத்தில் ஓங்கிக் குத்தியபடி கையிலிருந்த ரீ பிப்ரிசிக்சை ஒரு தடவை லோட் பண்ணி ஓட்டோவிலிருந்த சேப்ரிக்கு தட்டி மகசினைக் கழட்டி திரும்பவும் சடாரென அடித்து, ரிகரில் விரல் வைத்து ''யண்ட யண்ட'' என்று கத்தியபடி திரும்பித் திரும்பி துவக்கைக் காட்டி எச்சரித்தபடி சென்றிக்குள் நுழைந்து, உடலை மறைத்து கழுத்துக்கு மேலே தலையைக்காட்டியபடி உட்கார்ந்திருந்தான். கறுப்பு இரும்புத் தொப்பிக்குள் அவனுடைய தலையும் முகமும் ஓட்டுக்குள்ளிருந்து எட்டிப்பார்க்கும் ஆமையாய் ....அவனுடைய பச்சைநிற யூனிபோம் போட்ட உடம்பு மனிதர்களை விழுங்கும் விஷ முதலையாய்..... அந்த சென்றியைக் கடக்கும் முகங்களுக்குள் வந்து போகும்.

அவள் குந்தியிருந்த மின்கம்பத்துக்கு சற்று தொலைவில் வாகனங்கள் நின்றபடி உள்ளேயிருந்தவர்களை இறக்கிவிட்டு வளைந்து நெளிந்து சென்றியைத் தாண்டி அதற்கும் சற்று தொலைவில் நின்றன. வாகனங்களிலிருந்து இறங்கியவர்கள் நடந்து சென்று சென்றியின் முன் நின்றவர்களிடம் அடையாள அட்டை காட்டி கைகளிலிருக்கும் மூட்டை முடிச்சுகளை பிரித்து திறந்து காட்டி, உள்ளாடைகளை மட்டும் அவிழ்த்துப்பார்க்காத திருப்தியில் வாகனங்களை நோக்கி நடந்தனர். வாகனங்களிலிருந்து இறங்கி சென்றியைநோக்கி நடப்பவர்களுக்கு மின்கம்பத்தோடு சாய்ந்தபடி இருக்கும், அவளைப்பார்க்கும் போதெல்லாம் துயரம் பீறீட்டுக்கொண்டு வராமலிருக்க முடியாது தான். ஆனாலும் அவர்களாலும் எந்த ஆறுதலும் சொல்ல முடியாத பரிதாபநிலை. அவர்களுக்கெல்லாம் ஒன்று மட்டும் தெரியும்; தன்னுடைய மகனையோ மகளையோ பிணந்தின்னிக் கழுகுகளிடம் பறிகொடுத்துக் கொண்டிருக்கும் ஒரு தாய் என்று மட்டும்.

செம்மஞ்சள் வானமும், அந்த மாலை வேளையும் கருகிக்கொண்டிருந்தது. மனிதர்களை ரயர்கள் எரித்தும் கருக்கும் புகை மூட்டங்களாய்க் கூட இருக்கலாம்.சென்றிகளிலும் ஆமிக்காம்பின் உள்ளேயும் வெளிச்சங்கள் பளீச்சிட்டன. ஊருக்குள் நாய்கள் ஊளையிட்டன. மனிதத்தை முழுவதுமாய் இழந்து போன மயான அமைதி. தெருக்களில் மரங்களின் நிழல்கள் மட்டும் காற்றில் அசைந்தாடின; எந்த அச்சமுமின்றி.

ட்ரக்குகளும், ஜீப்களும் எந்நேரமும் தயாரென அங்கங்கே நின்றன. கைகளிலும் சென்றியின் மண்மூட்டைகளிலும் பங்கர்களுக்குள்ளும் தயாராயிருக்கும் துவக்குகளும்,மோட்டார்களும் விசையின் அழுத்தங்களுக்காய் தவம் கிடந்தன. இனி எந்த வாகனங்களும் அந்த வீதிகளில் வரப்போவதில்லை.மனிதர்களின் வாடையைஆமிக்காரர்களையும் அவர்களுடன் திரிபவர்களையும் தவிர வேறு யாரும் தேடிப் பார்ப்பதென்பது அரிது.

ஆமிக்காம்பின் உள்ளே துப்பாக்கியின் மேனியெங்கும் விரல்களைத்தடவவும் விஷ ஜந்துக்கள் அணிவகுத்து தயாராகும் சத்தங்கள் காற்றில் முழங்கின. அங்குள்ள மூன்றாவது கட்டிடத்தில் நிலத்தில் மரண அவஸ்தையில் உருளும் மனிதத்தின் ஆத்ம ஒலிகள் காற்றில் மெலிதாக எழுந்தன.

ஈரம் உலராத கண்களுடன் பாதி மங்கிய நிலையிலும், பாதி மங்காத நினைவுகளுடனும் அவள், அந்த மின்கம்பத்தோடு சாய்ந்திருந்தாள். அமைதியாகக் கிடந்த அந்தத் தெருவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒரு பச்சை நிற பஜிரோ ஊடறுத்தது. அதற்கு பின்னால் நாலைந்து ஜீப்கள் மின்கம்பத்துக்கு நாலைந்து அடி தள்ளி திடீரென நின்றன. உள்ளிருந்தவர்கள் பாய்ந்து இறங்கினார்கள். ''ஏய் என்னடி றக்கி எடுக்கிறீயோ'' தமிழால் சுத்தத் தமிழால் பேசியபடி நீட்டிய துவக்கால் குத்தப் போனான் ஒருவன். கூடவே இறங்கிய தலைவன் கையிலிருந்த நைன் எம் எம் பிஸ்ரலை தடவியபடி குத்தப்போனவனை தடுத்தான்.

''உங்கட துவக்கால என்ன வேணுமெண்டால் சுடுங்க. என்ர புள்ளையை மட்டும் விடுங்க. அவன் ஒரு அப்பாவி ஒரு இயக்கதோடையும் தொடர்பில்லாதவன். ஏற்கனவே ரெண்டு புள்ளையளை தின்னக்குடுத்திட்டன். ஒருத்தன் உங்கட இயக்கத்தில இருந்து தான் இன்றைக்கு எட்டு வருஷத்துக்கு முந்தி முகத்தக்கூட பார்க்க கிடைக்காம.....(அழுதாள் அழுதாள் கைகளிரண்டையும் தலையிலடித்துக் கொண்டழுதாள்) உங்கட தலைவர்மாரிட்ட கேளுங்க அவனைப்பத்தி, இப்ப மறந்திருந்தாலும் ஞாபகப்படுத்திச் சொல்லுவானுகள். இந்தக் கை உங்க எல்லோருக்கும் விடிய விடிய வெக்கையில நனைஞ்சி ஆக்கிப்போட்டு தின்னக்குடுத்தக் கை. நீங்க ஒருத்தரல்ல எல்லோருமே நன்றிகெட்டவர்கள். உங்களுக்கு மனிசர்களைப்பற்றி தெரியாது. பதவியையும், பணத்தையும் பவுணையும், ரயரையும், துவக்கையும் மட்டுமே தெரியும். சுடுங்க சுடுங்க இந்த இடத்தில என்னையும் சுடுங்க, முகத்திலும் தலையிலும் அடித்துக் கொண்டழுதாள். வெறும் சடமாய் அந்த மின்கம்பம் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு....

வானத்தில் விடுபட்ட இரண்டொரு ஆட்காட்டிகுருவிகள் ஏதோ சேதிகளுடன் வேகமாய் பறந்து கொண்டிருந்தன. கூட இருந்த தலைவனுக்கு கொஞ்சம் கொஞ்சமாய் ஞாபகங்கள் வந்தன. கையிலிருந்த பிஸ்ரலை திரும்பவும் ஒரு தடவை தடவிக் கொண்டான். தன்னுடைய இயக்கம் இன்னொரு இயக்கத்தால் நிர்மூலமாக்கப்பட்ட போது தங்களையெல்லாம் காப்பாற்றிவிட்டு தான் மட்டும் இறந்து போனானே அவனுடைய தாயல்லவா இவள். முந்திய இரவுகளில் எத்தனையெத்தனை தடவை இவளுடைய வீட்டிற்கு போய்ச்சாப்பிட்டு வந்திருப்பான். ஒரு தாயாய் எத்தனை கனிவாய் இவர்களையெல்லாம் உபசரித்தவள்.

கூட இருந்த தலைவன் தன்னை இனம் காட்டிக் கொள்ளவில்லை. ''அம்மா நீங்க வீட்டுக்குப் போங்க நாளைக்கு காலையில உங்கட மகன் வீட்டுக்கு வருவான்.'' தலைவனின் கருத்த உதடுகள் மட்டும் பேசின.அவளுக்கு இவர்களின் வார்த்தையில் கொஞ்சம் கூட நம்பிக்கையில்லை. இருந்தாலும் அவளையறியாமலே அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள். கூட நின்ற முகாம் கப்ரனுக்கு எதுவும் விளங்கவில்லை. அவன் நகத்தைக்கடித்து கீழே துப்பியபடி சிங்களத்தில் ஏதோ புறுபுறுத்தான். அவனின் பார்வையெல்லாம் பின்னாலுள்ள ஜீப்களில் கையும் கண்களும் இறுகக்கட்டியிருந்தவர்கள் மேலேயே பதிந்திருந்தது.

பஜிரோவும், ஜீப்களும் காம்புக்குள் நுழைந்தன. உள்ளேயிருந்த தன்னுடையவர்களை கூப்பிட்டு தலைவன் கேட்டான் ''அந்த அம்மா யார் தெரியுமா...? இன்றைக்கு எட்டு வருஷத்துக்கு முந்தி தங்களையெல்லாம் காப்பாற்றி அனுப்பிவிட்டு தான் மட்டும் அவர்களிடம் அகப்பட்டு அறைகுறை உயிருடன் தங்களுக்காக ரயரில் சுருண்டு சுருண்டு எரிந்து மாண்டானே....'' எல்லோரும் விறைத்துப்போய் நின்றார்கள்.

எல்லோரும் அந்த மூன்றாவது கட்டிடத்திற்குள் நுழைந்தார்கள். நாலைந்து ஆமிக்காரர்கள் செத்துப் போனவர்களையும் மண் வெட்டிப்பிடிகளால் அடித்துக் கொண்டிருந்தார்கள். சுவரும் நிலமும் சிவப்பாகவும் கறுப்பாகவுமிருந்தது. மூக்கை பிண நெடி ஆட்கொள்ள, பார்த்தார்கள் பார்த்தார்கள்; பின்புறம் கைகள் கட்டப்பட்ட நாலைந்து நிர்வாண மனிதர்கள் சதை நெரிபட்டு கிழிபட்டு முகம் குப்புறக்கிடந்தார்கள். ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. இலையான்கள் சிணுசிணுத்தன. அது ஒரு வதைமுகாமின் ஸ்தானமாய்......

எப்ப பிடிச்ச நீங்க? நேற்று, எங்க வச்சி? ரியூசன் விட்டு வரும் வழியில் ஒரு ஆள், மற்ற ரெண்டு பேரும் கோயிலுக்கு பின்னால எங்களக்கண்டு பதுங்கினார்கள். கூட இருந்த தலைவனால் வேறெதும் கேட்க முடியவில்லை. கையிலிருந்த பிஸ்ரலை திரும்பவும் தடவிக்கொண்டான். வெளியே வந்தார்கள். விடிந்தால் நாளை காலை கூட்டமொன்றில் தான் பேசப்போகும் விடயங்கள் பற்றிய துண்டை எடுத்து பாடமாக்கிக்கொண்டு கப்ரனின் றூம் நோக்கி நடந்தான். நடக்கும் போதே பிஸ்ரலுடன் தாடியையும் ஒரு தடவை தடவிக்கொண்டான்.

அந்தக்கிறவல் வீதியால் நடந்து காளிகோவிலடி தாண்டி தள்ளாடித்தள்ளாடி நடந்தாள். நிசப்தத்தை முழுவதுமாய் உள்வாங்கி ஊர் தூங்கிக் கொண்டிருந்து. கார்த்திகை மார்கழியில் தொடங்கி சித்திரை வைகாசி வரையும் நிரம்பி வடியும் காளிகோயிலுக்கு பின்னாலுள்ள வம்மிக்கோளி குளத்திலிருந்து ஆற்றை நோக்கி அந்த சின்ன ஓடை அசைந்து நெளிந்து ஓடிக்கொண்டிருந்தது. விராலும் பொட்டியானும் தான் மிச்சமாய்க்கிடக்கும். முன்பென்றால் இந்தக்குளம் முழுவதும் தாமரை நிரம்பி வடியும். இப்ப மருந்துக்குக் கூட ஒரு தாமரை இல்லை. பகல் நேரத்தில் சிங்களத்தில் பாடியபடி ஆமிக்காரர்கள் நீச்சலடித்துக் கொண்டிருப்பார்கள்.

தள்ளாடித்தள்ளாடியே அவள் வீடு வந்து சேர்ந்துவிட்டாள். கதவைத்திறந்து உள்ளே நுழைந்தாள். மணல்பரவிக்கிடக்கும் வீட்டு முற்றத்தில் குந்தியபடியே அழுதாள். வானையும் பூமியையும் வெறுப்பாய் பார்த்தாள். இரண்டு கைகளுக்குமிடையே முகம் புதைத்து விம்மி விம்மியழுதாள். வீட்டையும் முற்றத்தையும் திரும்பி திரும்பிப்பார்த்தாள். எத்தனை சைக்கிள்கள் எத்தனை மனிதர்கள் வந்தார்கள், போனார்கள். இருந்த பிள்ளைகளையும் தின்று கைகழுவிவிட்டு இந்த வீட்டில் விடிய விடிய அவிச்சுக் கொட்டியவள் அவள். நாடு பிடிக்கிற குடும்பம் என்று கூட ஊருக்குள் பேர் வாங்கியவள். இனி அவளிடம் இழப்பதற்கு கூட எதுவுமில்லை. நன்றி கெட்டவர்கள் எல்லோருமே நன்றி கெட்டவர்கள்.

தலைவனும் ஆமிக்காரனும் ஒருவர் முன் ஒருவராய் அமர்ந்திருந்தார்கள். மேசையில் பிராண்டியும், விஸ்கியும் றோஸ் கோழியும், சிகரட் பைக்கட்டுகளும் கிடந்தன. தலைவன் இத்தனை முரடனாக இருந்த போதிலும் இன்றைய சம்பவங்கள் அவனின் மனதைக் குடைந்தவை அவனின் கண்கள் பளிச்சிட்டன.

இன்று புதிதாய் பிடித்துவரப்பட்டவர்களின் மரண அவஸ்தையின் ஒலி அந்த ''ஆமிக்காம்ப்'' முழுவதுமாய் காற்றில் எதிரொலித்தது. துயரமாய் கொடூரமாய் இருந்தது. கப்ரன் எழும்பினான் லூசாய் இருந்த பெல்டை இறுக்கியபடி நடந்தான். மனிதம் சிதைந்து துயருறும் வேதனை காற்றில் முன்னையை விட இன்னும் கனமாய் ஒலித்தது. சுவரெங்கும் தசையும் ரத்தமும் தெறித்து வடிந்தன. தசைகள் கிழிபட்டன. அந்தக் கொடிய வேதனையிலும் தண்ணீர் கேட்டுக்கேட்டு மயங்கி விழும் முகங்கள்,காற்றில் ஆத்மாவின் ஒலிகள் மெல்ல மெல்ல இறுகின.

வேலிகள் ஒன்றுக்கொன்று அவளைப் பற்றி வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டன. அவள் வீட்டின் முன்னால், மணல் புதையலும் வீட்டு முற்றத்தில் இன்னமும் அழுது கொண்டிருந்தாள். வீதிகளில் ரோந்து செல்லும் ஆமிக்காரர்கள் பதுங்கிப் பதுங்கி நடந்தார்கள். வீட்டுக்குள் கிடந்த படியே நாய்கள் வெருண்டு வெருண்டு குலைத்தன. வானத்தில் ஒன்றிரண்டு நட்சத்திரங்கள் தொங்கிக் கொண்டு கிடந்தன.

இருண்டு கிடந்த வானத்தில் தொங்கியபடியே எரித்துக் கொண்டிக்கும் நட்சத்திரங்கள் அவளுக்காகவும் ஆமிக்காம்பின் பின்புறம் ரயரில் சுருண்டு, நெளிந்து கொண்டிருக்கும் மனிதர்களுக்காகவும் நட்சத்திர விழிகளால் விம்மி விம்மியழுதன. இந்தக் கொடூரங்களையெல்லாம் அவையாவது ஈரேழு உலகமும் எடுத்துச் செல்லுமோ?

எங்கிருந்தோ வந்தவர்கள் உடம்பெல்லாம் கொழுப்பேறிய திமிரில் குதித்துக் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தார்கள். கூடவே...... போராட்டம் இயக்கம்..... அந்த வீடு மட்டும் மூன்று மலைகளை தின்னக் கொடுத்த துயரத்தில், மணல் சொரியும் அந்த வீட்டு முற்றத்தில் அழுதபடி துயரங்களுக்கெல்லாம் துயரமாய் இருந்தாள். இனி ஊரைப் பொறுத்தவரை அவள் ஒரு அனாதை. அந்த வீடும் முற்றமும் இந்த உலகத்தையே வெறுப்பாய் பார்த்துக்கொண்டிருந்தது.

P. ரவிவர்மன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள் — 10

## ஸ்ரீமாவோவின் சர்ச்சைக்குள்ளான பிரதமர் பதவி

**என்.சரவணன்**

### 1960 மார்ச் தேர்தல்

1960 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தப்பட்டதற்கு பின்னணியில் சில முக்கிய காரணங்கள் தொழிற்பட்டிருந்தன.

குறிப்பாக 1959 செப்டெம்பர் 25ம் திகதியன்று அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா தனது இல்லத்தில் வைத்து பிக்கு ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து செப்டெம்பர் 26ம் திகதி பேராசிரியர் விஜயாநந்த தஹநாயக்கா இடைக்காலப்-பிரதமராக நியமிக்கப்பட்டார். இவர் இலங்கையின் ஐந்தாவது பிரதமராவார்.

பண்டாரநாயக்கா படுகொலையோடு வெற்றிடமான அத்தனகல்ல தொகுதிக்கான இடைத்தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைறெறபோது பண்டாரநாயக்காவின் ஆதரவாளர்கள் பலர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் மனைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவை அரசியலுக்கு கொண்டுவர விரும்பினர். அவர்களின் நிர்ப்பந்தம் காரணமாக சிறிமாவோ பண்டாரநாயக்கா இடைத்தேர்தலில் போட்டியிட முன்வந்தார். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பாக அல்ல. சுயேட்சை வேட்பாளராக போட்டியிட முன்வந்தார்.

இதற்கிடையில் தஹநாயக்கவின் அரசாங்கத்தில் அமைச்சரவை மாற்றங்களில் காணப்பட்ட இழுபறி நிலைமையினாலும் அரசாங்கத்திற்குள் இருந்த பலத்த முரண்பாடுகள் காரணமாகவும் டிசம்பர் 5ம் திகதி அமைச்சரவையைக் கலைத்தார். புதிய பாராளுமன்ற பொதுத்தேர்தலுக்கான அறிவித்தலையும் விடுத்தார். அதன்படி 1960 ஜனவரி 4ம் திகதி வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

இத்தேர்தலின் போது அதுவரை காலமும் இருந்த 89 தேர்தல் தொகுதிகள் 145 தேர்தல் தொகுதிகளாக உயர்த்தப்பட்டது. அதேபோல் இத்தேர்தலின் போது முன்னைய தேர்தலை விட அதிக வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அதேபோல் அதுவரை காலமில்லாத அளவிற்கு அதிக பெண்களும் இத்தேர்தலில் போட்டியிட்டனர். பெண் வேட்பாளர்கள் 14 பேரும் பின்வரும் எண்ணிக்கையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டனர்.

***லங்கா சமசமாஜக்கட்சி - 5,-***
***ஐக்கிய தேசியக் கட்சி - 3,***
***இலங்கை ஜனநாயக் கட்சி - 2,***
***தொழிற்கட்சி - 1,***
***தேசிய விடுதலை முன்னணி - 1,***
***மக்கள் ஐக்கிய முன்னணி -1 ,***
***சுயேட்சை - 1.***

1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் திகதி நடந்த 4வது தொதுத்தேர்தலில் போட்டியிட்ட 14 பெண் வேட்பாளர்களில் மூவர் மட்டுமே வெற்றி பெற்றனர். லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் தெஹியோவிட்ட தொகுதியில் போட்டியிட்ட ***சோமா விக்கிரமநாயக்க*** 546 அதிகப்பட்டியான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். கலிகமுவ தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ***விமலா கன்னங்கர*** 3547 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வென்றார். இவர்கள் இருவருமே பாராளுமன்றத்துக்குப் புதிய முகங்கள்.

வெலிமட தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ***திருமதி குசுமா ராஜரட்ன*** ஊவா பரணகம தொகுதியில் போட்டியிட்டு 1967 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வென்றார். இத்தேர்தலில் வெலிமட தொகுதியில் அவரது கணவர் கே.எம்.பி.ராஜரட்ன வென்றார்.

1960 மார்ச் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தனித்தே போட்டியிட்டது. ஸ்ரீ.ல.சு.க. சார்பில் தேர்தல் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டவர் சீ.பி.டி.சில்வா என்ற போதும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவையே ஸ்ரீ.ல.சு.க. ஆதரவாளர்கள் தங்கள் தலைமையாக கொண்டிருந்தனர். இத்தேர்தலில் ஐ.தே.கவுக்கு 50 ஆசனங்களும், ஸ்ரீ.ல.சு.கனுவுக்கு 46 ஆசனங்களும் கிடைத்திருந்தன. ஸ்ரீ.ல.சு.கவுக்கு கிடைத்த இந்த 46 ஆசனங்களும் கூட ஸ்ரீமாவோவினாலேயே பெற முடிந்தது என அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்தனர். 1960 யூலை தேர்தலில் இடதுசாரிக்கட்சிகளுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண்டு, ஸ்ரீமாவோவின் தலைமையில் வேலைகள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து கிடைத்த வெற்றியைப் பார்க்கின்ற போது அது நிரூபிக்கப்படுகிறது.

### 1960 யூலை தேர்தல்

எவ்வாறெனினும் 1960 மார்ச்சில் உருவாக்கப்பட்ட நான்காவது பாராளுமன்றத்தி, ஆயுட்காலம் 33 நாட்கள் மட்டுமே நீடித்தது.

பாராளுமன்றத்தில் சபாநாயகர் பதவிக்கு ஒருவரைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் போது ஆளும் கட்சி தோல்வியடைந்தது.(இது சிம்மாசன உரை என்பது குறிப்பிடத்தக்கது) அரசாங்க தரப்பில் திரு.எல்பட். எப்.பிரின்ஸை எதிர்க்கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்ட பீ.டி.சுபசிங்க தோற்கடித்தார். இவர் 33 அதிகப்படியான வாக்குகள் பெற்றதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தைக் கருவிலேயே கலைக்க வேண்டியேற்பட்டது. 1960இலேயே அடுத்த தேர்தலையும் நடத்த நேர்ந்தது.

5வது பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் மே மாதம் 20ம் திகதி நடந்தது. இதன் போது நான்கு பெண்கள் மாத்திரமே வேட்புமனு தாக்கல் செய்தனர்.முன்னைய தேர்தலில் 14 பெண்கள் போட்டியிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கவை. இவர்களில் மூவர் முன்னைய பாராளுமன்ற அங்கத்தினர்கள். மற்றவர் **விவியன் குணவர்தன .**

விவியன் குணவர்தன கொழும்பு வடக்கில் போட்டியிட்டார். இத்தேர்தலின் போது விவியன் குணவர்தனவுக்கு எதிராக கொழும்பு வடக்கைச் சேர்ந்த பல கத்தோலிக்க தேவாலயங்கள் பிரச்சாரம் செய்தன. விவியனை ஆதரித்த கொழும்பு வடக்கு வாசிகளை கண்டித்தனர். விவியன் மாக்ஸிஸ்ட் என்பதனாலேயே அவருக்கெதிராக செய்றபட்டனர் என்பதை பலர் அறிந்திருந்தனர். (இது பற்றி சென்ற கட்டுரையில் கண்டோம்.)

இறுதியில் இரு பெண் வேட்பாளர்கள் மட்டுமே வெற்றி பெற்றனர். ஊவா பரணகம தொகுதியில் போட்டியிட்ட திருமதி குசுமா ராஜரட்னவும், தெகியோவிட்ட தொகுதியில் போட்டியிட்ட சோமா விக்கிரம நாயக்கவுமே அவர்கள். விமலா கன்னங்கர தோல்வியடைந்தார்.

இத்தேர்தலின் போது ஸ்ரீ.ல.சு.கவின் தலைவராக இருந்த சி.பி.டி.சில்வா தலைமைப் பதவி யிலிருந்து விலகி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவை அப்பதவியை ஏற்கச்செய்தார். அதன்பின் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீ.ல.சு.க. யூலை தேர்தலுக்காக ஏனைய இடதுசாரிக்கட்சிகளுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. இத்தேர்தலின் போது திருமதி சிறிமா போட்டியிடவில்லை.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் கட்சியியொன்று ஒரு பெண் தலைமையில் தேர்தலில் பங்குபற்றிய முதற்சந்தர்ப்பம் இதுதான்.



விமலா கன்னங்கர



குசுமா ராஜரட்ன

இந்த தேர்தலின் பின் அமைக்கப்பட்ட 5வது பாராளுமன்றத்தில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பிரதமராக நியமிக்கப்பட்டார். **"தேர்தலில் கூட போட்டியிடாத ஒருவருக்கு எப்படிப் பிரதமர் பதவி வழங்க முடியும்? இது அரசியலமைப்புக்கு முரணானது** " என எதிர்தரப்பினர் இதனை சர்ச்சைக்குள்ளாக்கினர். ஆனால் **"செனட் சபைக்கு நியமன உறுப்பினராக ஒருவரை கொண்டுவரலாம். செனட் சபையில் உறுப்பினராக இருக்கின்ற ஒருவரை பிரதமராக நியமிக்கவும் முடியும். சோல்பரி அரசியலமைப்பின் படி இதைச்செய்வதில் ஒரு தடையும் இல்லை"** என ஸ்ரீ.ல.சு.க. தரப்பினர் சுட்டிக்காட்டினர்

இலங்கையின் வரலாற்றில் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையை திருமதி சிறிமா அடைந்தார். அதே போல் உலகிலேயே முதலாவது பெண் பிரதமரையும் உருவாக்கிய நாடு என்ற பெருமையை ஸ்ரீ லங்கா அடைந்தது.

### 1960 மார்ச் தேர்தல்கள்

| | | |
|---|---|---|
| **கொழும்பு வடக்கு** | | |
| ஏ.எம்.ஜீ.டீ.சில்வா | LPP | 1,164 |
| விவியன் குணவர்தன | LSSP | 8,602 |
| வின்சன்ட் சிறிபால | SLFP | 3,149 |
| கே.ஜே.எஸ்.ஏ.பெர்ணான்டோ | SMP | 52 |
| வீ.ஏ.சுகததாச | UNP | 9,446 |
| எஸ்.ஈ. நெல்சன் பெர்ணாண்டோ | F | 188 |
| **கனதி** | | |
| டீ. வி. அல்கம | LPP | 284 |
| திருமதி. என்.எஸ்.பெரேரா | LSSP | 1,769 |
| டீ. சீ. பீ. பெனரகம | MEP | 6,454 |
| எச். எச். பீ. சரத்குமார் | SJS | 187 |
| ஆர். எஸ். பெரேரா | SLFP | 9,318 |
| ஜே. ஆர். ஜெயவர்த்தன | UNP | 10,827 |
| **கொலன்னாவ** | | |
| ஒலிவர் அலஹகோன் | CIC | 63 |
| | LPP | 119 |
| ரூபா குணவர்த்தன | LSSP | 3,582 |
| கே.ஈ.பெரேரா | MEP | 8,608 |
| வில்லியம் கோனருவ | SLFP | 2,485 |
| ஆரியசேன லியனகே | SMP | 132 |
| டீ.ஏ.எஸ்.பெரேரா | UNP | 6,088 |
| **தெஹியோவிட்ட** | | |
| எம்.ஜீ.எச்.ஜயவர்தன | LPP | 235 |
| சோமா விக்கிரம நாயக்க | LSSP | 6,606 |
| ஏ.பீ.ரணதுங்க | MEP | 1,540 |
| சீ.பீ.ரணசிங்க | SLFP | 2,072 |
| ஏ.எவ்.விஜயமான்ன | UNP | 6,606 |
| எம்.ஜீ.ஜயவர்தன | I | 1,198 |
| **ரத்னபுர** | | |
| சரத்சந்திர முத்தெட்டுகம | CP | 4,117 |
| பி.ஜயசூரிய | LPP | 107 |
| காமன் மீதெனிய | LSSP | 3,047 |
| வீ.ஏ. | MEP | 5,385 |
| ஹெரால்ட் வேரகம | UNP | 7,434 |
| தர்மசிறி குருப்பு | I | 1,192 |
| **மஹர** | | |
| டி.ஆர்.ஜயமான்ன | CIC | 147 |
| ஜே.ஏ.கே.பெரேரா | CP | 297 |
| திருமதி. ஒலிவ் அமரசேகர | LPP | 386 |
| ஜே.பி.சிறிவர்தன | LSP | 1,651 |
| ஜீ.பி.அபேவிக்கிரம | MEP | 1,971 |
| ஆர்.ஏ.ரூபசிங்க | SJS | 186 |
| எஸ்.கே.கே.சூரியாராச்சி | SLFP | 15,098 |
| திருமதி. சிறிதத்த ஜெயக்கொடி | UNP | 9,002 |
| டி.சி.ஜெயகொடி | I | 85 |
| **பதுளை** | | |
| ஜே.சீ.ரீ.கொத்தலாவல | LSSP | 4,499 |
| பி.எச்.பண்டார | SLFP | 4,775 |
| திருமதி. லிலியன் பீரிஸ் | UNP | 3,549 |
| **கலிகமுவ** | | |
| ஜீ.எவ்.பெரேரா | BRP | 200 |
| ரிச்சர்ட் எம்.ராஜபக்ஷ | CP | 107 |
| அலெக்சாண்டர் பலஸ்நாயக்க | LSSP | 5,254 |
| எஸ.ஏ.பி.சமரகந்தர | MEP | 383 |
| பி.ஏ.பீ.பி.பாலசூரிய | SLFP | 5,484 |
| ஈ.டி.பி.லேகம்கே | SMP | 188 |
| திருமதி. விமலா கன்னங்கர | UNP | 9,025 |
| ஏ.சி.எம்.ராஸீக் | I | 217 |
| **அக்மன** | | |
| துடோர் வகிஸ்ட்ட | CP | 1,318 |
| திருமதி. பீ.சோமவத்திமெதிவ் | LPP | 2,758 |
| ரோய் ராஜபக்ஷ | MEP | 9,083 |
| விக்டர் ரத்னாயக்க | UNP | 6,884 |
| சேபால ரத்னாயக்க | I | 1,500 |
| **மஸ்கெலிய** | | |
| வீ.கே.வெள்ளையர் | CDC | 1,349 |
| பீ.பீ.பிள்ளை | CIC | 19 |
| யாகந்தவல சேனநாயக்க | CP | 121 |
| திருமதி.எ.பி.ஜயதிலக்க | LPP | 194 |
| பீ.காமினி ஆரியதிலக்க | LSSP | 2,256 |
| எஸ்ஜினதாஸ | MEP | 3,031 |
| ஆர்.பண்டார கண்ணேவ | SLFP | 631 |
| டொனால்ட் ரணவீர | UNP | 4,192 |
| பியதாச வெல்ஹேன | I | 116 |
| **ஊவா பரணகம** | | |
| திருமதி.குசுமா ராஜரட்ன | JVP | 4,662 |
| கே.வி.டொன் சுகததாச | LPP | 209 |
| ஹென்றி தர்மசேன | MEP | 352 |
| எம்.பி.பம்பரபான்ன | UNP | 2,695 |
| எஸ்..பி.தெலுகாவத்த | I | 1,790 |
| டீ.சி.விஜயசூரிய | I | 855 |
| எம்.டெனிஸ்டர் பெரேரா | I | 440 |
| ஈ.பி.திம்புலான | I | 429 |
| **கிரிஎல்ல** | | |
| எச்.அத்தநாயக்க | LPP | 131 |
| பீ.பி.விஜேசுந்தர | LSSP | 5,270 |
| திருமதி.குசும்சிறி குணவர்தன | MEP | 3,906 |
| டபிள்யூ .எல்.பீ.ஜயவர்தன | SLFP | 4,654 |
| ஏ.ஈ.பி.கிரியெல்ல | UNP | 6,816 |
| **மொரட்டுவ** | | |
| வின்னி டி சில்வா | CIC | 65 |
| வட்சன் பெர்ணான்டோ | CP | 1,091 |
| பீ.ஜே.ரி.ரொட்ரிகோ | LPP | 355 |
| டபிள்யூ .ரி.டபிள்யூ .மெரிஸ் பெர்ணான்டோ | LSSP | 9,427 |
| திருமதி.ரீ.கே.நீனா விஜேசூரிய | SJS | 2,137 |
| எம்.ருஸ்கின் பெர்ணான்டோ | UNP | 10,262 |
| சாமுவேல் பெர்ணான்டோ | I | 90 |
| எம்எஸ்.ஒலிவர் ஸ்டெம்போ | I | 197 |
| லியானாட் டிமெல் | I | 648 |

### 1960 யூலை தேர்தல்

| | | |
|---|---|---|
| **ஊவா பரணகம** | | |
| குசுமா ராஜரட்ன | JVP | 6,473 |
| எஸ்.பி.தெலுங்காவத்த | UNP | 4,830 |
| **தெஹியோவிட்ட** | | |
| சோமா விக்கிரமசிங்க | LSSP | 8,593 |
| குசும்சிறி குணவர்தன | MEP | 481 |
| ஏ.எவ்.விஜயமான்ன | UNP | 7,990 |
| **கலிகமுவ** | | |
| பி.ஏ.பி.ஏ.பாலசூரிய | SLFP | 10,873 |
| விமலா கன்னங்கர | UNP | 9,791 |
| **கொழும்பு வடக்கு** | | |
| விவியன் குணவர்தன | LSSP | 11,363 |
| வி.ஏ.சுகததாஸ | UNP | 11,507 |

**I** - Independent
**UNP** - United National Party
**SLFP** - Sri Lanka Freedom Party
**MEP** - Mahajana Eksath Peramuna
**LSSP** - Lanka Sama Samaja Party
**CP** - Communits Party
**LPP** - Lanka Prajathanthravada Pakshaya
**SMP** - Samajwadi Mahajana Peramuna
**SJS** - Sinhala Jatika Sangamaya
**CIC** - Ceylon Independent Congress
**BRP** - Budhist Repablican Party
**CDC** - Ceylon Democratic Congress
**JVP** - Jatika Vimukthi Peramuna

வரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# பத்திரிகைச் சுதந்திரம் இருண்ட யுகம் நோக்கி

**'அரசாங்கம் தன்னிஷ்டப்படி அதிகாரத்தை பாவிப்பதை எதிர்த்து நிறுத்தாதவரை ஒருவரின் தனிப்பட்ட சுதந்திரத்தையும் பாதுகாக்க முடியாது என்பதை பொதுஜன ஐக்கிய முன்னணி உறுதியாக நம்புகிறது.**

**அதைப்போல் தொடர்பு சாதனத் துறையினரை வலுவுறச் செய்வதற்கும் சுதந்திரமாகவும் எந்தவித பயத்திற்கும் இடமில்லாமல் தொடர்பு சாதனத் துறையினர் இயங்குவதற்கும் ஏற்ற சூழலை உருவாக்குவதற்கும் நாங்கள் அதிக அக்கறை செலுத்துவோம்.'**

பொ.ஜ.மு.ஆட்சிக்கு, வருவதற்காக பொதுத் தேர்தலின் போது தொடர்பு சாதனத் துறையினர்க்கு கொடுத்த வாக்குறுதி (தேர்தல் விஞ்ஞாபனத்தில்) இது. தவிர அரசியல் அமைப்பில் பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்திலும் பத்திரிகை சபை சட்டத்திலும் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு தடையாக இருக்கின்ற ஏற்பாடுகளை இல்லாமல் செய்வது, லேக் ஹவுஸ் நிறுவனத்தை அரச கட்டுப்பாட்டிலிருந்து தளர்த்துவது, பத்திரிகை கடதாசி வரித் தீர்வைகளைக் குறைப்பது போன்ற வாக்குறுதிகளை எல்லாம் அள்ளி வீசியது. ஆனால் குறுகிய காலத்திலேயே அத்தனை வாக்குறுதிகளையும் காற்றில் வீசி விட்டது பொ.ஜ.முன்னணி அரசு. சரிநிகரின் 68வது இதழில் (மார்ச் - ஏப்பிரல்) புதிய அரசாங்கம் பதவி ஏற்ற அரை வருடத்திற்குள் நடந்த பத்திரிகை சுதந்திர மீறல்கள் தொகுத்து வெளியிடப்பட்டிருந்தது. இத்தனைக்குப் பிறகும் பத்திரிகைகளுக்கு எதிரான அரசின் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டே செல்கிறது. அண்மையில் ஹிரு, லக்விம, திவயின, த ஐலன்ட் ஆகிய பத்திரிகைகளின் மீதான அரசின் நடவடிக்கைகள் இங்கு முக்கியமானவை.

## ஹிரு

செப்டம்பர் 3ம் திகதி வெளியான ஹிரு பத்திரிகையில் ''பொலிஸ் மா அதிபர் வெளியில்'' எனும் தலைப்புச் செய்தியில் ''புலர்ஸ் வீதி படுகொலைக்கு பொறுப்பான விசேட அதிரடிப்படை பொலிஸ் மா அதிபரின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற ஒரு பிரிவு. ஆகையால் அவரின் நிர்வாக காலத்தில் நடந்த இச் சம்பவங்களுக்கு பொறுப்பேற்று அவர் பதவி விலக வேண்டும்'' என எழுதி இருந்தனர். இச்செய்தியை இட்டு ஆத்திரமடைந்த பொலிஸ் மா அதிபர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி சி.ஐ.டி. யினரை ஏவிவிட்டார்.

செப்டம்பர் 5ம் திகதி ஹிரு காரியாலயத்திற்குள் புகுந்தனர் ஏ.ஏ.ஹெட்டியராச்சி தலைமையில் இரண்டு சி.ஐ.டியினர். மிரட்டலும் பலாத்காரமும் கலந்த தொனியில் அங்கிருந்த சகலரையும் விசாரித்தனர். குறிப்பிட்ட செய்தியுடன் தொடர்புடைய ஆசிரியர் குழுவினருடன் மட்டுமல்லாது அங்கு தொழில் புரியும் கணக்காளர், கணனி தட்டச்சாளர் உட்பட அங்கு வந்திருந்த ஹிரு வாசகர்களிடமும் பயமுறுத்தி வாக்கு மூலம் பெற்றுக் கொண்டனர். அத்தோடு நிறுத்தவில்லை. அடுத்த நாள் ஆறாம் திகதி மீண்டும் வந்து ஹிரு ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவரிடம் நீண்ட விசாரணையை நடாத்தினர். மீண்டும் அடுத்த நாள் 7ம் திகதி வந்த சி.ஐ.டியினர் மூவர் அங்கு வந்திருந்த வாசகர்களிடம் விசாரணை நடத்தினர். அவர்கள் தாங்கள் அவ்வாறு வாக்கு மூலம் அளிக்க முடியாது எனச் சொன்ன போது அவர்களை உரத்த குரலில் கண்டித்து மிரட்டி வாக்கு மூலத்தை எடுத்துக் கொண்ட

**என்.எஸ்.குமரன்**

னர். இவர்களிடம் இருந்து தனிப்பட்ட தகவல்கள் பல பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக பெயர், விலாசம், பெற்றோர், சகோதரர் அவர்களது கல்வி, தொழில் உட்பட பல தகவல்கள் எடுக்கப்பட்டன.

''நீங்கள் பத்திரிகையாளர்கள் என்பதற்காக பெரிதாக நினைக்க வேண்டாம். நாங்கள் உங்களிடம் வரும் போது சும்மா பொக்கற்றில் கையைப் போட்

15→



# எழுதவிடு

"இருந்தாலும் ஒன்றே இறந்தாலும் ஒன்றே" பத்திரிகையாளர் எங்கள் உரிமைக்காக...!

"சந்திரிகாவை வரச்சொல்லு இதற்கொரு பதிலைத் தரச்சொல்லு"

பத்திரிகையின் மீதான அரச யந்திரத்தின் அடாவடித்தனத்திற்கு எதிராக பத்திரிகையாளர்களால் செப்.13ம் திகதி கொள்ளுப்பிட்டி உல்லாசப் பிரயாணிகள் சபை கட்டிடத்திற்கருகில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது இந்த எதிர்ப்பு கோஷங்கள் சீறிப்பாய்ந்தன. பொலிஸ் DIG கொட்டக்கதெனிய இவ்வார்ப்பாட்டத்தை அடக்க முயற்சி செய்த போதும் பத்திரிகையாளர்கள் ஒன்றிணைந்து கடும் எதிர்ப்பைத்தெரிவித்ததன் மூலம் பொலிஸார் பின் வாங்கினர். புகைப்படக்கலைஞர் ஒருவரை DIG தனது கையால் தள்ளி விட முற்பட்ட போது DIGயை பத்திரிகையாளர்கள் அனைவரும் சூழ்ந்து சத்தமிட்டு போக்குவரத்து நெரிசலான காலிவீதியை அடைத்தனர். அதைத் தொடர்ந்து DIG மௌனமாக பின் வாங்கியதைத் தொடர்ந்து. சாலி வீதியில் போக்குவரத்துக்கு வழிவிட்டனர். சில நிமிடங்களில் DIG மீண்டும் ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருந்த இடத்தை நோக்கி வாகனங்களைத் திருப்பிவிட்டதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பத்திரிகையாளர்கள் வாகனங்கள் முன்னால் போய் அமர்ந்தும் படுத்தும் தடுத்து நிறுத்தி DIGக்கும் பொலிஸ்காரருக்கும் எதிர்ப்பையும் பலத்தையும் காட்டினர். பின்னர் பொலிஸ் அதிகாரிக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இடையில் நடந்த வாக்குவாதத்தின் இறுதியில் பொலிஸ் தரப்பினர் பின் வாங்க வேண்டிய நிலையேற்பட்டது.

அன்றைய தினம் பத்திரிகையாளர் மாநாடு நடத்தப்பட இருந்த தினமாகையால் அமைச்சர்களை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தனர்.

முதலில் அமைச்சர் அலவி மௌலானா அவர்களின் வாகனம் வந்தது. அவரது வாகனத்தை மறித்து அதனைச் சூழ்ந்த போது அமைச்சர் வாகனத்திலிருந்து இறங்கி பேச முற்பட்டார். அதற்கு முதல் பத்திரிகையாளர்கள் சூழ்ந்துக் கொண்டு

"எங்கே நீங்கள் தருவதாகச் சொன்ன பத்திரிகைச் சுதந்திரம்?"

"எங்கள் மீது CIDயினரை ஏவி விட்டது ஏன?"

"எங்களுக்கு சரியான தீர்வு வேண்டும்" என ஆத்திரத்துடன் கேட்டனர். அவரால் அதற்கு முகம் கொடுக்க முடியாமல் மீண்டும் தனது வாகனத்தில் அமர்ந்து எதிர்ப்புக்கள் மத்தியில் போனார். பின்னர் தொடர்புசாதன துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க வந்த போது அவரது வாகனத்தை மறித்தனர். அவரது வாகனமும் பத்திரிகையாளர்களை தள்ளிக்கொண்டே சென்றது. பத்திரிகையாளர்களின் கால்களில் ரயர் ஏறிச் சென்றது. பத்திரிகைச் சுதந்திரம் கொல்லப்பட்டுவிட்டதற்கு குறியீடாகக் காட்டக் கொண்டு வந்திருந்த மலர் வளையத்தை அமைச்சரின் வாகனத்தின் மீது வைத்து அனுப்பினர். பத்திரிகையாளர். அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் வந்த போதும் இதே எதிர்ப்பு நடந்தது. பத்திரிகையாளர் மாநாட்டுக்கு ஒரு சிலரை மட்டும் அனுப்பிவிட்டு ஏனைய பத்திரிகையாளர்கள் தொடர்ந்து தங்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அதற்கிடையில் பொலிஸ் படையினரும். STFஇனரும் கொண்டு வந்து குவிக்கப்பட்டனர். பத்திரிகையாளர்களைவிட பொலிஸாரின் தொகை அதிகமாக இருந்ததைப் பார்த்த போது பத்திரிகையாளர்களுக்கு எதிராக பொலிஸார் ஆர்ப்பாட்டம் பண்ணியதைப் போல் இருந்தது. எவ்வாறாயினும் உள்ளே நடந்துகொண்டிருந்த அன்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் பத்திரிகை மீதான அராஜக நடவடிக்கைகள் பற்றி கேள்வியெழுப்பிய போதும் அது பற்றி அரசாங்க பேச்சாளர்களாக கலந்து கொண்ட அமைச்சர்கள் எவரும் எந்த வித அக்கறையையும் காட்டவில்லை.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் இதற்கான சரியான முடிவுகள் காணப்படாவிட்டால் இனிமேலும் இவ்வகையான நடவடிக்கைகள் தொடர்ந்தால் தொடர்ந்து வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வது என பத்திரிகையாளர்கள் முடிவெடுத்தனர்.



# தெய்வப்பதவி வேண்டாம்

**குரமகள்**

ஔவையின் கட்டுரைக் கண்டு ஆச்சரியம் அடைந்தேன். படித்த ஆண்கள் மத்தியிலும் சில மன மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும் எனும் என் மன எண்ணம் ஈடாட்டம் கண்டு விட்டது.

சரிநிகர் சமானம் என்னும் கூற்று எங்கள் காலத்திலேயே மேடைகளில் ஒரு சிலரால் முழங்கி வரப்பட்டது. எமது பேருக்கும் புகழுக்கும் இழுக்கு வந்தாலும் பரவாயில்லை என்ற ரீதியில் செயற்பட்டு வந்த எமக்கு, ஆண் பெண் இருபாலரிடம் இருந்தும் இருட்டடிப்பு நடந்தது. எனினும் பத்திரிகையாளர்கள் பிரசுரம் செய்து ஆதரவு தந்தனர். ஔவை குறிப்பிட்டவர்கள் உட்படப் பலருடனும் சரிநிகர் சமானமாக அறிவிலும் ஆற்றலிலும் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டு பெண் சளைத்தவளல்ல என நிரூபித்திருக்கின்றோம்.

ஆனால் இரத்தத்திலூறிய தனியுடமைக் கருத்தை அழித் தொழிப்பது துர்லபம். அம்மாவை மாத்திரமல்ல ஆச்சியையும் உறிஞ்சி வாழ்ந்தவர்களிடம் உணவை மென்று தின்னக் கூடிய வயதிலும் பால் குடித்து வளர்ந்தவர்களிடம் சுயநலம் தானே மேலோங்கி நிற்கும்.

குடும்பம் சிதைகிறது 'சிதைவு''சிதைவு' என்று கூக்குரல் இடுபவர்களுக்கு 'இயற்கையின் தத்துவம்' என்ன என்ற சிறு விஞ்ஞான அறிவு கூட இல்லையே. ''ஒன்றும் சிதைவதில்லை மாற்றம் பெறுகிறது'' அவ்வளவே. பெண் வேலைக்கு போவதால் பழைய கட்டுக்கோப்பான குடும்ப நிலை சிறிது மாற்றம் பெறுகிறது. நாட்டின் தட்ப வெப்ப நிலைகளுக்கும் விஞ்ஞான வளர்ச்சியினால் உலகில் ஏற்படும் மாற்றங்களுக்கும் தம்மைப் பொருத்தப்பாடு கண்டு அனுசரித்து நடந்து கொள்ளும் மனிதன், எதற்காக பெண்கள் விடயங்களில் அனுசரிக்க மறுக்கிறான். அனுசரிக்க மறுப்பவனைக் காலம் காலாலே உதைத்துத் தள்ளிவிட்டு முன் போய்விடும். மன மாற்றம் நிகழும் நிகழும் எனப் பெண்களாகிய நாம் காத்திருக்கமுடியாது. நாமென்ன சீதைகளா? 'வருவார் வருவார்' எனப் பொறுத்திருந்து பல ஆண்களின் வன்முறைகளுக்கும் உட்பட்டு மான பங்கப்பட? சமூகம் சமுதாயம் எனக் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்க நம்மால் முடியாது. நாமும் சமூகத்தின் பாதிப்பங்கினரே. எமது கொள்கைப்படி நாம் ஓடிக்கொண்டேயிருப்போம். விரும்புபவன் அனுசரித்து அயலில் ஓடிவரட்டும். எம் உதவி தேவையெனில் மற்றவன் பின்னே ஓடி வரட்டும். 'பெட்டைக் கோழி கூவி விடிந்து விடுமா' என்பவன் சேவற் கோழிகளாய்க் கூவிக்கொண்டே இருக்கட்டும். விடிந்து விடுமா பார்ப்போம்.

மேல் நாடுகளில் குடும்பமே ஒரு ஜனநாயக அமைப்பாக மாறி வருகிறது. குழந்தைகள் கூட அடக்கி ஒடுக்கப்படுவதில்லை. அங்கே தான் விஞ்ஞானம் வளருகிறது. எல்லோரும் சேர்ந்தே திட்டமிடுகிறார்கள். வியாழக்கிழமைகளில் குப்பை வெளியேவைக்க வேண்டும். யார் நிற்கிறார்களோ அவர்கள் செய்வார்கள். வாரத்தில் ஒரு நாள் எல்லாரும் ஒன்றாக இருக்கவேண்டும். அதற்காக அவர்கள் மற்ற வேலைகளை ஒத்திவைப்பார்கள் அல்லது வேறு ஒழுங்கு செய்வார்கள். அம்மாவும், அப்பாவும் அன்று வேலையா? பிள்ளை (6வயது) பிற்சாவுக்கு போனில் ஓடர் செய்து, கதவைத்தட்டுபவனுக்குக் காசைக் கொடுத்து வாங்கி வைக்கும். உல்லாச வேளைகளை பூங்காவில் கழிக்க ஒழுங்கு செய்வார்கள். முதலில் வருபவர் சமையலை முடிப்பார். பிந்தி வருபவர் பாத்திர பண்டங்களைக் கழுவித்துடைத்து வைப்பார்கள். எனவே குடும்ப உறவுகள் அங்கே பேணப்படுகின்றன. அப்படியான ஜனநாயக ரீதியில் குழந்தைகளும் சேர்ந்து திட்டமிடுகிறார்கள். எனது 6 வயதுப் பேரன் '' சென்ற முறை அப்பா தன் வேலையை மாற்றி எடுத்தவர் ஆனபடியால் இம்முறை அம்மா தான் மாற்றி எடுக்கவேண்டும். என்று சொல்வான். சுமுகமாகக் குடும்பங்கள் நடக்கின்றன. வேலைப்பளு ஒருவரில் தாக்காது. இந்த வேலை இன்னார் தான் செய்ய வேண்டும் என்பதில்லை. எந்த வேலையும் எல்லோரும் செய்யலாம். எனவே பனி வறுகுவது, புல் வெட்டுவது முதலியனவற்றை பெண்களும் செய்கிறார்கள்.

பிரசவ லீவு 6 மாதங்களுக்கு முழுச்சம்பளத்துடன் கொடுக்கிறார்கள். பல்முளைக்கத் தொடங்கிவிட்டால் பால்குடி மறக்க வேண்டியதே. நம் நாட்டிலேயே சொல்வார்கள் 6 மாதம் ஆனவுடன் தாய்க்கு முடிகொட்டும். உடம்பு வாடத்தொடங்கிவிடும். பல் கூசும் என்றெல்லாம். இது ஏன்? யோசித்துப் பார்த்தீர்களா? குழந்தை தேவைக்கு அதிகமாகவே தாய்ப்பாலை உறிஞ்சத் தொடங்கி விடுவதால் தாய்க்குத் தேவையான இரத்ததில் ஊட்டச்சத்து குறைகிறது.

ஆணாதிக்கச் சிந்தனையால் பாதிக்கப்பட்ட பெண்கள் பலர் தனித்தாய் (Single Mother) வாழ்க்கை முறையைத் தேர்ந்து எடுக்கிறார்கள். தாய்மை உணர்வுக்கு அடிமைப்பட்டவள் ஒரு தாயாவதில் தவறில்லை. ''ஒரு குழந்தையையும் ஒரு கிழட்டுக் குழந்தையையும் என்னால் கவனிக்க முடியாது குழந்தை அழும்போதுதான் கணவன் முகம் சவரம் செய்யத்தேவையானவற்றை எடுத்துவை என்கிறார். இதைச் செய்வதா? பாலகனைப் பார்ப்பதா? என்கிறாள் ஒரு தாய். மாற்றங்களுக்கு அனுசரித்துப் போகாதவரை ஆண்கள் பெண்ணின்பத்தையும் தந்தை ஸ்தானத்தையும், பரம்பரையையும் இழக்க வேண்டியதுதான். ஏனெனில் தனித்தாய் வாழ்க்கை முறை சீக்கிரம் எம்மிடையேயும் வந்துவிடும்.

குடும்பத்தின் இக்காலத் தகவமைப்பு முறையை மாட்டுவண்டிக்கால இயல்பு வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பேசுதல் அடிமுட்டாள் தனம். ஓசோன் ஓட்டைபற்றி பெரும் விசாரம் அடைந்துள்ள நாங்கள் குடும்பத்தில் ஓட்டை விழாமல் பாதுகாப்பதற்குக் காலத்துக்கேற்ற வகையில் மாற்றம் பெற வேண்டும். பெண்கள் விடயத்தில் மாத்திரம் புதிய சிந்தனைகளுக்கு இடங்கொடாதோருக்கு ஓர் எச்சரிக்கை! காலச்சக்கரம் உங்களை இருளில் அமிழ்த்தி அது தன் பாட்டில் ஓடிக்கொண்டிருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கரை சேர்வது எப்போ?



மூதூரில் பல பகுதிகளில் உணவுப் பற்றாக்குறை படு மோசமாக நிலவுகின்றது. மூதூர் நகரத்தில் உணவுப் பொருட்கள் போதியளவு இன்றியும் அவற்றை எடுத்துச் செல்ல கிராமப்புற மக்களுக்கு இராணுவத்தினரால் கட்டுப்பாடு விதிக்கப்படுவதால் கிராமப்புற மக்கள் அரைப்பட்டினியிலேயே காலம் தள்ளுகின்றனர்.

### மக்கள் அரைப்பட்டினி

குறிப்பாக, பாட்டாளிபுரம், வீரமாநகர், மலையுந்தல், உப்பூறல், நல்லூர், இளக்கந்தை, சூடைக்குடா, கூனித்தீவு, சம்பூர், கடற்கரை சேனை, சேனையூர், கட்டைபறிச்சான் கணேசபுரம், கிரவல்குளி சந்தனவெட்டை போன்ற கிராமங்களில் வாழும் மக்கள் வாரம் ஒரு தடவை அனுமதி பெற்றே குறிப்பிட்ட அளவு பொருட்களை எடுத்துச்செல்கிறார்கள். இவ்வனுமதியானது வாரம் தோறும் கிராம சேவகரிடமிருந்து பெறப்பட்டு இராணுவ அதிகாரியால் ஒப்பமிடப்பட்ட பின்னரே செல்லுபடியாவதால் மக்கள் அனுமதிக்காகவே பெரும் பொழுதைக் கழிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

மேற்கூறப்பட்ட அத்தனை கிராமங்களுக்கும் அனுமதி வழங்கும் பணி நெறகளஞ்சிய இராணுவ முகாமிலேயே இடம் பெறுகிறது. அனேகமாக ஒரு அதிகாரியே இந்தப் பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார். இதனால் பல கிராம மக்களும் அனுமதிக்காக ஒரே இடத்தில் கூடுவதால் கூடிய சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய இருக்கிறது.

ஈச்சிலம்பற்றை வெருகல் பகுதிகளிலும் ஏறத்தாழ இத்தகைய நிலையே நில்வுகிறது. உணவுத் தட்டுப்பாடும், இயங்காத மருந்தகமும் இந்தப்பகுதி மக்களை வதைக்கின்றன. இந்நிலை பற்றி உரிய அதிகாரிகளுடன் பிரபல சமூக சேவையாளர் எஸ்.குணநாயகம் தொடர்பு கொண்டுள்ளார். நிவாரணம் கிடைக்குமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

### படகு படுத்து விடுகிறது

திருகோணமலை மூதூர் படகுச் சேவை சீர்கெட்டுப் போயுள்ளது. நூறு பேர் பயணம் செய்யக்கூடிய ஒரு படகும் அறுபது பேர் பயணம் செய்யக்கூடிய ஒரு படகுமே இங்கு சேவையில் உள்ளன. தினமும் ஏதாவது ஒரு படகு நோய் வந்து படுத்துவிடுவதால் சராசரி ஒரே ஒரு படகுதான் சேவையில் ஈடுபடுகின்றது. இந்த நிலையில் அரசாங்க ஊழியர்கள் வியாபாரிகள், பொதுமக்கள் என்று சராசரி இருபக்கத்திலும் ஆயிரம் பேராவது பிரயாணத்திற்க காத்து நிற்கையில் இந்தச் சேவை ஆனைப் பசிக்கு சோளப் பொரிதான்.

### பாதாள மலையில் சிக்கிய படகு

அண்மையில் படகொன்றிற்கு நடுக்கடலில் பாதள மலை எனப்படும் இடத்தில் வைத்து நோய் கண்டுவிட்டது. படகு வட்டம் போடத் தொடங்கியது. இதே இடத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் படகு ஒன்று கவிழ்ந்து அறுபதுக்கு மேற்பட்ட பயணிகள் பலியாகினர். பல பயணிகளின் சடலங்களும் இன்றுவரை மீட்கப்படவேயில்லை. இந்த நினைவில் மக்கள் பதறிப்போன நிலையில் படகு செலுத்துனர் தனது திறமையால் ஒன்றைகால் மணி நேரப் பயணம் சுமார் மூன்று மணி நேரம் எடுத்த போதிலும் மக்களையும், படகையும் கரை சேர்த்து விட்டார்.

பயணத்திற்கென வெளிக்கிடுவதும், பல மணிநேரம் கியூவில் நின்றும் இடம் கிடைக்காமல் திரும்பி இன்னொரு நாள் பயணம் மேற்கொள்வதும் திருகோணமலை, மூதூர் மக்களுக்கு பழகிப் போன சங்கதி. ஐக்கிய தேசியக் கட்சியில் பிரதி அமைச்சராக ஜனாப் மஹ்றூப் இருந்த காலத்தில் முக்கால் மணி நேரம் மேற்கொள்ளப்பட்ட இந்த படகுப் பயணம், மூதூர், திருமலை முஸ்லீம் மக்களின் வாக்குகளில் முழு அமைச்சராக இருக்கும் ஜனாப் அஷ்ரப் காலத்தில் மூன்று மணி நேர பயணமாகி விட்டதே என்ற கவலை தான் இங்குள்ள மக்களுக்கு.

### படகுத்துறையில் பயணிகள் விடுதி

இந்த விடயத்தில் பயணிகளுக்கு உதவவென திருகோணமலை நகரபிதா புதிய முயற்சியொன்றில் இறங்கியுள்ளார். படகில் இடம் கிடைக்காத நிலையில் திருகோணமலையில் தெருவில் தவிக்கும் மூதூர் மக்களின் துயரத்தைக் கருத்திற் கொண்டு இறங்குதுறைக்கு அருகில் ஐம்பது லட்சம் ரூபா செலவில் பயண விடுதிகள் ஒன்றுக்கான வேலைகளை ஆரம்பித்துள்ளார். உடனடியாக மூதூர்ப் பயணிகளின் கஷ்டத்தைக் கருத்திற் கொண்டு இப்பயணிகள் விடுதி ஆரம்ப்பிக்கப்பட்ட போதிலும் திருமலை நகரத்தில் தரமான விடுதி இல்லாக்குறையை இது தீர்க்கும் என எதிர்பார்க்கலாம்.

நூலக வசதிகளுடன் அமைக்கப்பட்டு வரும் இவ்விடுதி இன்னும் இரண்டு மாதங்களில் இயங்க ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்களும், பெண்களும் தனித்தனியாகவே தங்க வைக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் வேண்டாதவர்கள் இவ்விடுதிக்கு வரமாட்டார்கள் என்றும் நம்பலாம். நகர பிதாவின் எண்ணப்படி இந்த விடுதி இருக்குமானால் கௌரவமாகவே இருக்கும்.


## சுதந்திர இலக்கிய விழா 1995

இளம் படைப்பாளிகளுக்கான சிறுகதை, கவிதைப் போட்டிகளுக்கான முடிவுத் திகதி **ஒக்டோபர் 31ம்** திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**அமைப்புக் குழு,**
**61, பழைய கொட்டாவ வீதி, மிரிஹான,**
**நுகெகொட.**


## திருமலை: மீள் எழுச்சியின் வீழ்ச்சி...

பிடப்பட்டுள்ளதாக அந்த ஊர் பிரமுகர் ஒருவர் கூறுகிறார். 250 மட்டைக் கிடுகு, இரண்டு பக்கற் சீமெந்து ஆணி, 10 முடிச்சு கயிறு காட்டுக் கம்புத் தடி இவைகளின் பெறுமதி தான் இவை. அரச சார் பற்ற தொண்டர் நிறுவனங்கள் கொள்ளையடித்து விடும் என்பதால் அரச அதிகாரிகளே முன்னின்று மக்களுக்கு வழங்கிய கொடை இது.

இந்த வீடுகள் இன்று மழைக்கு ஒழுகி சுவர்களை கரைத்து விடும் நிலையிலுள்ளது. அனேகமாக அடுத்த கோடைக்கு அத்தனை பேரும் புதிய வீடுகள் தான் கட்ட வேண்டும். சாப்பாட்டுக்கு வருமானம் இல்லாத போது வீடு திருத்துவது எப்படி என்கிறார்கள் மக்கள்.

காட்டுக்குப் போகத் தடை; விறகு வெட்டுதல் இல்லை. விறகில்லாததால் செங்கல் உற்பத்தி இல்லை. கடலுக்குள் இறங்கத் தடை; மீன்பிடித் தொழில் இல்லை; நீர்வசதி இல்லை; பயிர்த் தொழில் இல்லை. திருகோணமலை நகருக்குள் கூலி வேலைக்கு போட்டியிடுவோர்களில் கப்பல் துறை ஆண்களும் அடக்கம்.

மின்சாரம் தெருவில் உள்ளது. இரவில் தெருவிளக்குகள் எரிகின்றன. வீட்டின் தரமும், வாழ்க்கைத் தரமும் உயராத வகையில் தெருவிளக்கோடு திருப்திப்படுவதைத் தவிர இவர்களுக்கு வேறு வழியில்லை.

வெவ்வேறு இரண்டு இடங்களில் தலா மூன்று மண்டபங்களுக்கென்று ஒரு பாடசாலை இயங்குகின்றது. ஒரே அதிபர் தமிழ் பிள்ளைகளுக்கும் சிங்களப் பிள்ளைகளுக்கும் வேறு வேறாகப் படிப்பிக்கின்றார். ஆசிரியர்களுள் இருசாராரும் வேறு வேறாக இருக்கிறார்கள். தேசிய ஒற்றுமை என கல்வித் திணைக்களம் கூறலாம். பாடசாலை தொடர்ந்து தமிழர்களால் பயன்படுத்தப்படும் வசதி நீடிக்குமா என்பதுதான் பிரச்சினை?

இந்தப் பகுதி மக்களுக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்க அரசு முன்வராத வகையில் காலையில் எழுந்து பள்ளிக்கு காசு கொடுத்து நகருக்கு வந்து தொழில் தேடுவதும், கைகூடாத பட்சத்தில் மாலையில் வீடு திரும்பி மனைவி பிள்ளைகளின் பட்டினியைப் பார்த்து கைகளைப் பிசைவதும் தான் இப்பகுதி ஆண்களின் நிரந்தர தொழிலாக இருக்கப் போகிறது. மீள் எழுச்சி வீழ்ச்சி ஆகாமல் இருப்பது சேவை மனப்பான்மையுள்ள அதிகாரிகளின் கரங்களில் தான் தங்கி உள்ளது.

## பத்திரிகைச் சுதந்திரம்.....

டுக் கொண்டு வந்திருக்கிறோம் என்றா நினைத்தீர்கள்'' என மிரட்டி இருந்தார் ஹெட்டியராச்சி.

இந்த அரசாங்கம் பதவி ஏற்றதிலிருந்து ஹிரு பத்திரிகைக்கு எதிராக நடந்து கொண்ட நான்காவது சந்தர்ப்பம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

### திவயின, த ஐலன்ட்

''அரசாங்க கட்சிக் கூட்டத்தின் ஆர்பாட்டம்'' என்ற தலைப்பைக் கொண்ட செய்தி செப்டம்பர் 6ம் திகதி திவயின மற்றும் த ஐலன்ட் பத்திரிகைகளில் வெளியாகி இருந்தது. இந்தச் செய்தி அரசாங்கத்தை அவமதிக்கும் வகையில் புனையப்பட்டதாக உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரனவால் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டதன் பேரில் 7ம் திகதி திவயின, த ஐலன்ட் காரியாலயங்களுக்குள் புகுந்து விசாரணை செய்தனர் சி.ஐ.டியினர். உபாலி பத்திரிகை நிறுவனத்தின் பிரதான காரியாலயம் மற்றும் அச்சகத்தை சோதனை செய்வதற்கும் அக்குற்றம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை கைது செய்வதற்கும் குற்றம் புரிவதற்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களை (அச்சுத்தகடு போன்றவை) கைப்பற்றவும் குறிப்பிட்ட ரகசியப் பொலிஸ் அதிகாரிகளுக்கு நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அதன்படி திவயின பிரதம ஆசிரியர் உபாலி தென்னக்கோன், செய்தி ஆசிரியர் ஷான் விஜேதுங்க ஆகியோரிடமிருந்து வாக்குமூலம் பெறப்பட்டது. த ஐலன்ட் ஆசிரியர் காமினி வீரக்கோன் அதன் செய்தி ஆசிரியர் ரவி லக்துவ ஹெட்டி ஆகியோரிடமிருந்தும் வாக்கு மூலம் பெறப்பட்டது. 6ம் திகதி வெளியாகியிருந்த பத்திரிகையின் அச்சுத்தகடு என்பனவும் கொண்டு செல்லப்பட்டன.

### லக்பிம

ஓகஸ்ட் 13ம் திகதி லக்பிம பத்திரிகையில் முன்பக்கத்தில் வெளியான ''மூன்று மணித்தியாலய ரெலிகொம் ஆரம்ப விழாவிற்கு 20 லட்சம் செலவு'' எனும் தலைப்பில் வெளியான செய்தியின் காரணமாகவே லக்பிம பத்திரிகை காரியாலயமும் சி.ஐ.டியினரின் விசாரணைக்குள்ளானது.

குறிப்பிட்ட அந்தச் செய்தியில் பாதுக்கவில் நிறுவப்பட்டு வரும் செய்மதிக் கோபுரம் ஒன்றின் திறப்பு 'விழா ஏற்பாட்டுக்கு உண்டான செலவு பற்றி வெளியாகி இருந்தது. '' மூன்று மணித்தியாலம் கூட நடக்காத ஒரு திறப்பு விழாவுக்கு பாரிய தொகை செலவு செய்யப்பட்டமை பெரிய அநியாயம் ஆகும். இந்தப் பணம் அந்த நிறுவனத்திற்கு பொறுப்பான அமைச்சர் மங்கள சமரவீரவினுடையதோ அல்லது ரெலிகொம் நிறுவன தலைவரது சொந்தப் பணமோ அல்ல. மக்கள் பணம். அன்று எதிர்கட்சியில் இருந்த போது மங்கள சமரவீர உள்ளிட்ட பொது ஜன முன்னணி மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியில், ''பிரேமதாச யுகத்தில் நடாத்தப்பட்ட ஆடம்பரச் செலவுகள் முதலில் நிறுத்தப்படும் என தெரிவித்திருந்தது. இன்று அவர்களது முகமூடியைக் கிழித்ததில் நாங்கள் செய்த பிழை என்ன?'' என்கிறார் லக்பிம பத்திரிகை ஆசிரியர் பந்துல பத்மகுமார. செப்டம்பர் 2ம் திகதியன்று லக்பிம காரியாலயத்திற்குள் புகுந்த சி.ஐ.டியினர் அதன் ஆசிரியரை விசாரணை செய்துள்ளனர். அதுமட்டுமல்லாது குறிப்பிட்ட செய்தி வெளியான அச்சுத்தகடு என்பவற்றை கைப்பற்றி இருக்கின்றனர். இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் விசாரணையின் போது ரெலிகொம் நிறுவனம் பற்றிய குறிப்பிட்ட தகவலை தந்தவர் யார் எனும் கேள்வியைக் கேட்டமை. தகவல் ஊடகத்தை (News Source) வெளிப்படுத்தக் கோரி நிர்ப்பந்திப்பது மிகவும் மோசமான அரச வன்முறையாகவே கருதப்பட வேண்டியதொன்று.

இப்படியான பத்திரிகைகளின் மீதான அரசின் ஒடுக்குமுறையை கண்டித்தே பத்திரிகையாளர்களின் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தது. ''சுதந்திரப் பத்திரிகையாளர் இயக்கம்'' இதுபற்றி வெளியிட்ட பத்திரிகை அறிக்கையொன்றில்

''பத்திரிகைக்கு தகவல் கிடைத்த வழியை தெரிவிக்க கோரி சி.ஐ.டியினரை விட்டு மிரட்டுவது பத்திரிகைகள் மீதான மிரட்டலே. தகவல் கிடைக்கும் வழிகளை ரகசியமாக பேண வேண்டியதன் முக்கியத்துவத்தை பொலிஸ் துறையினரும் அரசும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

மேலும் ஹிரு பத்திரிகைக் காரியாலயத்தில் பொலிஸார் நடந்து கொண்ட முறைக்காக அவர்களிடம் ஸ்ரீ லங்கா பொலிஸார் மன்னிப்பு கோர வேண்டும். அத்தோடு பத்திரிகைகள் மீது ஏதேனும் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டால் கூடிய பட்சமாக நீதி மன்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். அதற்கென்றே பத்திரிகை கவுன்சில் என்பவை இருக்கின்றன. அதைவிட்டு பொலிஸாரையும் சி.ஐ.டியினரையும் கொண்டு நடத்தப்படும் இவ்வகைச் செயல்களை சுதந்திரப் பத்திரிகையாளர் இயக்கம் வன்மையாக கண்டிக்கிறது'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திருமலை: புலிகளின்.....

அவர்களுடைய பாதுகாப்பிற்கும் இந்த அரசும், அரசில் பங்காளிகளாக உள்ள முஸ்லீம் தலைவர்களும் உடனடியாக தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் முஸ்லீம் தலைவர்கள் குறிப்பாக முஸ்லீம் காங்கிரஸார் மக்களுக்கு பதில் சொல்லியே ஆகவேண்டும்.

முஸ்லீம்கள் மத்தியில் வந்து தேர்தல் காலங்களில் வாக்குப் பிச்சை கேட்டு, முஸ்லீம்களின் உணர்வுகளைத் தூண்டிவிட்டு, தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்களைத் தரிசிக்கும் அரசியல்வாதிகள், அந்த மக்கள் கஷ்டப்படும் போது அவர்களுக்கு எந்தவித உதவிகளையும் செய்யாது இருப்பது அவர்களின் போலி அரசியலையேதோலுரித்துக் காட்டுகிறது அல்லவா? அப்பாவி மக்களை பாதிக்கின்ற அனைத்து அழிவு நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்டவர்கள் உடன் நிறுத்திவிடுவதே இப்போதைக்கான அவசரத் தேவையாகும்.

**தகவல் :தந்தாவீ.ஏ.ஜே.**
**விவேகி, அதிகபட்சன்**
**தொகுப்பு: பாதுஷா**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
'SARINIHAR
சரிநிகர்

# பிரகடனப்படுத்தப்படாத யுத்தம்!

உக்ரேனிலிருந்து கொண்டுவரப்பட்ட அன்ரனோவ் -32 ரக விமானங்களிலொன்று கட்டுநாயக்கா பகுதி கடலில் விழ்ந்தது குறித்து விசாரணைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

நீர் மூழ்கிக் கப்பல்கள் கொண்டு தேடியும் இன்னமும் சடலங்கள் எதையும் எடுத்துக் கொள்ள முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மூன்றாவது ஈழயுத்தம் ஆரம்பமாகிய பின் அடுத்தடுத்து இலங்கையின் ஆயுதப்படையினர் எதிர்நோக்கிய இழப்புகளில் மிகவும் பாரிய இழப்பாக இதைக் கொள்ளலாம் என்கின்றனர் இராணுவ ஆய்வாளர்கள்.

அவ்ரோ விமானங்கள் இரண்டு; புக்காரா விமானம் ஒன்று, பீரங்கிக் கப்பல்கள் இரண்டு என்று கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த படைக்கலன்கள் கடந்த ஒருசில மாதங்களுள் இழக்கப்பட்டுள்ளன.

இந்த இழப்புகள், யுத்தமூலம் சமாதானத்தைக் காண விரும்புகின்ற பாதுகாப்பு அமைச்சர் அநுருத்ரதவைக் கூடக் கலக்கிவிட்டுள்ளதாகத் தோன்றுகிறது. 'மகாவலிக்கு கூட நாம் யுத்தத்துக்குச் செலவழிக்கும் பணத்தை செலவழித்ததில்லை' என்று அவரே சொல்லும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

நாட்டின் பொருளாதார நிலை நாளுக்கு நாள் சிதிலமடைந்து வருவது பற்றி யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்த அரசாங்கம் பதவிக்கு வரும்போது இருந்த பொருட்களின் விலையில் பாணைத்தவிர மற்றெல்லா நுகர்வுப் பொருட்களினதும் விலை ஏறிவிட்டது. பாணின் விலையைக்கூட கூட்டுவதைத் தவிர வேறு வழி இல்லை என்ற நிலைக்கு வந்துள்ளது அரசாங்கம்.

நாட்டின் மற்றெல்லாச் செலவுகளையும் விட அதிகமாகவும், நாட்டின் பொருளாதாரத்தைப் பெருமளவு பாதிப்பதாகவும் அமைந்துள்ளது யுத்தத்துக்கான செலவுகளே என்பதில் அரசாங்கத்துக்குள்ளேயே மாறுபட்ட கருத்து இல்லை. யுத்த செலவீனம் இல்லாது போகுமானால், நாட்டை செழிப்புள்ள நாடாக மாற்றி விடலாம் என அரசாங்க தரப்பு வாதிகளும் கூட கூறுகின்றனர்.

ஆனால், நோயும் தெரிந்து, நோய்க்கு மருந்தும் தெரிந்து அந்த மருந்தைக் கொடுக்கும் அதிகாரமும் இருக்கின்ற போதும் அதைச் செய்ய மட்டும் முடியாது என்று நிற்கிறது அரசாங்கம்.

பள்ளிப் பிள்ளைக்குக் கூட தெளிவாகத் தெரிகிற ஒரு விடயத்தை நடைமுறைப்படுத்த முடியாது என்று சாதிப்பதுதான் அரசியல் நெறிமுறையென்றாகி விட்டது இங்கு.

யுத்தத்தை நடாத்திய ஒவ்வொரு ஆட்சித் தலைவரும் (ஜே.ஆர் முதல் விஜேதுங்க வரை ஒவ்வொருவரும்) திருப்பித் திருப்பி நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றிப் பேசினார்கள்; ஆனால் அதைச் சீர்குலைக்கும் விதத்தில், யுத்தத்தைத் தொடர்ந்தார்கள்.

இப்போது சந்திரிகா அரசாங்கமும் அதையே செய்து வருகிறது.

நாட்டை பிளவுபடுத்த அனுமதிக்கமாட்டோமென்று கத்துகின்ற அரசாங்கம், அது ஏற்கெனவே பிளந்து போய்க் கிடப்பதைப் பார்க்க மறுக்கிறது. யுத்தமூலம் புலிகளை அழித்து தமிழ் மக்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுப்போம் என்று கூறும்போது, அந்த யுத்தத்தால் கொல்லப்படுபவர்கள் தமிழ் மக்கள் தான் என்பதை மறந்து விடுகிறது.

1983இல் வெடித்த யுத்தம் கடந்த 12 ஆண்டுகளில் பல்லாயிரக் கணக்கான உயிர்களை அழித்துவிட்டது; பல கோடிக்கணக்கான பெறுமதிமிக்க சொத்துக்களை நாசமாக்கி விட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக, நாட்டின் ஒருபகுதியில் வாழும் மக்களதும் அவர்களது இளஞ் சந்ததியினரதும் வாழ்வையே மரண பயத்துடனான வாழ்வாக, யுத்தமல்லாதவொரு, சூழலை அறிய முடியாத ஒரு வாழ்வாக மாற்றி விட்டது. 1983ல் 8 வயதாக இருந்த சிறார்கள் இன்று தமது 22வயது வாலிபப்பிராயம் வரை அமைதியைக் கண்டிருக்க மாட்டார்கள். கொலையும் மரண ஓலமும், ஒரு இனம் என்ற முறையில் நாம் திட்டமிட்டுக் கொல்லப்படுகிறோமென்ற விரக்தியும், இந்த விரக்தியின் காரணமான தீவிர எதிர்ப்புணர்வும் கொண்ட சந்ததியாக அவர்கள் உருவாக்கப்பட்டு வருகிறார்கள். அரசு என்பது சிங்கள அரசே என்றும் ஆயுதப்படை என்பது எம்மைக் கருவறுக்க வந்த எதிரியின் இனவெறிப் படையே என்றும் கருதும் முற்றுமுழுதான அந்நியமான மனோநிலை படைத்த சமூகமாக யாழ்ப்பாணத் தமிழ் சமூகம் உருமாறி வருகிறது என்பதை இன்றைய அரசாங்கமும் விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

புலிகளின் மோசமான பக்கங்களை வைத்துக் கொண்டு தம்மையும் தமது நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தவும், தமிழ் மக்களை தம்பால் வென்றெடுக்கவும் முயல்கிறது அரசாங்கம்.

ஆனால் பரிதாபம் என்னவென்றால், சட்டியில் சூடு இருக்கிறது என்பதற்காக அடுப்புக்குள் குதிக்கும் அளவுக்கு முட்டாள்கள் அல்ல தமிழ் மக்கள் என்பதை யாரும் புரிந்து கொள்வதாகத் தெரியவில்லை.

கடந்த பத்தாண்டுகட்கு மேலான யுத்தம் சற்றேறக் குறைய வீட்டுக்கு ஒரு உயிரையாவது பலிகொண்டிருப்பதைத் தெரிந்து வைத்திருந்தால் தமிழ்மக்களது அபிமானம் தம்மீதோ, தமது இராணுவத்தின் மீதோ உடனடியாக வரப்போவதில்லை என்பதைப் புரிந்து கொள்ள அரசுக்கு முடியும்.

ஆனால் இவைபற்றியெல்லாம் யாரும் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை.

யுத்தத்தை மட்டும் இத்தனை இழப்புகட்கு பின்னும் மீளத் தொடரத் தொடங்கியுள்ளது அரசாங்கம்.

வடக்கில் ஷெல்லடிகள் மூலம் நாளுக்கு நாள் மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மட்டக்களப்பில் புலிகளின் பேரால் பகிரங்கமாக மக்கள் கூடுமிடங்களில் ஆயுதப்படையினர் குண்டு வைப்பது சாதாரணமாகி விட்டது. யுத்தத்தைத் தொடர்வதற்காக மேலும் மேலும் ஆயுதங்களை வாங்கிக் குவிக்கும் முயற்சிகள் தொடர்கின்றன.

ஆக, மொத்தத்தில் அரசாங்கம் செய்வதெல்லாம், தெட்டத் தெளிவாக தெரிந்து கொண்டே செய்கின்ற செயல்கள் தான் என்பது வெளிப்படை.

அப்படியானால், இந்த அரசாங்கமும் முன்னைய ஐ.தே.க.அரசாங்கம் போல, தமிழர்க்கெதிராக யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளதாகச் சொல்லலாமா?

ஜனாதிபதி அவர்கள் இதற்குப் பதில் சொல்வார்களா?



# திருமலையிலும் புலிகளின் இனச்சுத்திகரிப்பு ஆரம்பம்?

ஓகஸ்ட் மாதம் 28ம் திகதி திருமலை -புல்மோட்டை வீதியிலுள்ள பெரியகுளம் பொலிஸ் காவலரண் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்ந்த அசம்பாவிதங்களினால் அங்கு வாழ்ந்த மக்கள் வேறிடங்களுக்குப் புலம் பெயர்ந்துள்ளனர்.

28ம் திகதி அதிகாலை புலிகளின் தாக்குதலுக்குள்ளான பொலிஸ் காவலரணில் கடமையாற்றிய ஆறு பொலிஸார் கொல்லப்பட்டனர். மற்றும் ஐவர் கண்ணி வெடித்தாக்குதலுக்குப் பலியாகினர். இத்தாக்குதலைத் தொடர்ந்து இக்பால் நகரில் (சித்தூர்) வசித்த 225 முஸ்லிம் குடும்பங்கள் புலிகளின் மிரட்டலுக்குள்ளாகியுள்ளன. அவர்களிடம் இருந்த வாகனங்கள், பணம் மற்றும் சிறுகடைகள் என்பனவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

தற்போது அக்குடும்பங்கள் அனைத்தும் தங்கள் வீடுகளை இழந்து ஜமாலியாப் பிரதேசத்திலுள்ள தக்வாநகரில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதற்கு முன்னரும் இப்பிரதேசத்திற்கு அண்டிய பிரதேசங்களான குச்சவெளி, நிலாவெளி, புடவைக்கட்டு போன்ற இடங்களிலிருந்து வெளியேறியுள்ளனர். இம்முறை இம்மக்கள் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகியும் பொருட்கள் சூறையாடப்பட்டும் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இது திருமலை வாழ் முஸ்லீம் மக்களிடையே அச்சத்தையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது. 90களின் ஆரம்பத்தில் வெளியேறிய இம்மக்கள் மிக அண்மையில்தான் மீளக் குடியேறினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

28ம் திகதி இரவு இக்பால் நகரில் புகுந்த புலிகள் ஒரு இரவு முழுவதும் அந்தக் கிராமத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததுடன், அங்குள்ள முஸ்லீம்களில் சிலரை பொல்லுகளாலும், கம்புகளாலும், துவக்குப்பிடியினாலும் அடித்துவிட்டு ''நீங்கள் இங்கிருந்து வெளியேறுங்கள், இல்லாவிட்டால் மீண்டும் வந்து உங்களையும் தாக்கி வெளியேற்றுவோம்'' என்றும் கூறியுள்ளனர். இந்த மிரட்டலுக்குப் பயந்தே அம்மக்கள் மறுநாளே தங்கள் இருப்பிடங்களை விட்டுக் கிளம்பிவிட்டனர்.

'நாங்கள் அன்றாடம் உழைத்து ஜீவனோபாயம் நடாத்தும் ஏழை மக்கள், இனப்பிரச்சினையில் எங்களைப் பகடைக் காய்களாக இந்த அரசும் -புலிகளும் பாவிக்கிறார்கள். அத்துடன் புலிகள் ஒருபுறம் தமது தாயகத்துக்காகப் போராடும் அதேவேளை பாமரமக்களான எங்களையும் தாக்குகிறார்கள் எங்கள் சொத்துக்களையும் கொள்ளையடிக்கிறார்கள். இது -புலிகள் முஸ்லீம்கள் மீது பாரிய இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையை மேற்கொள்கிறார்கள் என்பதை உணர்த்துகிறது. உண்மையில் நாங்கள் புலிகளின் போராட்டத்திற்கு ஒருபோதும் தடையில்லை. ஆனால் எங்களை எமது சொந்த தாயகத்தில், எங்கள் சொந்தமண்ணில், அமைதியாக, நிம்மதியாக வாழவிடுங்கள் என்றுதான் கேட்கிறோம். அத்துடன் புதிய அரசு ஆட்சிபீடமேறி இந்த நாட்டில் சமாதானத்தையும், சுபீட்சத்தையும், சௌஜன்யத்தையும் ஏற்படுத்தும் என்றுதான் நினைத்திருந்தோம். ஆனால் புதிய அரசுமீது தற்போது நாங்கள் பூரணமாகவே நம்பிக்கையிழந்து விட்டோம். அத்துடன் இந்தப் பிரச்சினையில் எங்களைப் பலிக்கடாக்களாக ஆக்க வேண்டாம்.., எங்களை பலஸ்தீனியர்களாக ஆக்க வேண்டாம்... என்றும் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்...'' என்றார்.

மேற்குறித்த சம்பவத்தில் பங்குபற்றிய பைஸால் என்ற இராணுவ லெப்டினன்டும் கான் என்பவரும் ஒரு தமிழ்ப் பெண்ணைப் பாலியல் வல்லுறவு செய்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்பது பிந்திய செய்தியாகும்.

நிகழ்ந்த சம்பவங்களைப் பார்க்கும் போது வழமைபோல் இருதரப்பிலும் அப்பாவி மக்களே பலியாகி வருகிறார்கள் என்பது தெரியவருகிறது. புலிகள் இராணுவத்தை தாக்கும்போது இராணுவத்தினரால் அப்பாவி தமிழ் மக்களும், புலிகளால் அப்பாவி முஸ்லீம் மக்களுமே தாக்குதலுக்குள்ளாகிறார்கள். முஸ்லீம்மக்கள் சில இடங்களில் இராணுவத்தினதும் புலிகளதும் அச்சுறுத்தலை ஒரே நேரத்தில் எதிர் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இதற்கு புல்மோட்டைச் சம்பவம் நல்ல உதாரணமாகும்.

வடக்கில் ஒரு பாரிய யுத்தத்திற்கு அரசபடைகள் தயாராகி நடத்திக் கொண்டிருக்கும் இவ்வேளை, கிழக்கில் புலிகள் குறிப்பாக திருமலையிலிருந்து ஒரு பாரிய இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையினை முஸ்லீம்கள் மீது கட்டவிழ்த்துவிட்டு அதை மெல்ல மெல்ல நிறைவேற்றி வருகின்றார்கள் என்பதை உணரக் கூடியதாகவுள்ளது.

எனவே முஸ்லீம்களும் வடகிழக்கில் தமக்கேயுரிய பாரம்பரியப் பூமியினையும், நிலபுலங்களையும் கொண்டு அவர்களுடைய ஜீவனோபாயத்தை எதுவித பிரச்சினைகளுமின்றி நடாத்துவதற்கும், →15

### புலிகளால் பறித்துச் செல்லப்பட்ட வாகனங்களும், பொருட்களும் அவற்றின் உரிமையாளர்களும்

| இல | பெயர் | பொருட்களின் விபரம் | |
|---|---|---|---|
| 1. | எம். எஸ் மக்பூல் | SUZUKI- | 127-7997 |
| 2. | எம். எம். ஏ நஸீர் | MD 90 | 93-9954 |
| 3. | ஏ. பீ. இஸ்மாயில் | M D 90 | 127-8225 |
| 4. | உசனார் சலீம் | M D 90 | 130-2396 |
| 5. | ஏ. எம். ஹஸன் | Mate 50 | 117-8050 |
| 6. | எம். எம். செய்யத் முஹம்மத் | M D 90 | 131-8434 |
| 7. | ஏ. எல். எம். ஹஸன் | M D 90 | |
| 8. | பி. எம். கே. முஹம்மத் | ட்ரக்டர் | 36-3086 |
| | | ட்ரக்டர் பெட்டி | 44-7089 |
| 9. | எம். எம். ஏ. ஹப்பார் | வான் (இது 30ம் திகதி காட்டுப்பகுதியில் இராணுவத்தினரால் கண்டு பிடிக்கப்பட்டு தற்போது அவர்களால் பாவிக்கப்படுகிறது.) | |
| 10. | யு. நளீம் | கடை 25.000/= பெறுமதியுள்ளது | |
| 11. | எச். எல். எம். லெப்பை | கடை 20.000/= பெறுமதியுள்ளது | |
| 12. | மீரா யூனூஸ் | கடை 20.000/= பெறுமதியுள்ளது | |
| 13. | பி. பக்கீர் மொஹிதீன் | கெசட் செட் | |
| 14. | எஸ் எச். ராஸிக் பரீத் | கெசட் செட் | |

இது இவ்வாறிருக்க இச்சம்பவங்கள் நடந்த மறுநாள் (30ம் திகதி) கஜாப்தீன், பைஸால் என்கின்ற முன்னாள் புலிகளும், தற்போதைய இராணுவத்தினருமான இருவரும் பூபாலப்பிள்ளை தேவராஜா என்பவரை தாக்கியுள்ளனர். அத்துடன் அன்றையதினம் கோணேசபுரம், பெரியகுளம் பகுதிகளில் வந்திறங்கிய ராணுவம் தமிழ்க் குடும்பங்களை மிரட்டியுள்ளது. இம்மிரட்டலுக்குப் பயந்த அவர்களும் அதாவது சுமார் 67 குடும்பங்கள் தற்போது மூன்றாம் கட்டை முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்